# ஞானச்சுடர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது**
**இன்னுயிர் நீக்கும் வினை.**

**பொருள் :** கொலையைச் செய்யாவிடின் தனது உயிர் நீங்கிப் போமாயினும், மற்றொரு பிராணியின் இனிய உயிரைக் கொல்லுதல் ஆகாது. (தன்னைக் கொல்லவந்த பசுவையும் கொல்லுதல் ஆகாது என்பது போல்) (327)

**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கங் கடை.**


**பொருள் :** கொலை செய்வதால் செல்வம் உண்டாகக்கூடியதாய் இருந்தாலும் அது கொலையினால் வருதலால் அறிவுடையோர்க்கு அது இழிவுடையதாகவே காணப்படும். (328)

# நற்சிந்தனை

***மறப்பேனோ குருநாதன் தன்னை***

## சிவசிவ என்னச் சிவகதியாமே

**கலிவிருத்தம்**



சிவபக்தி யாலே சிந்தை குவிந்தது
சிவபக்தி யாலே சிந்தை தெளிந்தது
சிவபக்தி யாலே சிந்தை யிறந்தது
சிவபக்தி யாலே சீவன் முத்தியே 05

சிவனையல் லாமல் தேவரு மில்லை
சிவனையல் லாமல் சீவரு மில்லை
சிவனையல் லாமல் தேகமு மில்லை
சிவனையென் சித்தத்துட் கண்டுகொண் டேனே 06

நகரத் துள்ளே நான்முக னானான்
மகரத் துள்ளே மாலவ னானான்
சிகரத் துள்ளே சிவனாய் நின்றான்
வகரத் துள்ளே யருள்வடி வானா னே 07

சிவசிவ என்று சிந்திப்பர் தேவர்
சிவசிவ என்று சிந்திப்பர் சீவர்
சிவசிவ என்று சிந்திப்பர் முனிவர்
சிவசிவ என்னச் சிவகதி யாமே 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 284

2021 பொருளடக்கம் ஆவணி


| | | |
|---|---|---|
| கல்வி அழகே அழகு | சி. நற்குணலிங்கம் | 01 - 04 |
| திருவாசகம் | சு. அருளம்பலவனார் | 05 - 08 |
| தோஷங்கள், துன்பங்கள்... | த. செல்வசோதி | 09 - 11 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 12 - 16 |
| திருமந்திரம் காட்டும் வாசி | கு. சிவபாலராஜா | 17 - 20 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 21 - 22 |
| மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி... | மூ. சிவலிங்கம் | 23 - 26 |
| கருணை பொலியும்... | கே.எஸ். சிவஞானராஜா | 27 - 28 |
| பிரார்த்தனை | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 29 - 30 |
| பேராசிரியர் கலாநிதி... | கௌ. சித்தாந்தன் | 31 - 35 |
| எங்கே நிம்மதி | வி.ரி. வேலாயுதம் | 36 - 37 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 38 - 39 |
| சைவர்கள் தனித்துவமான... | கு. சோமசுந்தரம் | 40 - 43 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 44 - 46 |
| அறிவைப் பெருக்கும்... | க. மதுஷன் | 47 - 48 |
| தமிழ்ப் பெண் கவிகள் | இரா. செல்வவடிவேல் | 49 - 54 |
| புராணப்பித்தர்... | ச. லலீசன் | 55 - 56 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:

*Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.*

Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
# அருளிச் செய்த
# திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்களே சத்த தாதுவா - வைத்த 61

கலையே அவயவமாக் காட்டும் அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய் - பலகோடி 62

அண்டம் உருவாகி அங்கும் சராசரமாய்க்
கண்டசக்தி மூன்றுட் காரணமாய்த் - தொண்டுபடும் 63

ஆவிப் புலனுக்கு அறிவுஅளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே - மேவ 64

வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்
தரும் அட்ட யோகத் தவமே - பருவத்து 65

அகலாத பேரன்பு அடைந்தோர் அத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும் - சுகலளிதப் 66

பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்கும் திருநாடும் - பாரின்பம் 67

எல்லாம் கடந்த இருநிலத்துள் போக்குவரவு
அல்லாது உயர்ந்த அணிநகரும் - தொல்லுலகில் 68

ஈறும் முதலுமகன்று எங்குநிறைந்து ஐந்தொழுத்தைக்
கூறி நடாத்தும் குரகதமும் - ஏறுமதம் 69

தோய்ந்து களித்தோர் துதிக்கையினால் பஞ்சமலம் காய்த்த
சிவஞானக் கடாக்களிறும் - வாய்த்தசிவ 70

பூரணத்துள் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துள் கட்டு நறுந்தொடையும் - காரணத்துள் 71

ஐந்தொழிலும் ஓவாது அளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும் - சந்ததமும் 72

நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போல்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும் - தேக்கமழ்ந்து 73

வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெற்றோனே - தேகதிகழ் 74

பூங்கயிலை வெற்பில் புனைமலர்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி - ஆங்கொருநாள் 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்



நல்லூர்க் கந்தன் "அலங்காரக் கந்தன்" என்று போற்றப்படுபவன். விழாக் காலங்களில் - காலையும் மாலையும் வேளைக்கொரு அலங்காரத்துடன் பக்தர் களுக்கு அருள்பாலிப்பவன் அவன்.

இந்த அலங்காரத்தினை தனது நேரடி மேற்பார்வை யிலேயே கண்காணித்து வந்தவர் மறைந்த இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள்.

1929 ஜனவரி 15ஆம் தேதி பிறந்த மாப்பாண முதலியார் அவர்கள் தமது 92ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

1964 டிசம்பர் 15 முதல் மறைவு வரை கோவிலின் நிர்வாக அதிகாரியாக இருந்து வழிநடத்தியவர் இப் பெருமகனார்.

இயல்பாகவே முருகப்பெருமான் மீதிருந்த தீராத பக்திப் பெருக்கமும், நேர்த்தியான அப்பழுக்கற்ற நிர்வாகத் திறமையும் நாளும் பொழுதும் இடம்பெற்று வந்த ஆலய விஸ்தரிப்புக்கும் - இன்றைய கோவிலின் பிரமாண்ட அழகிய தோற்றத்திற்கும் காரணமாக அமைந்தது.

பலபக்க கோபுரங்களும், கோபுர வாசலுக்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள திருவாசி வடிவிலான வில்லு மண்டபமும் இவரது சிந்தனைக்கும் செயற்திறமைக்கும் எடுத்துக்காட்டாகும்.

கேணிக்கும் கோவிலுக்கும் இடைப்பட்ட வீதி கோவிலுடன் இணைக்கப்பட்டு- கோவில் முழுமைபெற்ற பெருங்கோவிலாக மாற்றம் பெற்றமையை இன்றைய தலைமுறையினர் அறியாவிட்டாலும், மறைந்த மாப்பாண முதலியாரின் காரியத் திறமைக்குக் கிடைத்த பெரு வெற்றி ஆகும்.

ஒரு ரூபாவுக்கு அர்ச்சனைச் சீட்டு நடைமுறை, குறைந்த கட்டணத்தில் உருத்திரா அபிஷேகம் - சண்முக அர்ச்சனை ஆகியவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டு வருவதைப் பார்க்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி ஒரு மனிதனாக முடிவுகள் எடுக்கும் திறமையும் அதனை விடாமல் நடைமுறைப்படுத்தும் துணிவும் மாப்பாண முதலியாருக்கே உரியவை.

அந்நாளில் இருந்துவந்த பிரமுகர்களுக்கான வரவேற்பு உபசாரங்கள் நிறுத்தப்பட்டு, முருகன் சந்நிதியை நாடி வருகின்ற அனைவரும் சமம் என்கிற நடைமுறையினை இன்றுவரை நிறைவேற்றி வந்தமை இவரது துணிச்சலுக்கு உதாரணமாகும்.


ஆலயத்தின் சிவாச்சாரியார்கள், அந்தணர் பெருமக்கள், பணியாட்கள், தொண்டர்கள், பக்தர்கள் வரை அனைவருக்கும் உரிய கட்டுப்பாடுகள், நடைமுறைகள், ஒழுங்குகள் விதிக்கப்பட்டு முருகன் வழிபாடு ஒன்றையே முதன்மைப்படுத்தி வருகின்றமையானது அன்னாரது 53 வருட நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாகும்.

இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களின் மறைவானது நேர்த்தியான திட்டமிடலுக்கும், பக்திபூர்வமான வழிநடத்தலுக்குமான இழப்பாகும். சுருங்கக் கூறின் சைவ உலகம் முழுவதற்குமான பேரிழப்பாகும்.

அன்னார் முருகன் திருப்பாதங்களில் இளைப்பாற நாமும் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சண்டிலிப்பாய் துர்க்கா மரக்காலை உரிமையாளரான இ. இராசநாயகம் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பித்த காலம் முதற்கொண்டு 05.10.2021 அமரத்துவம் அடையும்வரை ஆச்சிரமத்தில் மேற்கொள்ளும் சகல பணிகளுக்கும் தன்னாலான ஆதரவை வழங்கியதோடு தனது அனுபவ ஆற்றல்மூலம் எம்மை வழிநடத்திச் சென்ற ஒரு பெருந்தகையாளர். அமரரின் ஆத்மா சந்நிதி வேலவனது பாதாரவிந்தங்களில் சாந்தி பெறவும் வேலவனை வேண்டுவ தோடு எமது ஆறாத் துயரினை வெளிப்படுத்துகின்றோம்.



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த இலவச வைத்திய சேவைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல ஆண்டு காலமாகச் செயற்பட்டு வருபவரும், மீசை டொக்டர் என அழைக்கப்பட்டு வருபவருமான திரு சிவயோககுரு அவர்களின் பாரியார் பாக்கியலட்சுமி சிவயோககுரு அவர்கள் 27.10.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவர்களின் ஆத்மா சந்நிதியானின் பாதாரவிந்தங்களில் நிரந்தரமாக இளைப்பாறப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*-சந்நிதியான் ஆச்சிரமம்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. ஆனந்தகுமார்**

(லண்டன்)

**Dr. G. பவானி**

(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr திருமதி பத்மராணி குகானந்தன்**

(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S.S. ரஜீந்திரன்**

(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**சி. சிவமூர்த்தி**

(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**அ. சிவகுமார்**

(யாழ்ப்பாணம்)

**A. நாகரெத்தினம்**

(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**இ. குமாரசாமி J.P.**

(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**பொ. குமாரசாமி**

(சட்டத்தரணி, நவிண்டில்)

**திருமதி கௌரி சுரேசன்**

(ஆசிரியர், ஆவரங்கால்)

**செ. கந்தசாமி**

(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா. சிவசிதம்பரம்

(கோணாவளைலேன், கொக்குவில்)

இராசையா தங்கவேல்

(அச்சுவேலி)

S. அருளையா

(கொழும்பு)

ச. பத்மநாதன்

(தெற்குத் தோப்பு, புத்தூர்)

க. தெய்வேந்திரம்

(பண்டத்தரிப்பு)

தே. தேவராஜேந்திரன்

(திகிரி லேன், தும்பளை)

பொ. நாகலிங்கம்

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

முத்து கணேஷ்

(மஞ்சத்தடி, இணுவில்)

K. கஜமுகன்

(இராசவீதி, நீர்வேலி)

செ. சிவலிங்கம்

(மலர் வசந்தம், இணுவில்)

N. ஜெயரட்ணராசா

(பண்ணாகம், சுழிபுரம்)

சி.து. கலைச்செல்வம்

(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

தலைவர்

(வாழ்வகம், சுண்ணாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வை.ச. பரஞ்சோதி**

(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

**ச. ஸ்ரீவிவேகானந்தராசா**

(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

**சீ.சி. கந்தையா (பலாலி)**

(ஆவரங்கால்)

**சி. முருகதாஸ்**

(சிறுப்பிட்டி தெற்கு)

**T. தியாகலிங்கம்**

(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)

**S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்**

(மானிப்பாய் தெற்கு)

**இ. தயாபரன்**

(கோண்டாவில்)

**S. சாம்பவி**

(யாழ்ப்பாணம்)

**செ. தர்மலிங்கம்**

(சாவகச்சேரி)

**திருமதி தி. பரமேஸ்வரி**

(ஆனைக்கோட்டை)

**S. பொன்னம்பலம்**

(சுண்ணாகம்)

**ப. திருக்குமரன்**

(அமுதசுரபி, கட்டுடை)

**சி. நவரெத்தினம்**

(ஆனந்தா வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. சுப்பிரமணியம்**

(சமரபாகு, உடுப்பிட்டி)

**சிறீ மாதவன்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**ந. பொன்னுத்துரை**

(தொம்பை வீதி, உடுவில்)

**ச. திவாகரன்**

(உரும்பராய் மேற்கு)

**க. சச்சிதானந்தன்**

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**நா. மகேந்திரராசா**

(பிறேம மகால், வல்வெட்டி)

**சு. சிவராசா**

(கொக்குவில்)

**வ. சிவலிங்கம்**

(குருபரன் தொலைத் தொடர்பு நிலையம், கரவெட்டி)

**கா. அருளானந்தன்**

(அராலிவீதி, சங்கானை)

**பத்மநாதன் குணசுந்தரி**

(ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)

**ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம்**

(அச்சுவேலி)

**வே. இராஜேந்திரா**

(ஆவரங்கால்)

**ச. மார்க்கண்டு**

(ஊரெழு மேற்கு)

**திருமதி கமலஹாசன் மஞ்சுளா**

(வல்வெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அழகே அழகு

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

கல்வி என்பது ஐம்புலனை வழி நடத்துவது, கண்ணில் பார்வை தருவது, மிருகத்திலிருந்து நம்மைப் பிரிப்பது, காதில் தெளிவு தருவது, கடலையும் வானையும் கைக்குள் கொண்டுவருவது. ஆறாம் அறிவை அடையாளப்படுத்துவது. முழுமையாக மனிதனைப் புனிதமாக்குவது. காட்டில் தோன்றிய எம்மை நாட்டில் வாழ வைப்பது. கல்வி என்பது மனிதனுக்கு அறிவூட்டும் ஒளி விளக்குப் போன்றது. மனிதனிடத்தில் உள்ள அறியாமையைப் போக்கி நல்வழி காட்ட வல்லது.

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்கிறது திருக்குறள். கல்வி அறிவில்லாதவன் கண்கள் இருந்தும், கண்கள் அற்றவன் எனக் கருதப்படுவான். கல்வி என்பது வாழ்க்கையின் வழிகாட்டி. உங்களால் இந்த உலகை மாற்றப் பயன்படுத்த முடிந்த மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி. ஒரு தனிநபரின் ஆரோக்கியத்துக்கும் சமூகத்தின் ஆரோக்கியத்துக்கும் இன்றியமையாத செல்வம் கல்வி. கல்வி என்றால் வெறும் நூல்களைக் கற்றல் இல்லை என்பதை தனது மகன் தொடர்பாக ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தின் ஒவ்வொரு வரியிலும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறார் ஆபிரகாம் லிங்கன்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றையவை" என்பது வள்ளுவம். கல்விதான் உயர் செல்வம், கல்விதான் உலகு, கல்விதான் உயர்நெறி, கல்வி என்பது ஒரு வழிமறை, ஒரு நெறி ஆகும். கல்வி என்பது வாழ்க்கை வாய்ப்புக்களை வழங்கும் ஒரு வலிமையான வழி ஆகும். "மனிதனுள் ஆழ்ந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி" என்றார் சுவாமி விவேகானந்தர். கல்வி என்பது உடலில் இருந்தும் உள்ளத்திலிருந்தும் ஆன்மாவிலிருந்தும் நல்லவற்றை வெளியே கொண்டு வருவதற்கு உதவுகின்றது என மகாத்மா காந்தி கல்விக்கு விளக்கம் அளித்துள்ளார். கல்விபற்றி தாகூர் கூறுகையில், "பண்பாடுள்ள இலட்சிய வாழ்க்கை வாழ்வதற்கு கல்வியே அடிப்படை" என்றார். கல்வி பற்றி விளக்கமளித்த காந்தியடிகள் "கல்வியானது மக்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும், அதனைக் குழந்தைகளின் ஆளுமைக் கூறுகளின் சிறந்த பண்புகளை வெளிக்கொணரும் செயன்முறை எனக் கூறியுள்ளார். நல்லொழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்குவதே கல்வி" என்றார் பிளேட்டோ. பரிபூரண கல்வியே உலக விடியலுக்கு வழி என யுனெஸ்கோ எடுத்தியம்புகிறது. கல்வி என்பது ஒரு செயலல்ல. அது ஒரு பழக்கம் என்கிறார் அரிஸ்ரோட்டீஸ். Education என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் வெளிக்கொணர்தல் எனக் கல்வியை வரையறுத்தனர் ஆங்கிலேயர்.

அறிவுடையார் வேறொன்றும் இல்லாதிருப்பினும் எல்லாம் உடையவராகிறார். அறிவு இல்லாதோர் வேறு செல்வங்கள் உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுகிறார் என்கிறார் வள்ளுவர். இதை அறிவுடையார் எல்லாம் உடையார்

*துன்பங்களைக் கண்டு அஞ்சாமல் இருப்பதே விரைவான முன்னேற்றத்திற்கான வழியாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிலார் என்னுடையரேனும் இலர் எனக் கூறியுள்ளார்.

மனிதன் தனது வாழ்க்கையை உரிய விதிமுறைகளுக்கு அமைவாகவும் சுய ஒழுக்கங்களுடனும் வாழ்வதற்கு கல்வி அறிவானது அவசியமான ஒன்றாகும். கல்வித் துறைக்கு முக்கியத்துவம் அளித்து முன்னேற்றம் அடையச் செய்யும்போது அதனை அடிப்படையாகக்கொண்டே ஏனைய துறைகளும் விரைவான வளர்ச்சியை அடைந்து கொள்ளும். "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் இரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என வள்ளுவர் கல்வியின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார். கல்விக்கான தேவையும் அதன் வடிவமும் ஏனைய வரலாற்றுக் காலங்களைவிட மானிட மேம்பாட்டை உறுதிப்படுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. உயர் பண்புகள், கலாசார விழுமியங்கள், சமூகப் பெறுமானங்கள் யாவும் கல்விக்கூடாகவே பெறப்படுகின்றன. கல்வியே ஒருவரின் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் கருவியாகும்.

கல்வியின் வேர்கள் மிகவும் கடினமானவை. ஆனால், அதன் பழம் இனிமையானது. இந்த உலகில் கல்வி அழகைக் காட்டிலும் உயர்ந்த அழகு வேறெதுவும் இல்லை. இதனையே நாலடியார் "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல; நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால் கல்வி அழகே அழகு" என்றார். ஒருவன் கருவிலிருந்து கல்லறை வரைக்கும் கற்கிறான் என்று சொல்லப்படுவதில் கல்வி தோன்றா எழுவாயாகத் தோன்றி நிற்பதும், வாழ்வின் ஆரம்பத்தில் இருந்தே கல்வியின் முக்கியத்துவம் உணரப்படுவதையும் இதிலிருந்து அறியலாம். மனித வாழ்வியலில் கல்வியே உயர்ச்சியுடையது. அனைத்துவித இன்பத்தையும் தருவது கல்வியே ஆகும் என நாலடியார் கூறுகிறார். மனிதவள அபிவிருத்தியில் கல்வியறிவுடையோரின் பங்களிப்பு எப்போதுமே அதிக பயனைத் தரும். இதனை எச்சவிளைவு என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கல்வியில் முதலீடு செய்கின்ற ஆற்றல் அதிகரிக்கின்ற போது மனிதவளம் அபிவிருத்தியடையும். அதன்வழி பொருளாதார அபிவிருத்தி மட்டம் உயர்நிலையை அடைந்து பொருளாதார உறுதித்தன்மை அதிகரிக்கும். இத்துடன் கல்வி அறிவைப் பெறுவது நல்ல மனப்பாங்குடன் வாழ்ந்து, நல்ல தொழில் வாய்ப்பைப் பெறுவதற்குமானது என்பதையும் மனம் கொள்ளவேண்டும்.

கற்றல் கற்பனைச் சக்தியை வளர்க்கிறது. கற்பனைச் சக்தி சிந்திக்கும் திறனைத் தூண்டுகிறது. சிந்தனை அறிவை வளர்க்கிறது. அறிவு உன்னை மகான் ஆக்குகிறது என்றார் அப்துல்கலாம். வாரத்துக்கு ஒன்றிரண்டு விளையாட்டு நேரம், வருடத்துக்கு ஒரு சுற்றுலா என்பதைக் கடந்து பயிற்சி வழி, படிப்பு, உலா வந்து உவகையுடன் கல்வி என்பதே மாணவர் திறனை வளர்க்க உளவியல் சொல்லும் தீர்வு. கற்றல் என்ற விடயம் நீண்டகாலமாக மனித வாழ்வோடு பிணைந்து காணப்படும் ஒரு செயற்பாடாகும். மனித வாழ்க்கையின் மையப் பொருளாக கற்றல் அமைந்துள்ளது. கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து கற்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான். நண்பர் ஒருவர் ஆபிரகாம் லிங்கனிடம் "படிப்பதால் பணம் கொட்டப் போவதில்லை. பின் ஏன் நீங்கள் எப்போதும் எதையாவது படித்துக்கொண்டே இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு லிங்கன் "நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை. பணம் வரும்போது எப்படிப் பண்போடு வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவே

படித்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். எதையும் கற்றுக்கொள்வதற்காக வெட்கப்படாதீர்கள். என்றேனும் ஒருநாள் தெரியவில்லை என்பதற் காக அவமானப்பட நேரிடும்.

மாறிவருகின்ற நவதாராளமய உல கிலே தனி மனிதனின் வளர்ச்சியில் இருந்து நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சி நிலைகளைத் தீர்மானிக்கும் அம்ச மாக கல்வி விளங்குகிறது. அறியாமையை அடியோடு நீக்கியருளி, அறிவுப் புலனைப் பொங்கியெழச்செய்து அனைவரையும் வாழ் விக்கச் செய்வதில் கல்வி எனும் அருமருந்து தனிச்சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. நன்மை தருவதும், கொடுக்கக் குறையாததும், அறம் செய்வதும், ஆற்றுப்படுத்துவதும், ஆறுதல் அளிப்பதுவும், ஆணவம் போக்குவதும், அரசனாவதும், அடாவடிகளை நல்வழிப் படுத்துவதும், சரி எது பிழை எது என்று தீர்மானிப்பதும், தீர்ப்புச் சொல்வதும், தீயார் நட்பை ஒட்ட நறுக்குவதும், மாற்றானைச் சிந்திக்க வைப்பதும், கல்வி எனும் நல் வித்தையே. கற்றவர்கள் எந்த மூலை முடக் கில் இருந்தாலும் அவர்கள் மேலிடத்தில் வைத்து மதிக்கப்படுவார்கள். கல்வி ஒருவனை நீடித்த ஆயுளோடு வாழ வைக்கும் தன்மை யைக் கொண்டுள்ளது. கல்வி என்றும் கடவு ளின் அருள் போன்று பிரவாகிக்க வல்ல பொக்கிசமாகத் திகழ்கிறது. எவராலும் கவர்ந்து செல்லமுடியாத உயர் பண்பியல்பை உடை யது. அதனைக் கொடுக்க மட்டுமே முடியும். எப்படிக் கொடுத்தாலும் இல்லாமல் போகாத அழிவற்ற ஆயுதம். எனவே கற்றுக்கொண்ட வன் வாழ்வில் ஜெயிக்கிறான். கற்றுக் கொள்ளாதவன் வாழ்வில் தவிக்கிறான்.

கல்வி என்பது அறிவூட்டும் ஒளி விளக்குப் போன்றது. கல்வி ஒளியே ஒளி. மனிதனை மனிதப் பண்புள்ளவனாக மாற்று வது கல்வியாகும். உடல், அறிவு, உணர்ச்சி என்பவற்றைச் சீரான முறையில் இயங்கச் செய்து தனது குடும்பம், சமூகம் என்பவற்றை முன்னேற்ற கல்வி அறிவு அவசியம். கல்வி யானது புதிய விழுமியம் உடையதாகவும், மனித தத்துவத்தை வளர்ப்பதாகவும், முழு மனிதனை தோற்றுவிப்பதாகவும் அமையும். "ஒரு முட்டாள் தன் நண்பர்களைப் பயன் படுத்துவதைவிட ஒரு அறிவாளி தன் எதிரி களை நன்றாகப் பயன்படுத்திக்கொள்கின் றான்" என்கிறார் பல்டசர்கிரியேசன். கல்வியின் மூலம் மொழித்திறன், பிறர் சொல்வதை புரிந்துகொள்ளும் ஆற்றல், பிறர் சொல்லுக்கு ஏற்ப செயற்படும் திறன், பிறருடன் பரஸ்பர புரிந்துணர்வுடன் பழகும் திறன், விடயங்களை உன்னிப்பாகக் கவனிக்கும் திறன், சூழலுடன் இயைந்து நடக்கும் பண்பு, தலைமைத்துவப் பண்பு, திட்டமிட்டு கருமமாற்றும் இயல்பு போன்ற பல்வேறு நல்லியல்புகள் வளர்ச்சி அடையும். இவை வாழ்க்கையை சுமையில் லாது சுவையாக வாழவும் உதவும்.

கல்வி மனப்பாங்குகளை விருத்தி செய்ய, அத்தியாவசியமான சமுதாயக் குறிக்கோளை சாதித்துக்கொள்ள, ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் கழிக்க, உளநலம் ஏற்பட, ஆளுமை விருத்தி ஏற்பட, இலங்கை நாட்டின் அடையாளத்தின் பங் காளர்களாக திறமைமிக்க பிரசைகளை உரு வாக்க, சவர்வதேச சமூகத்தின் வெற்றியை நோக்கிய இலக்கை எட்ட கல்வி அவசியம். கல்வி வெளியீடும், நடத்தை மாற்றமும் கல்வியின் முக்கிய தூண்களாகும். இன்று அறிவு மையச் சமூகம் என்பது முக்கியத் துவம் உடையதாக மாறியுள்ளது. எனவே இந்த அறிவு மையச் சமூகத்தில் வாழவும், செயலாற்றவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி அவசியமாகின்றது. சமகாலச்

*ஒழுக்கமே உனக்கு நீயே போடும் நல்ல பாதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்களை வெற்றிகொள்வதற்கும், உள் நாட்டு இனத்துவ கலாசார அடையாளங் களைப் பாதுகாப்பதற்கும் உறுதுணையாக விளங்குவது கல்விதான். ஒரு குடும்பத்தின் வறுமையை மட்டுமல்ல- நாட்டின் வறுமையை அழிக்கக்கூடியதும் கல்விதான்.

நல்ல அறிவு சார்ந்த பண்பாடு கூடிய வாழ்க்கை வாழ்வதுதான் வாழ்வின் இலட்சிய மாகும். ஒரு மனிதன் வாழ்வில் தவறு செய் வதற்கு அடிப்படைக் காரணம் அறியாமை ஆகும். சமூகத்தில் கல்வி அறிவு குறைந் தமையாலும், கல்வி விழிப்புணர்ச்சி குறைந் தமையாலும் பல சீர்கேடுகளும், வறுமை களும், குடும்பப் பிரிவுகளும், நெறிபிறழ்வான நடத்தைகளும், கலாசாரச் சீர்கேடுகளும், சீரற்ற பண்பாடுகளும், சமூகத்துக்கு ஒவ்வாத வார்த்தைப் பிரயோகங்களும், எங்கு எதைப் பேசுவது? எங்கு எப்படி நடந்து கொள்வது? என்பதைப் புரிந்துகொள்ளாமையால் பல இழி செயல்களையும் புரியும்படி நேரிடுகின்றது. கல்வியின் சிறப்பை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தால் மட்டுமே "கல்வி அழகே அழகு" என்பதை அறிந்து புரிந்து அதன் வழி ஒழுக வும் முடியும். அதன்வழி ஒழுகுவதே மேலும் கல்விக்கு அழகு.

## வாழ்வே பிச்சை

நாம் வாழும் வாழ்க்கை யாரோ எவரோ, தெரிந்த, தெரியாத நபர் வழங்கிய பிச்சையாகும் ஆனால், அதை நாம் துளியேனும் நினைவில் வைத்துக்கொள்வதில்லை.

நம்மிடம் யாராவது கடன் கேட்டு வந்தாலும், உதவி என்று கேட்டு வந்தாலும், அவரை நாம் ஏளனமாகவே பார்க்கிறோம். அவர்களை அடிமைகளாகவே நடத்த முயற்சிக்கிறோம். அவ்வாறு செய்தால் அது ஒரு மிகப்பெரிய பாவமாகும் நாம் உழைப்பதே, ஒரு வேளை உணவு வயிறாற உண்டு மகிழவேண்டும் என்பதற்காகத்தான். தற்போது சொகுசாக வாழ்வதற்காகவும் வீண் தற்பெருமைக்காகவும் பேயாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். உழைத்தாலும் பரவாயில்லை. வியர்வையே வராமல் குறுக்கு வழியில் சம்பாதிக்க ஆசைப்பட்டு பெரும் பள்ளத்தில் விழுகிறார்கள். இதெல்லாம் தேவைதானா?

இவ்வாறான பணக்காரர்கள் தெருவில் ஒரு பிச்சைக்காரனைப் பார்த்தால், பத்து ரூபாய்கூட போடமாட்டார்கள். பார்க்கக்கூடாததைப் பார்த்தது போல பத்தடி தூரம் சென்றுவிடுவார்கள். நாம் தெருவில் காணும் பிச்சைக்காரர்கள் நம்மைப்போல நன்றாக வாழ்ந்த மனிதர்களே. குடும்பத்தவர்களால் கைவிடப்பட்ட நிலையில் பிச்சைக்காரர்களாக உலாவும் பாவப்பட்டவர்களே.

இந்த நிலை நாளை நமக்கும் வராது என நம்மால் உறுதியாகச் சொல்லமுடியுமா? நாம் அவர்களைப்போல் ஆவதற்கு ஐந்து நிமிடங்கள் கூட ஆகாது. மானிடா! மனதில் வைத்துக்கொள். இன்று மற்றொருவருக்கு நடக்கும் விடயம் எதிர்காலத்தில் உனக்கும் நடக்கலாம் நாளை நீயும் ஏழையாக மாற வாய்ப்பிருக்கிறது. அதனால் உன்னால் முடிந்த சிறிய உதவிகளை செய்யப் பழகு. நீங்கள் சம்பாதிக்கும் நூறு வீதப் பணத்தில் ஒரு வீதத்தை ஏழை எளியோர்க்குக் கொடுங்கள். அது உங்கள் வயிற்றைக் காயவிடாமல் ஏழேழு ஜென்மத்துக்கும் வாழ வைக்கும்.

கட்டுக்கட்டான பணத்தை கோவிலுக்குக் கொடுத்து புண்ணியத்தைத் தேடுவதைவிட சிறு தொகையை ஏழைகளுக்கு கொடுத்து மகா புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். வாழ்வே பிச்சை.... எதற்கு இச்சை?

*எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றி இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருவாசகம்

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

137. கண்டது செய்து கருணைமட் டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டெனெந் தாய்களை யாய்களை யாய குதுகுதுப்பே.

**ப-ரை:**

என் எந்தாய்- என் தந்தையே, கருணை மட்டு பருகி களித்து- நின் அருளாகிய தேனைப் பருகிச் செருக்குற்று, கண்டது செய்து மிண்டுகின்றேனை- மனத்திற் றோன்றியதைச் செய்து நெருங்கி வன்மொழி பேசுகின்றேனை, விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். நின் விரை மலர்தாள்- நின்னுடைய நறுமணம் பொருந்திய மலர் போலுந் திருவடிகளை, பண்டு தந்தால் போல் பணித்து- முன்னர் தந்தருளியது போலத் தந்தருளி, பணி செய கூவித்து- நின் திருத்தொண்டினைச் செய்யும்படி அணுக்கன் தொண்டரால் என்னை அழைப்பித்து, என்னைக் கொண்டு- என்னை ஏற்றுக்கொண்டு, களை ஆய குது குதுப்பு களையாய்- எனது வீடுபேற்றிற்கு இடையூறாயுள்ள ஆவலை நீக்கியருள்வாயாக.

என் எந்தாய், நின் கருணையாகிய தேனைப் பருகிக் களித்து என் மனத்துத் தோன்றியதைச் செய்து மிண்டுகின்றேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். நின் திருவடிகளைப் பண்டு தந்தருளியது போலத் தந்தருளி நின் திருத்தொண்டினைச் செய்யும்படி என்னை அழைப்பித்து என்னை ஏற்றுக்கொண்டு எனது வீடு பேற்றிற்கு இடையூறாயுள்ள ஆவலை நீக்கியருள்வாயாக என்பதாம்.

கருணை மட்டுப் பருகிக் களித்துக் கண்டது செய்து மிண்டுகின்றேனை என மாறிக் கூட்டிப்பொருள் கொள்க. மட்டு- தேன். "கட்டு வடக் கழலினர் மட்டு மாலையர்" (பரி 12:24) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கருணை மட்டு- கருணையாகிய தேன். "கருணை வான் தேன்" (திருவண்ட 180) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமை காண்க. பருகி என்றார் மிகக் குடித்தமை தோன்ற. களித்து கண்டது செய்து என்றது திருவருட்டேனை மிகப் பருகியமையால் களித்து செய்வன தவிர்வன இன்னவென்று அறியாமல் மனத்தில் தோன்றியவற்றைச் செய்து என்றவாறு. "உன் அருள் புரிந்தனை புரிதலுங் களித்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையினானடைந்தேன் விடைப்பாகா" (செத் 3) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. மிண்டுதல்- நெருங்கி வன்மொழி பேசுதல்.

"சிரிப்பின் சீறும் பிழைப்பைத் தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப் பீச்சனஞ் சூண்பிச்ச னூர்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப் பிச்சனென் றேசுவனே".

-நீத் 49.

"சிறிதே கொடுமை பறைந்தேன்" -சத 85.

என அடிகள் அருளியமையுங் காண்க.

விரை தாள் என இயைத்து நறுமணம் பொருந்திய திருவடியெனக் கொள்க.

"விரை சேர் சரண விகிர்தா போற்றி" -போற்றி 105.

"உன் விரையார் கழற்கு" -சத 1.

என அடிகள் அருளியமையுங் காண்க.

"வெண்ணெய்ப்பிரான் விரையார் கழல்" -ஞான 144:4.

"வீழிமிழலையான் விரையார் பாதம்" -ஞான 132:11.

"நறுமலராய் நாறும் மலர்ச் சேவடி" -நாவு 119:8.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. இனி, விரைமலர் எனக் கூட்டி நறுமணம் பொருந்திய மலர் எனினுமமையும். மலர்த்தாள்- மலர் போலுந்தாள். "அம்பலத்தோன் மலர்த்தாள்" திருக்கோவையார் 329. மலர் என்றது தாமரை மலரை.

பண்டு தந்தாற் போற் பணித்து என்றது ஆட்கொள்ளப்பட்டபோது நின்னால் தரப்பட்ட பின்னர்ப் பிரிக்கப்பட்ட திருவடிகளை மீட்டும் தந்து என்றவாறு. பணித்தல்- கொள்தல். கூவுவித்து என்பது கூவித்து எனப் பிறவினை விகுதி தொக்கு நின்றது. பணி செயக் கூவித்து என்றது நின்னைப் பிரிந்து வருத்தும் என்னை, நின் பணி செய்யும் அணுக்கன் தொண்டரால் அழைப்பித்து என்றவாறு. என்னைக் கொண்டு- என்னைப் பணி செய்வதற்குரிய ஆளாக ஏற்றுக்கொண்டு, களையா குதுகுதுப்பு- நெற் பயிருக்கு இடையூறாகத் தோன்றும் களைப்புல் போல வீடுபேற்றிற்கு இடையூறாகத் தோன்றும் ஆவல். குதுகுதுப்பு- குதுகலம் என்னும் வடசொற் பொருளைத் தரும் அடுக்குச் சொல். அன்றிக் குதூகலம் என்னும் சொல்லின் திரிபு எனலுமாம். "வெந்நாற்று வேசனை நாற்றங் குதுகுதுப்ப (பரி 20:13) என்புழி குதுகுதுப்ப- ஆசைப்படாநிற்ப பரிமேல்.

இதன் கண், "கண்டது செய்து கருணைமட்டுப் பருகிக் களித்து மிண்டுகின்றேனை விடுதி கண்டாய்" என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க.

**138. குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து நின் குறிப்பில்**
**விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரை யார்ந்தினிய**
**மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின் மனங்கனிவித்**
**தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப் பரம்பரனே.**

*நம்பிக்கையற்றவன் எந்த உலகிலும் இன்பம் காண முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ப-ரை:**

கயிலைப் பரம்பரனே- திருக்கயிலையில் எழுந்தருளியிருக்கும் மேலானவற்றுக்கும் மேலானவனே, நின் குறிப்பில் குதுகுதுப்பு இன்றி நின்று- நின் திருவுள்ளக் குறிப்பின் வழி ஒழுகுவதில் ஆசைப்படுதலின்றி நின்று, என் குறிப்பே செய்து- என் உள்ளக் கருத்தின்படியே ஒழுகிக்கொண்டு, விதுவிதுப்பேனை விடுதி கண்டாய்- வீடகத்தே புகுந்திடுவான் விரைகின்றேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். என்னை வாழைப்பழத்தின் மனம் கனிவித்து- அடியேன் மனத்தை வாழைப்பழத்தைப்போல முழுவதும் நெகிழச் செய்து, விரை ஆர்ந்து- இனிய மகரந்தத்தோடு கூடிய பூவின் தேன் ஒழுக்குப் போன்று என்னை, எதிர்வது எப்போது- எனக்கு எதிர்வந்து காட்சியளிப்பது எப்போது- எனக்கு எதிர்வந்து காட்சியளிப்பது எப்பொழுது, பயில்வி- குறிப்பினால் அருள் செய்க.

கயிலைப் பரம்பரனே, நின் திருவுள்ளக் குறிப்பின்வழி ஒழுகுவதில் ஆவலின்றி நின்று என் உள்ளக் கருத்தின்வழி ஒழுகிக்கொண்டு வீட்டகத்தே புகுந்திடுவான் விரைகின்றேனை கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். வாழைப்பழத்தினைப்போல அடியேன் மனத்தினைக் கனிவித்து, விரையார்ந்து இனிய மதுமதுப் போன்று எனக்கு எதிர் வந்து காட்சியளிப்பது எப்பொழுது? குறிப்பினால் அருள் செய்த என்பதாம்.

குதுகுதுப்பு- ஆசைப்படுதல், நின் குறிப்பில் குதுகுதுப்பில் நின்று என மாறிக் கூட்டிப் பொருள் கொள்க. விதுவிதுப்பு- மிக்க விரைவு, ஈண்டு நின் திருவுளக் குறிப்பின்வழி ஒழுகாது தன் விருப்பப்படி ஒழுகிக்கொண்டு வீடகத்தே புகுந்திட மிக விரைதலை,

“நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்”

சத 11.

என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க.

விரையார்ந்து, இனிய மதுமதுப் போன்று என்னும் உவமையை இறைவனுக்குக் கூறியது தெய்வத் திருமணமும் இனிமையும் அழகும் செந்நிறமும் பற்றியாகும். விரை- மணம் மது இரண்டிலுள் முன்னது மகரந்தம் பொருந்திய பூவை உணர்த்தியது. “மதுவுங் கிழங்கு மருந்தி யிருந்து எம்மொடு” (திருக்கோவை 127) என்புழிப்போல தேனொழுக்குப் போன்று இடையீடின்றிக் காட்சியளிக்க வேண்டும் என்பார், மதுப்போன்று எதிர்வது” என்றார். எதிர்வது- எதிர்தல். தொழிற்பெயர்.

என்னை என்னும் இரண்டாவது நான்காவதன் பொருளில் வந்தது, வாழைப்பழத்தின் மனங்கனிவித்து என்றது வித்தில்லாத வாழைப்பழத்தைப் போல என் கல்லியன் மனத்தினை முழுவதும் கனிவித்து என்றவாறு. “கல்லியன் மனத்தைக் கனிவித்து கழலடி காட்டி” சுந் 67-5. மனம் கனிவித்து என்றார், தானே மனம் கனியாமையின், நின் குறிப்பில் குதுகுதுப்பின்றி நின்று என் குறிப்பே செய்து என்பதும் இதனைப் புலப்படுத்துவதாகும். மனம் கனிந்து அன்பனாகிய நிலையில் இறைவன் காட்சியளித்தலின் மனங் கனிவித்து எதிர்வது என்றார். பயில்- குறிப்பு. பயில்வி- குறிப்பித் தருளுக என்றது குறிப்பினால் அருள் செய்க என்றபடி. இனிப் பயில்வி என்பதனைக் கயிலைக்கு விசேடணமாக்கி செறிந்த சிறப்பினையுடைய எனவும், பயில்வி எனக்குறுகி நின்றது எனக் கொண்டு நெருங்கிய பூக்களையுடைய எனவும்

*முடியாது என்பது முட்டாளின் தத்துவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைப்பாருமுளர், இறைவனுக்குக் கயிலை சிறந்த தலமாதலின் "கயிலைப் பரம்பரனே" என்றார். தில்லைத்தொல்லோன் கயிலை, "மாணிக்கக் கூத்தன் வடவான் கயிலை" எனத் திருக்கோவையாரினும் 22, 23 வருவன காண்க. மிக்க மேலேபனாதலின் இறைவனைப் பரம்பரனே என்றார். "படிதானில்லாப் பரம்பரனே" (ஆசைப் 9) என வந்தமையுங் காண்க.

இதன் கண், குதுகுதுப்பின்றி நின்றென் குறிப்பேசெய்து நின் குறிப்பில் விதுவிதுப்பேனை விடுதி கண்டாய்" என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய வுருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 34.

(தொடரும்...

## நவராத்திரி துதி

அம்மா தாயே துர்க்கையம்மா அழியா வீரம் தாருமம்மா
அம்மா தாயே துர்க்கையம்மா அல்லல் எல்லாம் தீருமம்மா
அம்மா தாயே துர்க்கையம்மா அகந்தை அழித்து அருளுமம்மா
அம்மா தாயே துர்க்கையம்மா அருளினை எமக்குத் தாருமம்மா.

அம்மா தாயே இலக்குமியே அழியாச் செல்வம் தாருமம்மா
அம்மா தாயே இலக்குமியே அவலம் எல்லாம் தீருமம்மா
அம்மா தாயே இலக்குமியே அன்புடன் எம்மை ஆளுமம்மா
அம்மா தாயே இலக்குமியே அருளினை எமக்குத் தாருமம்மா.

அம்மா தாயே சரஸ்வதியே அறிவுச் செல்வம் தாருமம்மா
அம்மா தாயே சரஸ்வதியே அறியாமை எல்லாம் தீருமம்மா
அம்மா தாயே சரஸ்வதியே அஞ்ஞானம் நீக்கி அருளுமம்மா
அம்மா தாயே சரஸ்வதியே அருளினை எமக்குத் தாருமம்மா.

கல்வி செல்வம் வீரந்தனை கருத்துடன் எமக்குத் தாருமம்மா
மூவகைச் சக்திகள் ஒன்றிணைந்து முத்தியை எமக்குத் தாருமம்மா
அன்புடன் உம்மை அடிபணிந்தோம் ஆதிசக்தியே அருள்வாயே
தீமைகள் அகன்று நன்மைபெற அருளினை எமக்குத் தாருமம்மா.

தாயே உம்மைச் சரணடைந்தோம் தயவுடன் எம்மைக் காருமம்மா
முன்வினை அகன்று நலம் பெறவே ஆதிலட்சுமியே அருள்வாயே.

~யூ.பி. ஆனந்தம்~

## குருபூசை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| செப் | 04 | ஆவ 19 | சனி | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப் | 14 | ஆவ 29 | செவ் | குங்குலியக்கலயர் |
| செப் | 20 | புர 04 | திங்கள் | கடையிற் சுவாமிகள் |
| ஒக் | 04 | புர 18 | திங்கள் | அருநந்தி சிவாச்சாரியார் |
| ஒக் | 07 | புர 21 | வியாழன் | சங்கரபண்டிதர் |
| ஒக் | 21 | ஐப் 04 | வியாழன் | திருமூலர் |

*நிதானமாக ஆலோசி. ஆனால் துணிவுடன் செயற்படு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோஷங்கள், துன்பங்கள் நீங்க - விநாயகர் - கணபதி வழிபாடும் தோஷ திருஷ்டி, கண் திருஷ்டிக்கு திருஷ்டிக் கழிப்பும்

– திரு த. செல்வசோதி அவர்கள் –

எமது சமயத்தின் முன்னவனாய் முதல் தெய்வமாய் நாம் வழிபடும் அகில உலகங்கள் யாவற்றிற்கும் முதற்காரணமாகிய பிரணவப் பொருளான விநாயகப் பெருமானை பிள்ளையார் எனவும், விக்கினங்களை நீக்குவதால் விக்னேஸ்வரன் எனவும், கணங்களிற்கெல்லாம் அதிபதி என்ற வகையில் கணபதி எனவும் வழிபட்டு வருகிறோம். கணபதியை மகாகணபதி, ஞான கணபதி, ஏரம்ப கணபதி, நிருத்த கணபதி என பல்வேறு பெயர்களில் வணங்குகின்றோம். ஆகம விதிப்படி அமைந்த விநாயகர் ஆலயங்களில் மூலமூர்த்தியாகவும், ஏனைய ஆலயங்களில் பரிவார மூர்த்தியாக தனியான ஆலயம் அமைத்து பூசையும் முதலில் இவருக்கே இடம்பெறுகிறது. ஆலயத்திற்கு வந்து வழிபட முடியாதவர்களிற்கு, உற்சவ காலங்களில் வீதியுலா வருவதற்கு விநாயகப் பெருமான் எழுந்து நின்ற வடிவத்தில் விநாயகராகவும், பஞ்சமுக விநாயகராகவும் வசந்த மண்டபத்தில் உற்சவ மூர்த்தியாகவும் அருள்பாலிக்கிறார்.

நாம் எக்காரியத்தை ஆரம்பிக்க முன் குறித்த காரியங்கள் இடையூறுகள் துன்பங்கள் இன்றி இடம்பெற வேண்டும் என இவரை வழிபட்டே தொடங்குகிறோம். இவரை அனைவரும் வழிபடத்தக்க வகையில் வீதியோரங்களிற்கு அருகில் காணப்படும் அரசமரங்கள், மருதமரங்கள், ஆலமரங்கள், மாமரங்கள் போன்ற மரங்களின்கீழ் ஆற அமர அமர்ந்திருந்து ஆகம விதியல்லாத எளிய முறையிலும் இவர் அருள்பாலிக்கிறார். இந்த இடங்களில் அமர்ந்து இருப்பவரையே நாம் பிரயாணங்களின்போது அனைவரும் வழிபட்டுச் செல்வதை வழமையாகக் கொண்டுள்ளோம்.

எமது வீடுகளின் பூசை அறையில் அமர்ந்து இருக்கும் விநாயகரையே புதுமனைப் புகுவிழாவின்போது வைத்து வழிபடுகிறோம். இவ்வாறே வியாபார நிலையங்களிலும் அமர்ந்து இருக்கும் விநாயகரையே அதற்கென உரிய இடத்தில் வைத்து விளக்கேற்றி மலர்சூட்டி வழிபடுகிறோம். நவராத்திரி காலங்களிலும் வியாபார நிறுவனங்களில் இடம்பெறும் பூசை வழிபாடுகள் அதற்கென உரிய இடத்திலேயே இடம்பெறுகிறது.

பக்தி மேலீட்டின் காரணமாக விநாயகரின் தம்பியாம் தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமான் நாவற்பழ மரத்தில் சிறுவனாக இருந்து "பாட்டி சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" எனக் கேட்டு காட்சி கொடுத்ததை வழிபட்ட ஒளவைப் பிராட்டியார் விநாயகரையும் "தாயாய் எமக்குத் தானெனுந் தருளி மாயப்பிறப்பின் மயக்கம் அறுத்தே" என வழிபாடாற்றியுள்ளார். எமது கஷ்டங்கள், துன்பங்கள் நீங்க கணபதியாம் விநாயகரை விசேடமாக சங்கடகர சதுர்த்தி, சதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி போன்ற தினங்களில் முறைப்படி வழிபடுவது சிறப்பானதாகும். ஆற அமர அமர்ந்து இருப்பவரிடமே நாம் எமது துன்பங்கள், கவலைகளை எடுத்துக்கூறி அவற்றை நீக்கவும் எமக்குத் தேவையானவற்றை பெற்றுக்கொள்ளவும் வேண்டும். எனவே தான் அமர்ந்து இருக்கும் விநாயகரையே

*ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் மரணம் தள்ளிப் போடப்படுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் சுவாமி அறை - பூசை அறை, வியாபார நிறுவனங்களில் அதற்கென உரிய இடத்திலும் வைத்து வழிபட்டு வருகிறோம்.

வீட்டின் திருஷ்டி, வியாபார நிறுவனங் களில் திருஷ்டிக்கு நீற்றுப்பூசணி, தேசிக்காய், பூதமுகம், செத்தல் மிளகாய் வேப்பிலையுடன் கூடிய தேசிக்காய் போன்றவற்றையே தூங்க விட வேண்டும். இதுவே தோஷ திருஷ்டிக்கு பரிகாரமுமாகும். இதனையே அனேகமான வீடுகள், வியாபார நிறுவனங்களில் காணக் கூடியதாகவும் உள்ளது. அதேவேளை வீடு கள், வியாபார நிறுவனங்களில் தோஷ திருஷ்டிக்கான கிரியைகள் இடம்பெற்று நீற்றுக்காய் உட்பட தோஷ கழிப்புகள், வீதி களின் முச்சந்தியோரத்தில் வைக்கப்படுகின் றதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். இச் செயற்பாடும் முன்னோர்கள் செய்ததே. இது சரியான வழிமுறையும்கூட. தற்போதுகூட புதிய வீடுகள், கட்டடங்கள் கட்டும்போது "பூத முகத்தினை" தொங்கவிடுவதனை அவ தானிக்கலாம். இப் பூதமுக தோஷ திருஷ்டி முறையினை சதோதர மொழி பேசும் பௌத்த சமய மக்களும் பின்பற்றுவதனை அவதானிக்க முடிகிறது.

நம் முன்னோர்கள் சிறு குழந்தை களிற்கு காலங்காலமாக வேப்பிலை, செத்தல் மிளகாய் போன்றவற்றினை உடம்பினைச் சுற்றி தடவி, "கண்திருஷ்டி" கழிப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு தோஷ திருஷ்டி கழிப்பிற்கு நம் முன்னோர்கள் பின்பற்றி வந்த சரியான வழிமுறைகள் இருக்கின்றன. இவ்வாறு இருக் கும்போது நாம் அனைவரும் ஆகமவிதிப் படியும் ஆகமவிதியல்லாது எளிமையாக வழி படக்கூடியவாறு ஆற அமர அமர்ந்து இருக் கும் ஔவைப்பிராட்டி வழிபாடாற்றிய முதல் தெய்வமாம் விநாயகப் பெருமானை சில ஆண்டுகளிற்கு முன்னர் நின்ற வடிவத்தில் கோர ரூபமாக வடிவமைத்து எளிமையான விநாயகரை இழிவுபடுத்தும் வகையில் "கண் திருஷ்டி கணபதி" எனும் பெயருடன் பிரகிருதி ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கு "அகத்திய முனிவர் அருளியது" எனும் வாசகமும் சேர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. விநாயகரை இவ்வாறு "கண் திருஷ்டி கணபதி"யாக வழிபடலாமா? எனச் சரியாக ஆராய்ந்து அறியாத நாம் வியாபார நிலையங் களிலும், சிலர் வீடுகளிலும் "தோஷ திருஷ்டி" நீக்குபவராக, நீங்குவதாக கருதி வாசலில் தொங்கவிட்டுள்ளோம். சிலர் இதற்கு வழி பாடும் மேற்கொண்டு வருகின்றனர். இது அகத்திய முனிவரால் அருளப்பட்டது என் பதை அறியமுடியாது உள்ளதுடன் அகத் திய முனிவரது நூல்கள் எதிலுமே இது பற்றிய விபரம் காணப்படவும் இல்லை. அது மட்டுமன்றி நம்முன்னோர்களால் மேற்குறித்த "தோஷ திருஷ்டி, கண் திருஷ்டிக்கு குறிப் பிடப்பட்ட பொருட்கள் குறிப்பிட்டவாறு பயன் படுத்தப்பட்டு வந்ததே தவிர "கண் திருஷ்டி கணபதி" இடம்பெறவும் இல்லை.

நாம் ஆகம தெய்வமாக வழிபடுகின் றதும் "தாயாய் எமக்குத் தானெனுந்தருளி மாயப்பிறப்பின் மயக்கம் அறுத்த" கணபதியை திருஷ்டி நீக்குபவராக வடிவமைத்ததும் நின்ற வடிவில் வடிவமைத்ததும், அதனைச் சுவர் களில் தொங்கவிடுவதும், வழிபடுவதும் மாபெரும் தவறுகள் ஆகும்.

இவ்வாறு செய்வதானது இல்லங் களின் சிறப்பிற்கோ வியாபார மேம்பாட்டிற்கோ வழிவகுக்கமாட்டாது. எமது சமய முன்னவ ரான விநாயகரை இவ்வாறு கோர ரூபமாக வடிவமைத்தமையை அதற்கென உரிய எத் தரப்பினரும் கண்டுகொள்ளாத நிலையில், தெரிந்தோ தெரியாமலோ நாம் எமது வீட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகப்பிலும் வியாபார நிலையங்களின் வாச லிலும் தொங்கவிட்டு வழிபட்டு வருகிறோம். எங்கோ தவறு இடம்பெற்றுள்ளது. கண பதியை உரிய நிலையில் அதற்கென உரிய இடத்தில் வைத்து வழிபடுவதே சிறப்பு. இது இல்லச்சிறப்பிற்கும், வியாபார மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும். சரியானதும் ஆகும்.

சகோதர மொழி பேசும் பௌத்த சமயத்தின் சமய அடையாளச் சின்னமொன் றினை ஒத்த வடிவம் பொறிக்கப்பட்ட சேலை ஒன்றினை பெண்மணியொருவர் அணிந்து மன்றத்திற்கு வந்தபோது அதனை அவ தானித்த தரப்பினர் தமது சமயம் தொடர்பில் அதீத அக்கறையுடன் செயல்பட்டதை பத் திரிகை வாயிலாக அறியக்கூடியதாக இருந் தது. ஏன் ஏனைய சமயத்தவர்கள் இது தொடர்பில் கொண்டுள்ள அக்கறை எம்மிடம் இல்லை. எங்கு தவறு நடந்தது. இதனை நாம் உணர்ந்துகொள்வதுடன், இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதவகை யில் சமயம் தொடர்பான தரப்பினரும் சமய நிறுவனங்களும் அவதானம் செலுத்த வேண் டும்.

விநாயகரை வழிபட்ட ஔவைப் பிராட்டியாருடன் "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என நாவற்பழ மரத்திலிருந்து தமிழ்க்கடவுள் முருகப்பெரு மானான சிறுவன் உரையாடும் காட்சி, சுப்பிரமணியராம் முருகப்பெருமானது ஆலய மொன்றின் விமானத்தில் உயிரோட்டம் கொண்ட சிற்பமாகக் காணப்படுகின்றது. இச் சிற்பத்தில் ஔவைப்பிராட்டியாரின் வயோ திபம், தோல் சுருக்கங்கள் தத்ரூபமானவை யாக அமைந்துள்ளதாக வரலாற்றுக் கட்டுரை யாளர் சஞ்சிகையொன்றில் ஆதாரத்துடன் குறிப்பிடுகிறார். இவை எமது சமய வளர்ச் சிக்கு முக்கிய பங்காற்றுவதுடன் வரலாற்றிற் கும் சான்று பகர்கின்றன. பாரம்பரியமாக நம் முன்னோர்கள் பேணிப் பாதுகாத்து வந்த எமது சமய அடையாளங்களை முன் கொண்டு செல்ல இவை உதவுகின்றன.

பல்வேறு சமய பண்பாட்டுச் சூழலும், நவீனத்துவமும், தொழில்நுட்ப ஆதிக்கமும், இந்துசமய மக்களின் வாழ்வியலிற்கு சவால் விடுத்து அவற்றை அழிக்க, சிதைக்க முற்படு கின்ற சூழ்நிலையில் எமது சமய தனித்துவ வரலாற்று மரபுரிமைகளை புனருத்தாரணம் எனும் பெயரில் புராதனங்களை அழியாது பேணிப்பாதுகாப்பதுடன் பண்பாட்டு விழுமியங் களை நெறிமுறைகளை அடுத்த தலை முறைக்காக சரியான முறையில் நெறிப் படுத்தி கொண்டு செல்லவேண்டியது சமயத் தலைவர்களினதும், சமய நிறுவனங்களின தும் தலையாய கடமையாகும்.

**செல்வச்சந்நிதி முருகனே சரணம்**

ஆற்றங்கரை மீதமர்ந்து அருள் சுரக்கும் வேலவனே
ஆறுமுகனே ஆனைமுகனின் அன்புச் சோதரனே
மாற்றங்களைத் தந்து எங்கள் மனக்கவலைகள் மாற்றி
மனமகிழ்ச்சியைத் தரவேண்டும் மயில் வாகனனே
சீற்றங் கொண்டு சூரனின் சிரமறுத்த சரவணனே
சிவனார் திருமகனே செல்வச்சந்நிதி முருகனே
தேற்றங்கள் தேடியே உன்சந்நிதி நாடி வந்தோம்
தேவசேனாபதியே திருவடி சரணம்! சரணம்!!

-இராசையா ஸ்ரீதரன்-

*காலத்தின் மதிப்பு தெரிந்தால்த்தான் வாழ்க்கையின் மதிப்பு தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

(நாற்பதாவது)

## வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

வரகுணபாண்டியன், செங்கோலோச்சி அரசியற்று நாளிலே ஒருநாள் வேட்டை விரும்பினனாய்க், காட்டிற் சென்று, சூரியன் அத்தமிக்கும் வரையும் வேட்டையாடிக் கொண்டு, மதுரை நகரத்துக்குத் திரும்பினான். திரும்பி வரும்பொழுது, அதிவேகத்தோடு செல்லும் அவன் குதிரை, அக்காட்டிற் படுத்து நித்திரை செய்யும் ஒரு பிராமணன் மேலே கால் வைக்க, அவன் இறந்து விட்டான். பாண்டியன், அதனை அறியாது சென்று, தன் கோயிலிற் புகுந்தான். இறந்த பிராமணனுடைய பிரேதத்தை, அவன் சுற்றத்தார் எடுத்துக்கொண்டு போய் பாண்டியனுடைய கடைத்தலை வாயிலிலே போட்டு, நிகழ்ந்ததைச் சொல்லப் பாண்டியன், வேண்டும் பொருள் கொடுத்து, அவர்களைக் கொண்டு மயான கிருத்தியத்தை முடிப்பித்தான். அவனைப் பிரமகத்தி பிடித்தது.

வரகுணபாண்டியன், தன்னை வருத்தும் பிரமகத்தி நீங்கும் பொருட்டு, புரோகிதர்கள் விதித்தபடியே, பிராமண போசனஞ் செய்தும், அரசமரத்தை பிரதஷிணஞ் செய்தும், அறுகு கொய்து பசுக்களுக்குக் கொடுத்தும், அகமருடண மந்திரத்தால் ஓமம் பண்ணியும், பஞ்சகவ்வியமும் பசுக்கொம்பு தோய்ந்த தீர்த்தமும் உட்கொண்டும், கோதானம் பூதானம் முதலிய நானாவித தானங்கள் செய்தவிடத்தும், பிரமகத்தி நீங்காது, நெய் சொரிந்த அக்கினி போல மேலிட்டு, அவனை வளைந்து கொண்டது அது ஏங்கும்; பெருமூச்செறியும்; கைதட்டும்; மலைபோலப் பெருக்கும்; சிறுகும்; கோபித்து ஆரவாரிக்கும்; முன்னும் பின்னும் பக்கமுந் தொடரும்; சிரிக்கும்; பிளந்த வாயை மெல்லும்; பிரியும்; திரும்பி வரும்; "பழி தா" என்று வந்து பிடிக்கும். பாண்டியன் இவ்வியல்புடைய பிரமகத்தியினால் வருந்தும் பொழுது பிராமணர்கள் பின்னும் அவனை நோக்கி, "மகாராசாவே! நீ விரத நியமத்தோடு நாடோறுஞ் சோமசுந்தரக் கடவுளை ஆயிரத்தெட்டுத் தரம் பிரதட்ஷிணஞ் செய்யக் கடவாய். இப்படிப் பத்துத் தினஞ் செய்துவரின், இப்பிரமகத்தி நீங்கும் வண்ணஞ் சிவபெருமான் உனக்கு வழி காட்டியருள்வார்" என்றார்கள்.

அதுகேட்ட வரகுண பாண்டியன், திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! நீர் இந்திரனுடைய பழியைத் தீர்த்தருளினீர். பிராமணனுடைய மகாபாதகத்தைத் தீர்த்தருளினீர். தமியேனுடைய பழியையுந் தீர்த்தருளும்" என்று விண்ணப்பஞ்செய்து, அடியற்ற மரம் போல் வீழ்ந்தான். பின் எழுந்து, பிராமணர்கள் சொல்லியபடியே ஆயிரத்தெட்டுப் பிரதட்ஷிணஞ் செய்து வணங்கினான். சிவபெருமானது திருவருளினாலே, ஆகாயத்தினின்றும் "கேளாய் பாண்டியனே! ஒவ்வோரடிக்கு ஒவ்வோரசுவமேத யாக பலம் கொடுப்பது பிரதட்ஷிணம். அத்துணைச் சிறப்புடைய பிரதட்ஷிணம் ஆயிரத்தெட்டுச் செய்து வந்தாய். இதனாலே நாம் மிக மகிழ்ந்தோம். இனி நீ

*வாழ்க்கையில் முன்னேறும்போதுதான் உழைப்பின் உன்னதம் புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாதே சோழராசன் உன்னோடு போர் செய்ய வருவான்; நீயும் அவனோடெதிர்ப்பாய். போரிலே அவன் உனக்குப் புறங்காட்டி ஓடுவான். நீயும் அவன் பின்னோடி, அவனை எட்டிப் பிடிப்பவன் போலத் துரத்தும்பொழுது, நம்மைப் பூசித்துக்கொண்டிருக்குந் தலமாகிய திருவிடைமருதூரிலே போய்ச் சேருவாய். அங்கே உன் பிரமகத்திப் பழியை நீக்கியருள்வோம்" என்று ஓரசரீரி வாக்குத் தோன்றிற்று. வரகுணபாண்டியன், அதுகேட்டு, மனமகிழ்ந்து, சிவபிரானுடைய திருவருளைத் துதித்துக் கொண்டு, அரண்மனையை அடைந்தான்.

சிலநாள் கழிந்தபின், சோழராசன் வரகுண பாண்டியனோடு போர் செய்யக் கருதித், தன் சேனையோடு வந்து, மதுரையை அணுகினான். வரகுணபாண்டியன் அஃதறிந்து, தன் சேனையோடு எதிர்த்துப் பொருதான். போரிலே சோழன் சேனை பாண்டியன் சேனைக்குத் தோற்றோடிற்று. சோழனும் நாணிப் புறங்காட்டி ஓடினான், வரகுணபாண்டியன், சோழனைப் பிடிக்கும் பொருட்டுத் துரத்திக் கொண்டோடும்பொழுது, காவேரி நதியை அடைந்தான். அடைந்து, பூசத்துறையிலே ஸ்நானஞ் செய்து, அக் காவேரிக்குத் தென் பக்கத்துள்ள திருவிடைமருதூரிற் சென்று, திருக்கோயிலினது கீழை வாயிலைக் கடந்து சென்றான். செல்லுதலும், அவனைப் பிடித்த பிரமகத்திப் பழியும் பாசமும் புறத்தே நின்று விட்டன. வரகுணபாண்டியன், உள்ளே போய்ச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து, அக்கினிவாய்ப்பட்ட வெண்ணெய்ப் பாவை போல உருகிச், செயலும் வாக்கும் அற்று, அறிவுருவாகி, நெடுநேரம் நின்று, பின்பு அளவில்லாத தோத்திரங்களைச் செய்தான். அப்பொழுது சிவபெருமான், "பாண்டியனே! உன் பிரமசாயை கீழை வாயிலிலே நிற்கின்றது; ஆதலால் அந்த வழியாலே போகாதே. மேலைவாயிலினாலே போய், நம் மதுரையை அடைதி" என்று திருவாய் மலர்ந்தருளினார். வரகுணபாண்டியன், அதுகேட்டுச், சிவபெருமானைப் பிரிதலாற்றாமையால் வாயில்தோறும் அடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து, மேலை வாயிலினாலே போவானாயினான். அவன் மேலைக் கோபுரத்தைத் தன் பெயரினாற் செய்து, வேறுஞ் சில திருப்பணிகளை நடத்திக் கொண்டு, அங்கே சிலநாள் வசித்துப், பின் மதுரையை அடைந்தான்.

வரகுணபாண்டியன், தன்னைப் பிரமகத்திப் பழி நீக்கியாண்டருளிய சோமசுந்தரக் கடவுளை நாடோறும் அடைந்து தரிசனஞ் செய்து கொண்டும், உலகத்தை நீதி வழுவாது பரிபாலித்துக்கொண்டும், சிவபுராணங் கேட்டுக்கொண்டும், வாழ்ந்திருந்தான். ஒருநாள், வேதம் ஆகமம் புராணம் மிருதி முதலிய நூல்களனைத்தும் உலகங்களெல்லாவற்றினும் உயர்ந்தது சிவலோகம் என்று சொல்வதை உட்கொண்டு, அந்தச் சிவலோகத்தைக் காண்டற்கு ஆசைகொண்டு, அன்றிராத்திரியிலே திருக்கோயிலை அடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! உம்முடைய திருவடியைப்பெற்ற மெய்யன்பர்கள் சூழ, நீர் சிவலோகத்தில் எழுந்தருளி இருப்பதைத் தரிசித்து வணங்கத் தமியேன் ஆசை கொண்டேன்" என்று விண்ணப்பஞ் செய்தான். உடனே சிவபெருமான் அப் பாண்டியனுடைய அன்புக்கு எளியராகி, "நாம் இன்றைக்கு நம்முலகத்தை இவ்வுலகத்தில் வருவித்து, இவனுக்குக் காட்டுவோம்" என்று திருவுளங் கொண்டார். அப்பொழுது சிவலோகம், கோடி சந்திரர்கள் பேரொளி பரப்பி ஒருங்குதித்தாற்போல, அங்கே வந்து தோன்றியது.

சிவபெருமான் திருநந்திதேவரை அழைத்து, "நமது மெய்யன்பனாகிய வரகுண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் நம்முலகத்தைக் காண விரும்பினான். அவனுக்குக் காட்டு" என்று பணித்தருளினார். அதுகேட்ட திருநந்திதேவர், சிவபெருமானை வணங்கிக் கொண்டு, புறத்து வந்து, வரகுணபாண்டியனை அழைத்துக் கொண்டு போய் நதிகளையும் ஓடைகளையும் அமுதவாவிகளையும் பொற்றாமரைத் தடாகங்களையும் பூஞ்சோலைகளையும் அமுதமயமாகிய அகழையும் திருமதிலையும் திருக்கோபுரங்களையும் திருவீதிகளையும் திருமாளிகைப் பந்திகளையும் திக்குப்பாலகர்களுடைய புரங்களையும் பிரமாவுடைய புரத்தையும் விட்டுணுவுடைய புரத்தையும் உருத்திரர்களுடைய புரத்தையுங் காட்டினார். பின்பு சிவனடியார் கூட்டத்தைப் பிரம்பினாற் சுட்டிக் காட்டுவராயினார்:-

"சூரியன் உதிக்கு முன்னே ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு சிவபெருமானுடைய திருக்கோயிலைத் திருவலகிடுதலும், திருமெழுக்கிடுதலும், திருநந்தவனப் பணி செய்தலும், புட்பங் கொய்து மாலை கட்டிக்கொடுத்தலும், சுகந்த தூபமிடுதலும், திருவிளக்கேற்றலும், சிவதோத்திரஞ் செய்தலும், சிவபிரானது புகழைக் கேட்டலுமாகிய திருத்தொண்டுகளைச் செய்து சிவசாலோக்கிய பதத்தைப் பெற்றவர்கள் இவர்கள். புட்பஞ் சந்தனந் தூபந் தீபந் திருமஞ்சனஞ் திருவமுது முதலிய உபகரணங்களைத் தேடி வைத்துக்கொண்டு, பஞ்சசுத்தி செய்து, சிவலிங்கப் பெருமானைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு பூசை செய்து, சிவசாமீப்பிய பதத்தைப் பெற்றவர்கள் இவர்கள். மூலாக்கினியை வாயுவினால் எழுப்பிப், பிரமரந்திரம் வரையுங் கொண்டு போய், அங்குள்ள சந்திரமண்டலத்தை இளகப்பண்ணி, அதினின்றும் இடை பிங்கலை சுழுமுனை நாடி வழியாக ஒழுகும் அமுதத்தை உண்டு, சிவபெருமானைப் புருவ நடுவில் தியானித்துச், சிவசாரூப்பிய பதத்தைப் பெற்றவர்கள் இவர்கள். இருபிறப்பாளர்களாகி யாகங்களைச் சிவபெருமான் பொருட்டுச் செய்தவர்கள் இவர்கள். புகழையும் பயனையுங் குறியாது தண்ணீர்ப் பந்தல் வைத்தல் முதலிய தருமங்களை நிராசையினாலே செய்தவர்கள் இவர்கள். வேத விதிப்படிக்குஞ் சிவாகம விதிப்படிக்கும் விபூதி உருத்திராட்ஷ தாரணமும் ஸ்ரீ பஞ்சாட்சர செபமுஞ் செய்தவர்கள் இவர்கள். வேதத்தில் உள்ள சதருத்திர மந்திரத்தை உச்சரித்தவர்கள் இவர்கள். விபூதி உருத்திராட்சந் தரித்தவர் யாவரேயாயினும் அவருடைய குணத்தையும் குலத்தையும் பாராது அவரைச் சிவபெருமானாகவே பாவித்தவர்கள் இவர்கள். நிருவாண தீட்சிதர்களுக்குச் சிவஞான நூல்களைத் தானஞ் செய்தவர்கள் இவர்கள். சிவாலயங் கட்டுவித்துச், சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்தவர்கள் இவர்கள். சிவபூசை செய்பவர்களுக்கு அதற்கு வேண்டுந் திரவியங்களை உதவித் தொண்டு செய்தவர்கள் இவர்கள். மாகேசுர பூசை செய்தவர்கள் இவர்கள். சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதே தவமெனக்கொண்டு, செய்து, உயர்ச்சி அடைந்தவர்கள் இவர்கள். சோமசுந்தரக் கடவுளுக்கு ஆலயம் முதலியவைகளைக் கட்டுவித்து, அபிஷேகம் பூசை திருவிழா முதலியவைகளைக் குறைவறச் சிவாகம விதிப்படி செய்வித்து, விபூதியும் உருத்திராட்சமுமாகிய சிவசின்னங்களே பாண்டி நாடெங்கும் பரவும்படி அரசு செய்து, இங்கு வந்த உன் குலத்தவர்கள் இவர்கள்" என்று இப்படித் திருநந்திதேவர் வரகுணபாண்டியனுக்குச் சிவனடியார் கூட்டத்தைக் காட்டி, அவன் நின்று விழுந்து விழுந்து அஞ்சலி செய்து கொண்டு வர, அவனை அழைத்துக்கொண்டு போய்ச், சருவலோக நாயகராகிய சிவபெருமான்

*பொறுமையைக் கடைப்பிடிப்பவன் எல்லாவற்றையும் அடைவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுன்பு விடுத்தார். வேதமும் சிவாகமும் வடிவெடுத்து இருபக்கத்தும் நின்று வாழ்த்தத், தும்புரு நாரதர்கள் இசை பாடத், தேவ ரம்பையர்கள் கூத்தாடக், குறை வேண்ட வந்த தேவர்கள் சமயம் பெறாது தூரத்தே நிற்க, விநாயகக் கடவுளுஞ் சுப்பிரமணியக் கடவுளும் வீரபத்திரக் கடவுளும் வணங்கி நின்று ஏவிய பணிகளைக் கேட்கப், பிரம விட்டுணுக்கள் வஸ்திரத்தையொதுக்கி வாய் பொத்தி ஒதுங்கி நின்று தத்தங் குறைகளைச் சொல்ல, இந்திரன் முதலிய அட்ட திக்குப் பாலகர்கள் தாங்கள் தாங்கள் செய்யுங் காரியக் குறைகளை நடுநடுங்கி நின்று விண் ணப்பஞ் செய்ய, அமரர் சித்தர் அசுரர் சாரணர் முதலிய பதினெண் கணங்களுந் துதிக்க, முனிவர்கள் அரகர சங்கர சிவ சிவ என்று ஏத்தெடுப்ப, ஆயிரகோடு சூரியப் பிரகாசத்தை யுடைய இரத்தின சிங்காசனத்தின்மீது உமா தேவியாரோடு சிவபெருமான் எழுந்தருளியிருத் தலை வரகுணபாண்டியன் கண்டு வணங்கி னான். உரை தடுமாற, உரோமஞ் சிலிர்ப்பத் தனதன்பாகிய திரையிறந்த நதி சிவபெரு மானது திருவருளாகிய கரையிறந்த கடலி னிழுப்பத், தான் மிதந்து போய்ப், பரமானந்த மாகிய திவ்வியாமிர்தத்தை வாய் மடுத்தான்.

பின்பு சோமசுந்தரக் கடவுள், அவ் வரகுணபாண்டியனெதிரே சிவலோகம் முன் போல மதுரையாகத், தாமும் உமாதேவி யாரும் முன்னிருந்தபடியே எழுந்தருளியிருந் தார். வரகுணபாண்டியன் சோமசுந்தரக் கட வுளை வணங்கி நின்று, கண்ணீர் சொரிய, நாக்குக் குழற, இவ்வாறு துதிப்பானாயினான்:-

நாயினே னென்னை நடுக்கும் பழியகற்றித்
தாயினே ராகித் தலையளித்தாய் தாள்சரணஞ்
சேயினேன் காணச் சிவலோகங் காட்டிப்பின்
கோயினேர் நின்றவருட் குன்றேநின் றாள்சரணம்.

மாழாந்து செய்யும் வினைவழிபோய் வன்னரகிற்
றாழா தடியனேற் கன்புதந்தாய் தாள்சரணம்
ஏழாகி நான்கு வகையா யெழுபிறப்பும்
பாழாக வென்னைப் பணிகொண்டாய் தாள்சரணம்.

வெங்கட் பழியின் வினையேனை வேறாக்கித்
திங்கட் குலக்களங்கந் தீர்த்தாய்நின் றாள்சரணம்
அங்கட் சிவபுரமுண் டன்புடையார்க் கென்பதையின்
றெங்கட்குக் காட்டி யிசைவித்தாய் தாள்சரணம்.

இப்படி வரகுணபாண்டியன் துதி செய்து, சோமசுந்தரக் கடவுளுக்குப் பூசை முதலியவைகளை விசேடமாக நடத்துவித்துச், செங்கோலோச்சி அரசியற்றுக் கொண்டிருந் தான்.

இப்படிச் சொல்லிய அகத்திய மாமுனிவரை இருடிகள் நோக்கிச், "சுவாமீ! சோமசுந்தரக் கடவுள் இந்திரனுடைய பழியை யும் வெள்ளை யானையினுடைய சாபத்தை யும் பிராமணனுடைய மகாபாதகத்தையும் மதுரையிலே நீக்கியருளினாரன்றோ! அவ் வாறாகவும், வரகுணபாண்டியனுடைய பிரமக் கொலைப்பழியை மதுரையிலே நீக்காது, திருவிடை மருதூரிலே நீக்கியருளியமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை? அடியேங்களுக்குச் சந்தேகம் நீங்கச் சொல்லியருளும்" என்றார்கள். அதுகேட்ட அகத்திய மகாமுனிவர், "முனிவர்களே! சோம சுந்தரக் கடவுள் புண்ணியமூர்த்தியாதலால் தமது மதுரை நகரத்துள்ள அடியார்கள் வேண்டியபடியே பாதகஞ் செய்து கெட்டுப் போகாது பயந்து நடக்கும்படி திருவுளங் கொண்டே, வரகுணபாண்டியனுடைய பழியை மதுரையிற்றீராது, திருவிடைமருதூரில் தீர்த்தருளினார்" என்றார். அப்பொழுது முனிவர்கள் தலையசைத்துச் சோமசுந்தரக் கடவுளுடைய திருவருளை நினைந்து, வியந்து, பேரானந்தக் கடலில் மூழ்கினார்கள்.

அம்மதுரை நகரம் அன்று தொடங்கி இன்றுவரையுந் தனக்கொப்பில்லாததாய்த், தலசிகாமணியாகிப், பதினான்கு உலகங்களினும் பூலோக சிவலோகமெனப்பட்டு விளங்கும்.

**சந்நிதி வேலனை சொல்லி மகிழ வாரீர்**

கடவுள் விருப்புடையார்க் கென்றும் முருகன்
இடர்தரு வானா யிலன்.

வல்வினை தீர்த்திடும் ஆற்றங் கரைவேலன்
எல்லாந் தருவான் எமக்கு.

பயனிலாச் சொற்கள் பறையாதி ருப்பார்
இயல்பாய் இருப்பர் இனிது.

சந்நிதி வேலனை சொல்லி மகிழ்வார்க்கு
அன்பின துண்மை புரியும்.

செய்யத் தகுபவைசெய் மோகன ஸ்வாமிகள்
உய்யவழி சொல்வார் உணர்.

அறவழி வாழ்வதிய லாதார் எவரும்
பிறர்கெட எண்ணுவரா வர்.

பிறர்பொருளை தீண்டா திருப்பார் எவரும்
அறம் செய்ய வேண்டுதல் இல்லை.

பிறர்க்கு நுகர்வோரால் ஈவோராய் உள்ளார்
அறம்பல செய்தார்க்கொப் பர்.

**-சீ. சாந்தநாதன்-**

*நீ நடந்து போக பாதை இல்லையே என்று கவலைப்படாதே, நீ நடந்தால் அதுவே ஒரு பாதை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் காட்டும் வாசி

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

நாம் உயிர் வாழ்வதற்கு நமது சுவாசம் இன்றியமையாதது. சரவோட்டம் என்பது நாம் உயிர் வாழும் சுவாசமாகும். இது இறைவனால் நமக்கு அருளப்பட்டதாகும். இச் சுவாசம் உட் சுவாசம், வெளிச் சுவாசம் என இரு வகைப்படும். சரவோட்டம் நாம் இறைவனை அடைந்து நமது பிறவியை அறுக்கப்போதுமானதாக இல்லை. "பிராணாயாமம்" என்பது நமது பிராணனை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

"வாசி" என்பது வாயுவைக் குறிக்கும். இவ் வாசி என்பது வா- எட்டு அங்குலமாகவும், சி- என்பது நான்கு அங்குலமாகவும் அமைந்துள்ளது. எனவே பன்னிரண்டு அங்குலமாக நீண்டு செல்வதே இவ் வாசியாகிய வாயுவாகும். வாசி என்பது, உடலைவிட்டு வெளியில் போனால் திரும்பவும் அதே அளவு உடன் உள் வருவதில்லை. வாசி- வாயு பன்னிரண்டு அங்குலம் வெளியில் போய், எட்டு அங்குலமே திரும்பி வருகின்றது. எனவே, நான்கு அங் குலம் குறைவாகவே உள் வருவது ஓர் பிரச்சினையாகவே அமைந்துள்ளது என்பது சித்த ஞானிகள் கருத்தாகும். திருமூல நாயனாரும் இதற்கு அமைவாகவே, தனது திருமந்திரத்தில் கருத்துக்கள் கூறியுள்ளமை கண்டுகொள்ளப்பட்டது.

வாசி- வாயு வெளியில் உரியளவு போய், பின்னர் திரும்பி வரும்போது "வா"- என்பது மட்டுமே திரும்பி உள் வருகின்றது. இதில் "சி"- என்பதாகிய அவ்வாயுவின் ஒரு பகுதி காணாமற்போயுள்ளது. இதனால் நமது உடல் பாதிப்புறுகின்றது. இந்த "சி"- என்பது, வா- என்பதை விட்டுப் பிரிந்துபோகாமல் முழுமையாகத் திரும்பி வருகில் பிரச்சினைகள் இல்லை. அவ்வாறு "சி" திரும்பி வருவதாக இருப்பின், அது "சிவா" என்னும் பெயருடனும், கருத்துடனும், பயன்பாட்டுடனும் அமையும் என்பது திண்ணம். அக் கருத்தில் அருளப்பெற்ற திருமந்திரம் வருமாறு.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

-திருமந்திரம் 2716.

முற்பிறவியில் நாம் தீவினை செய்துள்ளவர்களாகவும் இருப்போம். அதனால்த்தான் நாம் சிவ சிவ என்று ஓதாமல் இருப்பதாகும். எனவே சிவ சிவா என்பது, எமது நாசி வழியே உடலின் உள் வரும் வாயுவைக் குறிக்கும். வாசி வெளியேறி சி- என்பது திரும்ப வராமல், வா- மட்டுமே திரும்ப வந்தமையால், இச் சி- தான் சிவமாக அமைந்து நமது உடலைச் சிவத்தன்மை பொருந்தியதாக ஆக்கி நமக்கு மெய்யுணர்வை ஊட்டுவதாகும். எனவே, ஆராயின் பிராணாயாமம் செய்து உடற் சித்தியடைவதற்கும், முற்பிறவியில் நல்வினை செய்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. எனவே, நமது சரவோட்டத்தில் (சுவாசம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறும் வாயு, பன்னிரண்டு அங்குலமாகவும் உள்வரும் வாயு எட்டங்குலமாகவும் இருக்கும் வழமையான நிலையை மாற்றி அவற்றை வெளியேறும் வாயு பன்னிரண்டு அங்குலம் எனின், உள் வரும் வாயுவும், அதேபோல் பன்னிரண்டு அங்குல அளவாக இருப்பதே சரியான நியம சுவாச நிலையாகும்.

கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால் விரல்
கூடிக் கொளிற் கோல அஞ்செழுத் தாமே.

-திருமந்திரம் 576.

பிராணனுக்கு இவ்வுடம்புதான் உரிய இடமாகக் கிடைத்தமை இறைவனின் கருணை ஆகும். இவ்வுடம்பினைப் படைத்தவனும் அவனேயாவான். மாயைக்கு உட்பட்டவர்கள் பிறப்பு உடையவர்களாவர். பிறப்பு அஞ் ஞானத்தால் வருகின்றது. ஞானம் இறை அருளால் வரும். ஞானம் பெற்றவர் பேரின்பம் பெறுவர். இறைவனை வழிபட்டால் ஞானமும் திருவடிப்பேறும் வந்தடையும். எனவே, மாயா காரியமாக இவ்வுடம்பினை இறைவனிடம் பெற்றவர்கள் முத்தியடைதல் வேண்டும். முத்தியடைவதற்காகவே ஓர் உயிரின் இயக் கத்திற்காக உடம்பையும் படைத்தான் இறை வன். ஓர் தாயினது கருவில் உயிரை வைத்து, அதன் உடலையும் படைத்தருளினான் இறை வன். பின்னர் உயிர் மூச்சாகிய பிராணனை யும் இவ்வுடலில் படைத்தான் இறைவன். அதன்பின் அம்மூச்சு சரிவர நடைபெறும் அளவுப் பிரமாணங்களையும் இறைவனே படைத்தருளினான். இடையில் நான்கு அங் குல மூச்சு தவறிப்போயுள்ளமையால் அவ் உயிரும் உடம்பும் முத்தியடைய முடிய வில்லை. மேலுள்ள திருமந்திரத்தின் இறுதி வரிகள் "நால் விரல் கூடிக் கொளில் கோல அஞ்செழுத்தாமே" என பொருத்தமுற மொழிந் துள்ளமை உணரத்தக்கது. பிராண சக்தியைச் சிரசிற்குப் பாய்ச்சினால் சாதகர் பஞ்சாக்கர சொருபமாவார். அதற்கு மேலும் நாலங்குல வாயுப் பரிமாற்றம் அங்கு நடைபெறுதல் வேண்டும். நான்கு அங்குல வாயுவைப் பொருந்தாதோர் மேலும் தீவினையை அனு பவிக்க வேண்டி ஏற்படும். "சிவகதி" ஆகிய வீடுபேறு அடைய அவர்களுக்கு அது தேவை. அந் நான்கு அங்குல வாயு கிடைத்திடில் அவர்கள் தேவரும் ஆவர். இவ்வாறு அதன் நன்மைகள் பலவாம்.

நான்கு அங்குல வாயுவையும் பொருந்தியுள்ளோர்கள் "சிவசிவ" என்னும் சைவாகமம் கண்ட மகாமந்திரத்தை உச்சரிக் கத் தெரிந்தவர்கள் ஆவர். சிவாயநம, சிவாய, சிவசிவ என்பவை படிமுறையால் கூறப்பட்ட மந்திரங்களாகும். இவற்றுள் "சிவசிவ" என்பது மகாமந்திரமாகும். இவர்கள்தான் பிறப்பு இறப் புக்களை நீக்கிக்கொள்ளும் வல்லமை பெற் றவர்களாவர். தீவினையாளருக்கு பிறப்பு இறப் புக்கள் நிச்சயமானவை.

யாரும் "சிவசிவ" என்பதை எண்ணு வதை அதிலுள்ள சித்திகளை உணர்வதில்லை. "சிவசிவ" என்னும் வாயு சுவாச கதியில் தேய்ந்து இல்லாது அடங்கி இடைகலை, பிங்கலை வழிச் சுவாசம் நின்று போக நடுநாடி வழி சுழுமுனையுள் சுவாசம் இலயம் (ஒடுங் கல்) அடைந்து நிற்கும். இதற்கு பன்னிரண்டு அங்குலம் உள்வரும் சுவாசம் அமைதல் வேண்டும். பஞ்சாக்கரத்தை விதிப்படி எண் ணுதல் பிராணாயாமம் என்பதும் விளங்கும்.

*எதை இழந்தாலும் வருந்தாதே. அது இன்னொரு வடிவில் வந்து சேரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பிராணாயாமம் செய்வதால் நாம் பஞ்சாக்கரம் ஓதுவதன் பயனை அடைவோம்.

சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகுந் திருவரு ளாமே.

-திருமந்திரம் 2715.

விட்ட எழுத்தாகிய "சி"- காரத்தை, விடாத எழுத்தோடு, அதாவது "வா"- வோடு கூட்டி வாசி எனப் பொருந்த வல்லார்களுக்கே, உயிரைக் காக்கும் வல்லமை பெற்றவர்கள் என்பதை உணர்தல் வேண்டும். இங்கே வா- என்னும் எழுத்துடன், இல்லாமல் போன சி- என்னும் எழுத்தையும் சேர்த்து "வாசி" என்னும் முழுப்பயனையும் அடைதல் வேண்டும் என்பதே கூறப்பட்டுள்ளது. வெளிச் சுவாச உட்சுவாச நிலைகள் ஒவ்வொன்றும் பன்னிரண்டு அங்குல அளவு நீளுதலைக் குறித்துள்ளது. இதன் திருமந்திரம் வருமாறு.

மட்டவிழ் தாமரை மாது நல்லாளுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லாருயிர் காக்கவல் லாரே.

-திருமந்திரம் 918.

வேதம், ஆகமம், வேதாங்கம் ஆகியவற்றை நாம் முறைப்படி ஓதினாலும், அவை யாவுமே எங்கள் சிவபெருமானின் எழுத்தொன்றாகிய சிகாரத்தில் இருப்பனவாம். இதில் சந்தேகம் கொள்ளாது அவ்வெழுத்தின் உண்மை நிலையை உணர்ந்து சாதனை செய்தால், அதுவே எம்மை முத்திக் கரை என்னும் இடத்திற்கு அழைத்துச் செல்லும் அருமையான தோணிபோல அருங்கலமாக அமையும். இதன் திருமந்திரம் வருமாறு.

அங்கமும் ஆகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றில் இருப்பது
சங்கை கெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கல மாமே.

-திருமந்திரம் 2720.

ஆன்ம எழுத்தாவது "வா"- என்பது. அருள் எழுத்தாவது "சி"- என்பது. இவ்விரண்டு எழுத்துக்களும் ஒன்று சேர்ந்து "வாசி"- என அமைதல் வேண்டும்.

நான்கு அங்குல மூச்சினை மேலும் கூட்டிக்கொள்ளின் அதுவே பஞ்சாக்கரமாகும் என்பது திருமூலர் வாக்கு.

சீயெழுத் தொன்றைச் சிந்தையிற் கருதத்
தூய நற் சுடராய்த் தோன்றுவை யென்றான்.

-திருவாக்கு.

பிராணனை வெளியேற்றிய பின் உள் எடுக்காமல் அறுபத்துநான்கு (64) மாத்திரையளவு வெளிக்கும்பகம் செய்து, பின் இடைகலை வழியாக பதினாறு (16) மாத்திரையளவு பூரித்தலும், பின் முப்பத்திரண்டு (32) மாத்திரையளவு இரேசித்தலும் ஆகிய சாதனைகள் உள்வரும்

*உன் பலத்தோடு மோதுபவன் எதிரி. பலவீனத்தோடு மோதுபவன் துரோகி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணனின் அளவினை அதிகரிக்கச் செய்யும். இதனால் இழந்துள்ள நான்கு அங்குல சிகாரமாகிய வாயு பொருந்தி அதன் அளவு பன்னிரண்டு அங்குலமாகும்.

வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்
டோமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே.

-திருமந்திரம் 573.

பிறப்பினை ஒழித்தல் வேண்டும். இந்தப் பிறவியிலேயே இறைவனையடைதல் வேண்டும். முற்பிறப்பில் செய்த தீவினைகள், இப்பிறப்பில் செய்த தீவினைகள் இவற்றிலிருந்து விடுதலை பெறுதல் வேண்டும். பஞ்சாக்கர செபம் ஓர் அருமருந்தான வழிபாடாகும். "சிவாயநம"- என் னும் ஐந்தெழுத்து மந்திரம் சிவ பஞ்சாக்கரம். சிவாயநம- என்பது சத்தி பஞ்சாக்கரம். சிகரத்தை முதலாகவுடைய சத்தி பஞ்சாக்கரமும் வினை அறுக்க வல்லது. "சிவசிவ"- என்பது சைவாகமம் கண்ட மகா மந்திரமாகும்.

---

## திருமண வரமருளும் பாவை நோன்பு

மார்கழி மாதம் முழுவதும் இறைவனுக்குரிய மாதமாக போற்றி வணங்கப்படுகிறது. மற்ற மாதங்களில் ஏதாவது ஒரு கிழமை, ஏதாவது ஒரு திதி என்றுதான் இறைவனை வழிபாடு செய்வார்கள். ஆனால் மார்கழி மாதம்தான் தினந்தோறும் இறைவழிபாட்டுக்குள் பக்தர்களைப் புகுத்தும் மாதமாகும். இந்த மார்கழி மாதத்தில்தான் பாவை நோன்பு கடைப்பிடிக்கப்படுகின்றது. கன்னிப்பெண்களால் மேற்கொள்ளப்படும் நோன்பு என்பதால் இதற்கு "பாவை நோன்பு" என்று பெயர். இந்த நாளில் திருப்பாவை, திருவெம்பாவை பாடி இறைவனை வணங்குகின்றனர்.

மார்கழி மாதத்தில், முக்கியமாக பெண்கள் ஏற்கும் விரதம் மார்கழி நோன்பு ஆகும். ஆயர்பாடியில் உள்ள கன்னியர்கள், நாட்டு முன்னேற்றத்திற்காகவும், பால் வளம் பெருகவும், நல்ல கணவரை அடையவும் இந்த நோன்பைக் கடைப்பிடித்ததாகக் கூறப்படுகிறது. கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து, மற்றப் பெண்களையும் எழுப்பி, ஆற்றங்கரை சென்று, அங்குள்ள மணலினால் பாவை போன்ற உருவம் செய்து, மலர்கள் சூட்டி, பார்வதி தேவியைப் பாடித் துதித்து வழிபட்டனர். பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒரே பெண்மணியானவரான ஆண்டாள் இயற்றிய பாவைப்பாட்டாகிய (இறைவன்மீது பாடப்பட்ட பாடல்கள்) திருப்பாவையும், மாணிக்கவாசகர் சிவபெருமான்மீது இயற்றிய திருவெம்பாவையும் பாவைப்பாட்டுக்களில் முக்கியமானவை.

மார்கழி மாதம் தேவர்களின் இரவுக் காலம் முடியும் காலம் ஆகும். இதை "உஷத் காலம்" என்றும் "வைகறைப்பொழுது" என்றும் கூறுவது உண்டு. இந்த மாதத்தில் யார் விடியற்காலத்தில் எழுந்து பக்தியுடன் பகவானைத் தொழுகிறார்களோ அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் பெறுவதுடன் ஆண்டவனின் அருளுக்கு பாத்திரமாவார்கள்.

மார்கழி மாதத்தில் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து வீதிகளில் பஜனை செய்தல் வேண்டும். திருப்பாவை, திருவெம்பாவை ஆகியவை பாட வேண்டும். மார்கழி மாதம் முழுவதும் நெய் உண்ணோம், பால் உண்ணோம் என்பார் ஆண்டாள். இவ்வாறு விரதம் இருந்து காலையில் பஜனை செய்து ஆண்டவனை வழிபட அருள் கிடைக்கும்.

மார்கழி மாத நோன்பால் உள்ளத்தையும் உடலையும் நாம் தூய்மையாக்கிக் கொள்ள முடியும். அதுமட்டுமன்றி மார்கழிமாத நோன்பு நமது பிறவிப்பயனே ஆண்டவனை அடைவதுதான் என்பதை உணர்த்துகிறது. தெய்வமே எங்களுக்கு நல்ல கணவனைக் கொடு என்பதுதான் கன்னிப்பெண்களின் பிரார்த்தனையாக இருக்கும். பாவை நோன்பு இருக்கும் பெண்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும். பொங்கல் நைவேத்தியம் வைப்பது நல்லது.

*நீ ஏழையாகப் பிறப்பது உன் தவறில்லை. நீ ஏழையாகச் சாவதுதான் உன் தவறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 50

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பிறப்புக்கள் பதின்நான்கு என்றிங்கு ஏற்கும்நீர்
மறுபடியும் மானிடராய்ப் பிறப்பீரென் றெண்ணாதீர்
எல்லாப் பிறப்பினையும் கடந்தவர் நீரதனால்
மானிடப் பிறப்பினதும் மகத்துவத்தை உணர்ந்துயர்வீர்.

02 சாபத்தால் இறந்தால்நீர் கல்லாகப் பிறந்திடுவீர்
பாவத்தால் இறந்தால்நீர் புல்லாகப் பிறந்திடுவீர்
சாபமோ பாவமோ இல்லாமல் இறந்திட்டால்
பிறவாத இறவாத பேரின்பப் பிறப்பெடுப்பீர்.

03 மறுமுனையைக் குறியாக்கி பயணிக்கும் வண்டியொன்று
கோளாறு ஏற்பட்டால் தொடங்குமிடம் திரும்பல்போல்
இறைவனையே குறியாக்கி பயணிக்கும் ஆத்மாவும்
மானிடத்தில் தவறிவிட்டால் மறுபடியும் புல்லாகும்.

04 காற்றடைத்த பையிலொன்று கவர்ச்சி குன்றிவிட்டால்
காற்றுப் போனதென்று காரியத்தை உணர்தல்போல்
ஆத்மாவின் உடலொன்றும் அசைவற்றுப் போய்விட்டால்
அழிந்ததென்று அர்த்தமல்ல அகன்றதென்றே அர்த்தமாகும்.

05 உறவுகள் எல்லாமே எங்களோடு முடிபவை
இறப்போடு எல்லாமே மறைந்து போய்விடும்
இறைவனுக்கும் ஆத்மாவுக்கும் இருக்கின்ற உறவுமட்டும்
பிறப்புக்கள் கடந்து இறைகலப்பதிலே முடியும்.

06 மானிடற்கு மானிடரே பிறக்கின்றார் என்பதனால்
மானிடமோர் மாறாத பிறப்பென்று எண்ணிடாதீர்
கல்லுக்குள் ஆத்மாவே மனுவுக்குள் பிறக்கும்
மனுவுக்குள் ஆத்மாபின் வேறொன்றாய்ப் பிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 புல்லாய்த் தொடங்கி கல்லாய் வரைக்கும்
எல்லாப் பிறப்பும் பிறந்தே உயர்ந்தீர்
உயர்ந்ததோர் மானிடத்தை உதாசீனம் செய்துபின்
உழல்கின்ற பிறப்பொன்றில் பிறந்துநீர் உழலாதீர்.

08 இறைவனை அடைகின்ற பதின்நான்கு படிகளில்
ஒன்பதாம் படியுமது மானிடப் பிறப்பாகும்
என்பதை உணர்ந்திடாமல் அன்புவழி தவறவிட்டு
முதலாம் படிக்கே பின் உரித்தாகி உழலாதீர்.

09 ஆத்மீகம் என்பதே தெய்வீகம் என்பதால்
புத்தரும் யேசுவும் நபிகளும் தோன்றினர்
நித்தமும் நீரதை உணர்ந்தே நடந்திடும்
நீரும் இறைவனின் அம்சமாய்த் தோன்றுவீர்.

10 தளத்தில் இருந்தே புறப்படும் விமானம்
தரிப்பிடம் பலதில் தரித்தே நின்றுபின்
தளத்திற்கே திரும்பும் தன்மையை ஒத்ததாம்
இறைவனின் ஆத்மா பின் இறைவனை அடைவதும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி வழுவா சான்றோர்கள் வரிசையில்

(தொடர்ச்சி...

## ஐயப்பன் வழிபாடு

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

### மணிகண்டனும் மகிஷவதியும் புலிப்பாலும்

புலிப்பாலுக்காக மணிகண்டன் கானகஞ் சென்றான். சிவபிரான் தமது பூதகணங்களை அழைத்து மணிகண்டனுக்கு உதவுமாறு பணித்தார். துர்வாச முனிவரின் சாபப்படி தமது நரை போக்கவெனத் திருப்பாற்கடலில் அமுதம் பெற்றுண்ட தேவர்கள் இன்புற்றிருந்தனர். தேவர்களைக் கொல்லவெனச் சென்ற மகிஷியின் நோக்கமறிந்த மணிகண்டன் மகிஷியைக் கொன்றான். மணிகண்டன் தங்களைத் துன்புறுத்திய மகிஷியைக் கொன்ற நன்றிக்கடனாக இந்திரன் முதலான தேவர்கள் புடைசூழச் சிவபிரான் அவ்விடம் தோன்றினார். தேவர்களுக்கு உதவியதால் மணிகண்டனுக்கு வாழ்த்துக் கூறினார். அச்சமயம் இந்திரன் ஆண் புலியாகவும் தேவர்கள் பெண் புலிகளாகவும் வடிவமெடுக்குமாறு இறைவன் பணித்தார். ஆண்புலிமீதமர்ந்த மணிகண்டன் செல்லப் பெண்புலிகள் புடைசூழ மன்னனின் அரண்மனையை அடைந்தனர்.

நகரில் புலிகள் வருவதைக் கண்ட மக்கள் பயந்து வியந்து அச்சமடைந்தனர். குடி மக்கள் பயந்து சிதறி ஓடினர். மணிகண்டன் புலிமீதமர்ந்து வருவதைத் தொலைவிலிருந்து நோக்கிய மன்னன் இவன் சாதாரண மனிதனல்ல. பன்னிரண்டு வயதில் இவன் யாரெனத் தெரியுமென அன்று முனிவர் கூறியதை உணர்ந்த மன்னன் அரண்மனையின் முற்றத்திற்கு வந்தான்.

தந்தையைக் கண்ட மணிகண்டன் புலியிலிருந்து பாலை எடுத்து அன்னைக்குக் கொடுத்து முதலில் நோயைக் குணமாக்குங்கள் பின்னர் புலிகளை அனுப்பி வையுங்கள் என்றான். மன்னன் மணிகண்டனின் கால்களில் வீழ்ந்து வணங்கிய வண்ணம் "பகவானே மேலும் என்னைச் சோதிக்க வேண்டாம். புலிகளை அனுப்பி வையுங்கள். நீங்கள் காட்டுக்குச் சென்றபின் இங்கு நடந்த சதித்திட்டம் எனக்குப் புரிந்தது. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று பணித்தான்.

இதில் மன்னிப்பதற்கேதுமில்லை. இவையாவும் என் சித்தப்படியே நடந்தன. பூமியில் என் அவதாரம் ஏன் நிகழ்ந்ததோ அப்பணி நிறைவடைந்துள்ளது. நான் தேவலோகஞ் செல்கிறேன் என்றான்.

### சபரிமலையில் ஐயப்பன் கோயில் அமைந்தது

மணிகண்டனை நோக்கிய மன்னன் பகவானே! தாங்கள் எங்களுடன் இருந்ததற்காக உங்களுக்கொரு கோயில் கட்டி வழிபட உள்ளோம். கோயில் கட்டுமிடத்தை எங்களுக்குக் காண்பிக்க வேண்டுமென்றான். அப்போது மணிகண்டன் தனது வில்லில் அம்பைத் தொடுத்து இந்த அம்பு எங்கே போய் விழுகிறதோ அந்த இடம்தான் தகுந்த இடமாகும் என்று கூறி

*தோல்வியை நேசி. வெற்றியின் விளிம்பு உன் விழியருகே தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பை எய்தார். அந்த அம்பு சபரிமலையில் விழுந்தது. அந்த இடத்தில் பதினெட்டுப் படிகளுடன் கிழக்கு நோக்கிய வண்ணம் கோயிலையும் தனக்கும் புறத்தம்மனுக்கும் ஒரு மாளிகை கட்டும்படி கூறிவிட்டு மணி கண்டன் தேவலோகஞ் சென்றான்.

மணிகண்டனின் சித்தப்படி இராச சேகர மன்னன் இடையறாது 18 படிகளுடன் ஐயப்பனின் ஆலயத் திருப்பணியையும் அவர் கூறிய மாளிகைகளையும் கட்டி நிறைவு செய்தான். மணிகண்டன் முதன் முதல் அம் பெய்து குறிப்பிட்ட இடத்திலமைந்த சபரி மலை ஐயப்பன் ஆலயமே இராசசேகர மன்ன னால் கட்டப்பட்டது. தொடர்ந்து பக்தர்களின் வழிபாடும் பூசை நடைமுறைகளும் நடை பெற்றன.

## ஐயப்பன் ஆலயத்தின் பிற்கால வரலாறு

கேரளாவில் பரசுராமரால் நிறுவப்பட்ட 18 சாஸ்தா ஆலயங்களுள் சபரிமலை ஐயப்பன் ஆலயம் இன்று பிரபலமடைந்துள் ளது. கேரளாவில் சபரிமலை ஐயப்பன் ஆலயத்துடன் பகவதி (சக்தி) மற்றும் குரு வாயூரப்பன் ஆலயங்களுமே மிகப் பிரபல மானவை. இந்தியாவில் மேலும் பல மாநிலங் களில் ஐயப்பன் ஆலயங்கள் அமைந்த போதும் கேரளாவில்தான் மிகக் கூடுதலாகப் பிரபலமான ஆலயங்கள் அமைந்துள்ளன. இதனால் கேரளாவின் புனிதத்தையும் பக்தி யையும் அறியமுடிகிறது.

சபரிமலை ஐயப்பனின் அற்புதத் தினால் ஆரம்ப காலம் முதல் சிறப்பாகவே இவ்வாலயம் இயங்கி வந்தது. நம்பூதிரி வேதி யர்களால் பயபக்தியுடன் பூசை வழிபாடு களும் சிறப்பாக நடைபெற்றன. சிறப்பான விக்கிரகங்களும் புனிதமான ஆலயப் பொலி வும் பக்தர்களின் பக்திபூர்வமான வழிபாடும் பாரெங்கும் பரந்து வாழும் சுற்றுலாப் பயணி களையும் கவர்வதில் வியப்பில்லை.

ஏறத்தாழ 1100 வருடங்களுக்கு முன் கேரளாவில் வாழ்ந்த பிரபலமான கொள்ளைக் காரன் உதயணன் என்பவன் ஐயப்பன் ஆலயத்தையும் நோக்கினான். இவ்வாலயத் திலுள்ள விக்கிரகங்கள் மற்றும் பெறுமதியான தளபாடங்களையும் கொள்ளையடித்தான். மேலும் ஆலயத்தையும் இடித்தழித்ததுடன் பூசகரான விஜயன் என்னும் நம்பூதிரியையும் கொன்றான். அச்சமயம் தந்தையுடன் உடன் நின்ற ஐயந்தன் என்னும் பாலகன் இதனை நேரிற் கண்ணுற்றதால் பதைபதைத்து இறை அருள் தூண்டத் தமது துக்கமேலீட்டினால் பாதகனான உதயணனைக் கொன்று சபரி மலை ஐயப்பன் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதாகவும் சபதமிட்டான்.

காலங்கள் கடந்தன. பாலகன் உற வினர்களின் ஆதரவுடனும் ஐயப்பனின் பாது காப்புடனும் வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்தான். தமது சிறப்பினால் பந்தன நாட்டு இளவரசியுடன் மையல் கொண்டான். இறையருட் சித்தப்படி காதலர் இருவரும் ஒரு மனத்துடன் வேறிடஞ் சென்று திருமணஞ் செய்து இனிதே வாழ்ந்தனர். தம்பதியினர் ஐயப்பன் மீதிருந்த பக்தியால் ஒரு மழலை யைத் தருமாறு வேண்டினர். அவர்களின் இனிய இல்லற வாழ்வில் ஒருநாள் அசரீரியாக சாஸ்தா தாம் தம்பதியினரின் மகனாகப் பிறந்து தந்தையின் சபதத்தை நிறைவேற்றுவ தாகவும் கூறினார். உரிய காலத்தில் பொன் னம்பலமேடு என்னுமிடத்திலுள்ள குகை ஒன் றில் ஆண் மகவு பிறந்தது. இப்பிள்ளைக்கு ஐயப்பன் எனப் பெயர் சூட்டிப் பெற்றோர் மிக்க பாசத்துடன் வளர்த்து வந்தனர். ஐயப் பன் வயது வந்ததும் பந்தன நாட்டு

*வாழ்க்கையில் திரும்பப்பெற முடியாதவை உயிரும் நேரமும் சொற்களும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனிடம் பணியாற்றி வந்தான். இறையருட் சித்தப்படி எதிரிற் தென்பட்ட உதயணனை ஐயப்பன் தனது உதவியாட்களுடன் சேர்ந்து கொன்றான். வாலிபனான ஐயப்பனின் சிந்தனைப்படி சபரிமலையில் சாஸ்தாவுக்கான ஆலயப்பணியைத் தொடர்ந்து நிறைவேற்றினர். உதயணனைக் கொன்றதும் படைவீரர்கள் யாவரும் தத்தமது ஆயுதங்களை "சரங்குத்தி" என்னுமிடத்தில் ஒப்படைத்துச் சரணாகதி அடைந்தனர். இறைவனிடம் தம்மை அர்ப்பணித்துச் சரணாகதி அடைவதை இன்று வரை யாவரும் பின்பற்றும் நடைமுறையாகவே இது அமைகிறது.

யாவரும் ஆசாரசீலராக இறைவனை வேண்டி நின்றனர். ஐயப்பன், ஆலயத்திலமைந்த 18 படிகளையும் தாண்டிக் கருவறையை நாடினான். அச்சமயம் ஐயப்பன், தாமே ஒரு ஒளிவட்டமாகி கருவறையிலமைந்த மூர்த்தியுடன் இரண்டறக் கலந்தான். இவ்வரிய நிகழ்வின் மூலம் மானிடராகப் பிறந்து செயற்கரியன செய்து தெய்வமாக உயர்ந்த சிறப்பு ஐயப்பனுக்கே உரியது. இதனை யாவரும் நன்கறிந்ததால் சபரிமலையில் ஐயப்ப வழிபாடு நன்கு சிறப்படைந்தது.

சபரிமலை ஐயப்பன் கோயில் கேரளாவின் மலைச்சாரலில் அடர்ந்த காடுகளின் மத்தியில் அமைந்துள்ளது. அந்நியராட்சிக் காலத்தில் இந்த ஆலய வழிபாடும் நலிவடைந்தது. காடுகளும் ஓங்கி வளர்ந்தன. பல்லினக் கொடிய வனவிலங்குகளும் கொடிய விசப் பாம்புகளும் குடிகொண்டன. இதனால் போக்குவரத்தும் பயங்கரமானது. சன நடமாட்டமே இல்லாமற்போனது. வன பரிபாலன அதிகாரிகள் மட்டும் இக் காடுகளினூடாக அவ்வப்போது வந்து சென்றனர். இறைவனையே எண்ணி வழிபட ஏங்கிய பக்தர்களின்மீது ஐயப்பனின் கடைக்கண் வீச்சில் இவ்வாலய வழிபாட்டிற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு முன் இறையருள் கைகூடவும் சபரிமலை ஐயப்பன் வழிபாட்டில் முன்னேற்றம் காணப்பட்டது. ஆலயம் புனர்நிர்மாணஞ் செய்யப்பட்டது. வழிபடுவோருக்கான சில வசதிகளை ஆலயம் மேற்கொண்டது. இந்திய மக்கள் மட்டுமன்றி வெளிநாட்டு மக்களும் கூடுதலாக வருவதால் மாநில அரசு மத்திய அரசுமூலம் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் வசதிகள் படிப்படியாகச் சிறப்படைந்தன. இவ்வாலயத்தின் புதுமையும் அற்புதங்களும் நன்கு பிரபலமடைந்தது. இதனால் உலகிலேயே சிறந்த ஐயப்ப வழிபாட்டு ஸ்தலமாகச் சபரிமலை ஐயப்பன் ஆலயம் துலங்குகிறது. இதனால் பாரெங்கும் பரந்து வாழும் ஐயப்ப பக்தர்களின் வசதிக்கான பல பணிகளும் வருடா வருடம் அபிவிருத்தியடைந்து வருகின்றன.

## சபரிமலை ஐயப்பனின் அற்புதம்

ஐயப்பனின் புதுமைகள் முன் தென்பட்டாலும் பெருவிழாவுக்கான விரதகால நிறைவில் ஐயப்பனின் மகரஜோதி வானில் தென்படும். இந்த மகரஜோதி ஏனைய விண்மீன்களைப் போல விண்ணில் பிரகாசிப்பதில்லை. ஐயப்பன் தனது தூய பக்தர்களின் தரிசனத்திற்காக ஒரு சில நிமிடங்களில் மட்டும் தோன்றி மறையும் அற்புதம் தெய்வீகச் சிறப்பாகும். இவ்வாலய அறங்காவலர்கள் ஐயப்பனின் பெருங்கருணை பாரெல்லாம் பரந்து வாழும் ஐயப்ப பக்தர்களும் கண்டு மகிழும் வண்ணம் தேசிய தொலைக்காட்சி மூலம் வெளிப்படுத்துவர். இவ்வரிய தெய்வீகக் காட்சியைக் காண பக்தர்கள் பல இலட்சக் கணக்கில் கோவிலை நாடி வரும் மரபு இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. இந்து மத மக்கள் மட்டு மன்றி இன மத பேதமின்றிப் பலர் உல்லாசப் பிரயாணமானாலும் பயபக்தியுடன் தரிசனைக்கு வருவது சபரிமலை ஐயப்ப சுவாமியின் பேரருளேயாகும்.

ஐயப்ப சுவாமியின் பெருமையாலும் அற்புதத்தினாலும் கவரப்பட்ட தூய பக்தர்கள் வருடந்தோறும் விரத நாட்கள் யாவற்றிலும் ஐயப்பனைத் தரிசிப்பதன் பேரில் பாரெல்லாம் பல ஐயப்பன் ஆலயங்களை அமைத்து நிறை வான தூய பக்தியுடன் வழிபடுகின்றனர். எமது இலங்கையிலும் குறிப்பாக யாழ் மண்ணில் கிராமங்கள் தோறும் பல ஐயப்பன் ஆலயங்கள் அமைத்து வழிபடுவதை யாவரும் அறிவர்.

ஐயப்பனின் திருவருளும் வழிபடு வோரின் தூய சமய பக்தியும் வழிபாட்டின் சமயத் தத்துவமும் உலகிலேயே சிறப்பான வழிபடு நிலையமாகச் சபரிமலை ஐயப்பன் கோயில் இன்று நன்கு பிரகாசிக்கிறது. மணி கண்டனின் ஆணைப்படியே முதன்முதல் இராஜசேகர பாண்டிய மன்னன் சபரிமலையில் 18 படிகளுடன் கூடிய சிறப்பான கோயிலைக் கட்டினான். வருடந்தோறும் பக்தர்கள் 41 நாட் கள் விரதமிருந்து தூய்மையாக வழிபடுவது அற்புதமே. கோயிற் காணிக்கையாக நெய், தேங்காய் மற்றும் பொருட்களை ஒரு முடிச் சாகவும் பிரயாணத்திற்காக தமக்கு வேண்டிய பொருட்களை வேறொரு முடிச்சாகவும் கட் டித் தலைமீது சுமந்து வருவர். இருமுடி கட்டி ஐயப்பன் ஆலயம் நோக்கிவரும் பக்தர் களின் தூயபக்தி சிறந்த ஐயப்பன் வர லாறென இன்றும் போற்றப்படுவது இறை அருளாகும்.

*(முற்றும்)*

## சிந்தைதனில் நிறைகின்றாய் சண்முகனே!

அன்பர்களின் இதயக் குகைதனிலே இருப்பதனால் "குகன்" என்றும்
என்றும் இளமையாய் இருப்பதனால் "முருகன்" என்றும்
தந்தைக்கு உபதேசம் செய்ததனால் "தகப்பன்சாமி" என்றும்
தந்தைக்குக் குருவாய் அமைந்ததனால் "குருநாதன்" என்றும்
ஆறு குழந்தைகளாய் உதித்து ஒன்று சேர்க்கப்பட்டதனால் "கந்தன்" என்றும்
ஆறு முகங்கள் உடையவன் ஆனதனால் "ஆறுமுகன் என்றும்
கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததனால் "கார்த்திகேயன்" என்றும்
கார்மேக வண்ணனின் மருகன் ஆனதனால் "மால்மருகன்" என்றும்
சரவணப்பொய்கையில் உதித்ததனால் "சரவணபவன்" என்றும்
பிரம்மத்தின் பொருளாக இருப்பதனால் "சுப்பிரமணியன்" என்றும்
வடிவுமிகு வேலினை உடையவனானதனால் "வடிவேலன்" என்றும்
படைகளின் தலைவனாய் அமர்ந்ததனால் "சேனாதிபதி" என்றும்
தண்டாயுதத்தை ஏந்தியிருப்பதனால் "தண்டாயுதபாணி" என்றும்
தொண்டைமான் ஆற்றங்கரை வீற்றிருப்பதால் "சந்நிதியான்" என்றும்
சிவசுவாமிக்குப் பிரணவப் பொருளுரைத்ததனால் "சுவாமிநாதன்" என்றும்
சிவகுமாரனே உனை அழைத்தழைத்துச் சிந்தை நிறைகிறோம் குமரனே!

**-ப. மகேந்திரதாசன்-**

*வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை பொலியும் அருணகிரிநாத சுவாமிகள்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

யாழ்ப்பாணம் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் தாய்வீடு எனப் போற்றி வணங்கப்படுவது மதுரை ஆதீனமாகும்.

1966ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நல்லூரில், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களால், மதுரை ஆதீன முதல்வரின் ஆசியுடனும், உத்தரவு அனுமதியுடனும் நல்லை ஆதீனம் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை மதுரை ஆதீனம் நல்லை ஆதீனம் ஊடாக இலங்கை வாழ் மக்களின் ஆன்மீக வாழ்விற்கு ஈடிணையற்ற வரமாக அமைந்து விளங்குகின்றது.

மதுரை ஆதீனமானது இந்தியாவின் ஆன்மீக உயிர் நாடியாக விளங்குவதற்கு மூலகாரணம், அதனது ஆன்மீக வழி நடத்தலேயாகும். இந்தியாவைச் செப்பனிட்டு, சோராமல் கொள்ளாமல் அதனை ஜனநாயக நேர்வழியில் பயணிக்கச் செய்யும் பாரிய பொறுப்போடு மதுரை ஆதீனம் இயங்குகிறது. அதற்கப்பால் அல்லற்படும் மக்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் ஆற்றுவதில் முன்னிற்கிறது. சைவமும் தமிழும் இணைபிரியாமல் தழைத்தோங்க இரவு பகலாகப் பாடுபடுகிறது.

இந்நிலையில், மதுரை ஆதீனத்தின் 292 ஆவது குருமகா சந்நிதானமாக அலங்கரித்த, ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அண்மையில் பரிபூரண சிவமயமானதையிட்டு இலங்கை வாழ் சைவ மக்கள் அவரது சிவப்பேறு குறித்து, ஆழ்ந்த பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளார்கள். நாமும் அந்தப் பெரிய மகானுக்காக மௌனமாகப் பிரார்த்திப்போமாக.

ஆயிரத்து ஐநூறு (1500) ஆண்டுகள் பழமை வாய்ந்த, தென்பாண்டி நாட்டின் தலையாய ஆதீனமாக மதுரை ஆதீனம் மிளிர்கிறது. இதில் 292ஆவது குருமகா சந்நிதானமாக, சுமார் அரை நூற்றாண்டு காலம் மதுரையை மட்டுமல்ல முழு இந்தியாவையுமே வெல்ல வைத்துள்ளதுடன், இலங்கை வாழ் தமிழ் மக்களை உயிராக நேசித்த குருமகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் உலகின் கருணைக்கும் இரங்கலுக்கும் பிரார்த்தனைக்கும் பாத்திரமாகின்றார்.

திருஞானசம்பந்த சுவாமிகளினால் தோற்றுவிக்கப்பட்ட இந்த ஆதீனத்தின் 293 ஆவது சந்நிதானமாகப் புதியவர் பொறுப்பேற்ற நிலையிலே மதுரை ஆதீனம் பாரம்பரியங்களோடு சைவத்தையும் தமிழையும் பேணியும் போற்றியும் பாதுகாக்கும் என்று நம்பலாம். தமிழ், சமஸ்கிருதம் ஆங்கிலப் புலமையால் மதுரை ஆதீனம் உலகத்தவரால் வசீகரிக்கப்படுகிறது. வரமாக்கப்படுகிறது. சிவாகம சேகரம், சிவலிங்க பிரதிஷ்டாவிதி மற்றும் சமய ஒழுக்க ஒழுங்குவிதிகள், ஆசார சீலம், வழிபாட்டு முறைகள், மஹோற்சவ நடைமுறைகள் ஆகிய விளக்கங்கள் மூலம் எமக்குப் பேறாகியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, குருபூஜைகள், விழாக்கள்,
தீட்ஷை அனுட்டானங்கள்,
வேத ஆகம நடைமுறையில் ஒழுகுதல்,
பண்ணிசை ஓதல் பயிற்சி,
சைவ சமய போதனைகளும், ஒழுகுதலும்,
கதாப்பிரசங்கம் உபந்நியாசம்,
புராணபடனம் தெளிவுறச் செய்தல்,
சரியை கிரியைத் தொண்டுகள்,
குடமுழுக்கு ஒப்பேற்றல்,
ஓதுவார்களைப் பராமரித்தல்,
ஓதுவார்களை நியமித்தல்,
பதிப்பித்தல், அச்சிடுதல்,
ஆசீர்வாதமளித்தல்

போன்ற இன்னோரன்ன ஆன்மீகப் பாதையில் திளைத்து மக்களுக்கு மான்மியம் செய்தல். மந்திரமாகுதல் மற்றும் ஆன்மீக வழிக்கு வசீகரித்தல் ஆகியன ஆதீனங்களால் வெல்லப்படுகின்றன.

**தென்னவனே கதிர்காமம் உறை வேலவனே**

உன்னடியே வேண்டி உன்னடியே நாட
உனதருளைத் தரவேண்டும் வேல் முருகா
கண்ணயர்ந்து போகும் காலன் வரும் வேளை
கருதி யெமை ஆளவா வேல் முருகா
(உன்னடியே)

மன்னவனும் நீயே மயில் வாகனமும் உனதே
மண்ணின் துயர் வாழ்க்கை வழி அறியேன் ஐயா
விண்ணவரும் போற்றும் விஸ்வவடிவேல் நாயகா
விளையாட்டாய் எமை இங்கு விடவேண்டாம் ஐயா
(உன்னடியே)

பொன் நகராம் கதிர்காமத் தலம் காணவே
புல்லரிக்கும் மேனி இதை அறிவேன் யான் முருகா
என்ன எது வரினும் என்குரு நீதானே முருகா
ஏழ்மை அடியேனையும் பார்த்திடையா முருகா
(உன்னடியே)

கனவினிலே தோன்றும் காட்சி அது போலக்
கண்ணெதிரே வந்து காட்சி காட்டு முருகா
மன்னவரும் வணங்கும் மயில் ஏறும் பெருமானே
தென்னவனும் நீயே, வணங்கும் கதிர்காமம் உறைவோனே.
(உன்னடியே)

**-சின்னப்பு தனபாலசிங்கம்-**

அறியாமையுடன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட அறிவுடன் ஒருநாள் வாழ்வதுமேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

பிரார்த்தனை என்பது இறைவனை நோக்கிச் செய்யப்படுவதொன்றாகும். உள்ளங்கள் ஒரே பாங்கில் அமையும்போது, பிரார்த்தனை பொதுவானதாக அமையும். நோக்கம் ஏகோபித்து இருக்கும்போது ஒற்றுமை நிலவும், அன்பின் ஐக்கியம் ஏற்படும். எண்ணங்கள் இணையும், இணக்கங்கள் நிறைவெய்தும். உயிர்கள் அனைத்தின் நலனுக்காகப் பிரார்த்திப்பதும் பிரார்த்தனைதான், நாம் நமது நலனுக்காகப் பிரார்த்திப்பதும் பிரார்த்தனைதான்.

பிரார்த்தனை இருவகைப்படும். காமியப் பிரார்த்தனை, நிஷ்காமியப் பிரார்த்தனை என்பன அவை இரண்டுமாகும்.

உலக சம்பத், ஆரோக்கியம். சுவர்க்க பிராப்தி, ஆயுள் ஆகியவற்றை வேண்டுதல், காமியப் பிரார்த்தனையுள் அடங்கும். பக்தி, ஞானம், அருள், வைராக்கியம், விவேகம், முக்தி ஆகியவற்றை வேண்டுதல் நிஷ்காமியப் பிரார்த்தனையுள் அடங்கும். ஆத்ம சாதகர்களுக்குரியது, நிஷ்காமியப் பிரார்த்தனையே ஆகும்.

மணிவாசகப் பெருமான் தனது தேனினும் இனிய திருவாசகத்தில், பிரார்த்தனைப் பத்து என்றொரு பகுதியை அருளிச் செய்துள்ளார். இதனை சுவாமிகள் திருப்பெருந்துறையிலே பாடியருளியுள்ளார்.

அடிகளாரை எம்பெருமான் குருவாக வந்து திருப்பெருந்துறையிலே, குருந்த மர நிழலிலே ஆட்கொள்கின்றார். மணிவாசகர் செய்த புண்ணிய பலன், ஆண்டவனைக் குருவாக அடையும் பாக்கியம் கிடைக்கின்றது. இந்நிலையில் சிவஞானபோதம் என்பதன் விளக்கம் அடிகளாருக்கு இறைவனால் போதிக்கப்படுகின்றது.

குரு உபதேசம் முடிந்த பின், எம்பெருமான் தனது கணங்களோடு மறைந்து விடுகின்றார். மணிவாசகர் தனித்து விடப்படுகின்றார். அவரை எம்பெருமானது பிரிவு வாட்டுகிறது. துயர் தொடர்கின்றது. இருப்பினும் அவரது உள்ளம் ஆண்டவனின் கோயிலாக அமைகின்றது. பக்திப் பெருக்கெடுத்து ஓடும் பக்தர்களது உள்ளமே ஆண்டவன் ஆலயமாக அமைகிறது என்பது கோட்பாடு. அங்கே இறைவன் சான்னித்தியமாகின்றான்.

“காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக, வாக்கையும் மனதையும் ஒன்றுபடுத்துவது யோகம். பேசியதையே மனதில் கொள்ள வேண்டும். மனதில் கொண்டதையே பேசவும் வேண்டும். உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுபவன், அருளுக்குப் புறம்பாகின்றான். எனவே வாக்காலும் மனதாலும் உலக ஞானத்தோடு நல்லிணக்கம் ஏற்பட வேண்டும். காலத்தை நன்கு பயன்படுத்துவது கடவுள் வழிபாடாகும். காரணம், கடவுள் கால சொரூபியாக உள்ளார். சத்தியம் பேசுதலும் ஒருவித பிரார்த்தனைதான். குரு பக்தியும் ஒப்பற்ற பிரார்த்தனையாக அமைகின்றது.

குரு வடிவாக வந்து தன்னை ஆட்கொண்ட எம்பெருமான், தன்னை உடன் அழைத்துச் செல்லாததையிட்டு மணிவாசகப் பெருமான் உருகிப் பாடியவைகள் எத்தனை!!

*உருவத்துக்குத்தான் முக்கியத்துவம் என்றால் யானைதான் காட்டுக்கு ராஜாவாகி இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையருள் தனக்கு எளிதாகக் கிடைத் தமையை, அதாவது குதிரை கொள்ளப் பயணம் செய்த தன்னைக் குருந்தமர நிழலிலே குருவடிவாக எழுந்தருளி ஆட்கொண்ட அதி சயத்தை திருப்பெருந்துறையிலே அற்புதப் பத்தாகப் பாடியருளுகின்றார் மணிவாசகர்.

பிறவிப் பிணி என்பது பரமன் அருளா லேயே நீங்க வேண்டும். நிலையற்ற பல செய்த என்னை, நிலையான நீ வந்து ஆட் கொண்ட விந்தையை, பரமானந்தத்தை என்ன வென்று சொல்லுவேன்? என்கிறார் அடிகளார்.

பிரார்த்தனையால் பெறப்படுவது சிவா னந்தம் என்னும் தேன், இதனைப் புசிக்கப் புசிக்க அது தெவிட்டாது. இதனை யான் புசிக்க நேர்ந்தால் எனது நல்வினை தீவினை யாவும் பொசுங்கிப்போம். பஞ்ச பூதங்களோடு எமது உடலும் வெந்துபோம், எஞ்சி நிற்பது என்ன? நீறு போன்ற சிவானந்தமே. இது அடிகளார் அநுபவ வாக்கு.

சிவானந்தம். இது முக்தியை நல்கின் றது. சிவன் என்னும் பரிபூரணனோடு, அற்ப னான என்னை கலக்க வைக்கிறது. இக் கருணைக்கு யான் எத்துணை கைம்மாறு செய்வேன்!

மும்மூர்த்திகளும், தேவரும், ஆதித் தியர்களும், வசுக்களும், வணங்கவும், கட் புலனுக்கப்பால் நின்று அப்பரம்பொருள் அருள் மழையாக மேலிருந்து எனை நோக்கிக் கீழ் இறங்கி ஆட்கொள்ள குதிரை மேல் சேவகனாய் வந்ததை, இந்த இன்னருளை என் என்பேன்! ஏதென்பேன்?

இறைவன் ஒருவனே அருமருந்து, அவனே வைத்தீஸ்வரன், சர்வரோக நிவா ரணன் ஆனால் அந்த வைத்தியனை யாம் எளிதில் பெற முடியுமா? முடியாதா? அவனை வழிபட வேண்டும். பிரார்த்திக்க வேண்டும். தியானிக்க வேண்டும். தோத்தரிக்க வேண்டும். இந்த வைத்தீஸ்வரனையே உமாபதி சிவாச் சாரியார் தனது அருள் நூலாகிய திருவருட் பயனில் "மன்னுபவம் தீர்க்கும் மருந்து" என்றார்.

"உன்னுமுளது ஐயமிலது உணர்வா ஒவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து"

இறையைச் சிந்திக்கச் சிந்திக்க பக் குவம் கிடைக்கின்றது. பக்குவம் பெற இரும் பும் காந்தமாகின்றது. சிவயோகம் சித்திக் கின்றது. அஞ்ஞானம் அகல்கின்றது. ஞானம் உதிக்கின்றது. எது நிலையானது, எது நிலை அற்றது என்ற வேறுபாடு புரிய வருகின்றது. இதற்கெல்லாம் தேவை வழிபாடு, பிரார்த் தனை. வழிபட்டவன் வழியை அறிகின்றான். எதற்கு வழி? நிலையான பேரின்பத்திற்கான வழி. கற்பகத் தருவான கடவுளைக் காணும் வழி. பாவங்கள் அணுகாத புண்ணிய வழி. பாவம் அறுக்கும் பண்பு வழி. வனாந்திரத்தில் பயணிப்பவன் பூஞ்சோலையை அடையும் வழி. உள்ளம் ஆண்டவனின் ஆலயமாக அமையும் வழி. இந்த வழியின் முடிவே எல்லையற்றது. பேரின்பம், அதுவே எமது ஆன்மீக இலட்சியம். எனவே, எமது அன்றாட வாழ்வில் யாம் எதைச் செய்யாது, தவறினும் எம்பெருமானை இமைப்பொழுது தன்னும் பிரார்த்தனை செய்வதைத் தவறவிடாதிருக்க சங்கற்பம் செய்வோம்.

இமைப்பொழுதும் எந்நெஞ்சில் நீங்கா தான் தாள் வாழ்க.

---

*அகங்காரம் என்பது அரக்க குணம். பதவியாலும், பணத்தாலும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் அகங்காரத்தால் தன்னை மறந்து செயற்படுகிறார்கள். அகங்காரம் மனிதனை இழிநிலைக்குத் தள்ளிவிடும். நீ மற்றவர்களை மரியாதையாய் நடத்தினால்த்தான் மற்றவர்களும் உன்னை மதிப்பார்கள்.*

***உலகில் தேடித் தேடி அலைந்தாலும் மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்களவர்களின் ஆளுமை அடையாளங்கள் குருக்களின் "என் சரிதம்" நூலினை முன்வைத்து சில குறிப்புக்கள்

– திரு கௌ. சித்தாந்தன் அவர்கள் –

குருக்களவர்களின் நூல்கள் எட்டு வரையிலுண்டு. இவை சமஸ்கிருத மொழி, வரலாறு, கிரியைகள், சமயம், பண்பாடு என் பவை தொடர்பானவை. சமஸ்கிருத இலகு போதம் பகுதி-I, பகுதி-II, வடமொழி இலக் கிய வரலாறு- முதற்பாகம் - வைதிக இலக் கியம் (1962), சைவத் திருக்கோயிற் கிரியை நெறி (1963), இந்துப் பண்பாடு சில சிந்தனை கள் (லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை (1985 ஆகஸ்ட் 9), ஸ்ரீ சக்கரபூஜை- ஸ்ரீ வித்யாசபர்யா பத்ததித் தொகுப்பு, சமஸ்கிருத கிரந்தாட்சர இலகு போதம், என் சரிதம் என்பனவாகும். இவற்றிற் பல குருக்கள் வாழும் காலத்திலேயே இரண்டு பதிப்புக்கள் பெற்றவை. வடமொழி இலக்கிய வரலாறு இலங்கை சாகித்திய அக்கடமி பரிசு பெற்றது. தமது நூல்கள் பற்றி குருக்கள் தமது சரிதையில் பெரிதும் குறிப்பிடவில்லை. உரிய நூல்களின் முன்னுரையிலே வேண்டிய குறிப்புக்கள் உள்ளமையால் குருக்கள் தமது சரிதத்தில் குறிப்பிடாது விட்டிருக்கலாம். சமஸ் கிருத பாடத்தைச் சிறப்பாகக் கற்று அதிலே புலமை பெற்றமையால் அப்புலமையினைக் கொண்டு புகழ்பூத்த வடமொழி இலக்கிய வரலாறு (1962) முதற்பாகத்தை எழுதினார். இதிலே உள்ள நால்வகை வேதங்கள், பிரா மணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் என்பன சமஸ்கிருதங்கள் கற்போர்க்கு மாத்திர மன்றி இந்துநாகரிக மாணவர்களாகிய எமக் கும் பெரும் பயனளிப்பன. குருக்களின் இந்த நூலிலுள்ள உபநிடத விடயத்தை முதலிலே பார்த்துத்தான் கி. லக்ஷ்மணன், T.M.P. மகா தேவன் முதலானோரின் தத்துவ நூல்களை விளங்கிக் கொண்டேன். வடமொழி இலக்கிய வரலாறு- செம்மொழிக்காலம் (1967) எழுதிய நவாலியூர் சோ. நடராசன் (1910- 1988) அவர் களும் குருக்களின் இந்த நூலைப் பாராட்டி யதுடன் தமது நூலை அவருக்குச் சமர்ப் பணமும் செய்தார்.

வடமொழி இலக்கிய வரலாற்று நூலு டன் எமக்கு மிகவும் உபயோகமான நூலாக விளங்குவது குருக்களின் சைவத் திருக் கோவிற் கிரியைநெறி (1963) நூலாகும். இந்நூல் குருக்களின் கலாநிதிப்பட்ட ஆய்வின் விளைவு, அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக் களவர்களது சைவாலயக்கிரியை நெறி தொடர்பான பல நூல்களிலே தோத்திரங்கள், சாத்திரங்கள் என்பனவும் சான்றாகக் காட்டப் படும். கைலாசநாதக் குருக்களின் நூலிலே இவ்வாறில்லை. இந்நூல் சைவசமயம், இந்து நாகரிகம் கற்போர், கற்பிப்போர்க்கு மாத்திர மன்றி சைவாலயக் குருக்கள்மார்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் பயனுள்ளதாக இருந்ததென்பதனை பிரம்மஸ்ரீ ஏ. குமாரசுவாமிக் குருக்கள் (1930-1971), சிவஸ்ரீ சு. இராஜேந்திரக்குருக்கள் (1932 - 2006), கலாநிதி பண்டிதர் க. வைத்தீஸ்வரக் குருக்கள் (1916-2015) முதலானோர் இந்த நூலினைப் பக்குவமாகப் பேணி வைத்திருந்தமை காட்டுகின்றது.

அடுத்து, குருக்களது குடும்பம், பிள்ளைகள் பற்றி சுருக்கமாக நோக்குகையில் நூலின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை ஆங்காங்கே அவர்களின் தொடர்புகளும் பெருமைகளும் கூறப்படுகின்றன. குருக்கள் தமது துணைவியாகிய திரிபுரசுந்தரி அவர்களைப் பிரிந்திருந்த நாட்கள் குறைவென்று எழுதி உள்ளார். இருவருக்கும் பிறந்த நன்மக்கள் ஸ்ரீதரசர்மா அவர்களும் கௌரிசர்மா எனும் இருவருமாவர். குருக்கள் ஓய்வின் பின்னர் மரணிக்கும் காலத்திலும் தமது மகள் ஸ்ரீமதி கௌரி விநாயகமூர்த்தி சர்மா அவர்களுடனேயே பந்தபாசத்துடன் வாழ்ந்தாரென்று தெரிகிறது. ஆச்சிரம தர்மக் கோட்பாட்டின் நிலை நின்று இவர் வாழ்வை நோக்கினால் வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன கூட இவருக்குப் பொருந்தவில்லை என்பதினை 1999ஆம் ஆண்டு இவரின் துணைவியார் இறந்தபின் அதனால் அவர் மிகுந்த துயரத்திற்குள்ளாகி 2000ஆம் ஆண்டிலே காலம் சென்றமை காட்டுகிறது. தம் வாழ்நாளின் இறுதிக்கால கட்டத்திலே அவர்மனம் நன்கு பரிபக்குவம் அடைந்துவிட்டதனை இவர் குறிப்புக்கள் நன்குணர்த்துகின்றன.

ஏபிரகாம் மாஸ்லோ அவர்கள் மனிதனுடைய தேவைகளை உடலியல் தேவைகள், காப்புத் தேவைகள், அன்புறவுத் தேவைகள், கணிப்புத்தேவைகள், சுயதிறனியல் தேவைகள் என ஐந்தாக வகைப்படுத்தி அவை பற்றி விளக்கியிருக்கின்றமையைக் குருக்களின் சரிதத்துடன் பொருத்திப் பார்ப்பது பயனுள்ளதாகத் தெரிகிறது. இவற்றிலே முதல் நான்கு தேவைகளையும் குருக்கள் தமது கர்மயோக, பக்தியோகச் செயற்பாடுகள் மூலம் நிறைவு செய்து Self Actualization எனும் சுயதிறனியல் தேவை நிறைவிற்கு வந்தார் என்பதினை, "உயிருடன் வாழும் வரை எனக்கென வாழாது மற்றவர்க்கு பயன் படக் கூடிய வகையில் வாழ இனி ஆசைப்படுகிறேன். எனக்கு பணம், புகழ் இரண்டிலும் ஆசை போய் நெடுநாட்கள் ஆகிவிட்டது. என் மனம் அம்பாளுடைய அனுக்கிரகத்தையே நாடி நிற்கிறது" (என்சரிதம், ப. 129.) எனும் நிறைவு வரிகள் நன்குணர்த்துகின்றன.

இந்து நாகரிகம் என்பது க.ந. வேலன் அவர்கள் கூறுவது போன்று, "இந்து சமயமும் இந்து தத்துவமும் வளர்த்த நாகரிகம்" (இந்து நாகரிகம் ஒரு காட்சி, இந்து தர்மம், 1979.) மட்டுமன்று, இது மொழி, கல்வி, வரலாறு, கலைகள், இலக்கியம் போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்ட விரிந்து பரந்த துறையாகும். குருக்களவர்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகி வந்து ஓராண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்து நாகரிகத் துறையின் தொடர்ச்சியின் வளர்ச்சிப் பேறாகவே அவர் ஓய்வு பெற்று முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் எங்களுக்கென்றொரு இந்துக்கற்கைகள் பீடம் கிடைத்தது. உண்மையில் இந்தப்பீடம் குருக்கள் பணியாற்றிய காலத்திலேயே கிடைத்திருக்க வேண்டியதொன்றாகும்.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி வரலாற்றிலே பௌத்த நாகரிகமும் பௌத்த கற்கைகள் பீடமும் எங்களைவிட எவ்வளவோ காலத்திற்கு முன்னரே சிங்கள சகோதரர்களுக்குக் கிடைத்துவிட்டன. பிக்குமார்களே தொடக்கத்திலே இவற்றின் தலைமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடத்திலே அமர்ந்திருந்தனர். 1968ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பிலே இந்து நாகரிக பாடம் தொடங்கப்படுவதற்கு பேராசிரியர், ஓ.எச்.டீ.ஏ. விஜயசேகரா அவர்களதும் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களதும் பெருமுயற்சியே காரணமென்று இப் பல்கலைக்கழகத்திலே 1970ஆம் ஆண்டு இந்து நாகரிக மூன்றாம் வருட மாணவர்கட்குக் கற்பித்த பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் கூறியதைக் கேட்டிருக்கிறேன். 1968 ஆம் ஆண்டு தொடங்கப்பட முன்பு இலங்கைப் பல்கலைக்கழகத்திற் கடமையாற்றிய பேராசிரியர் ஒருவரால் இந்துநாகரிக பாடம் இலங்கையில் தொடங்கப்படுவதற்குக் கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டதாம். இது பற்றி குருக்களவர்கள் தமது சரிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பௌத்த நாகரிகம் ஒரு பாடமாக இடம்பெற்றது. இதை அவதானித்து இந்து நாகரிகத் துறையும் பல்கலைக்கழகத்தில் இடம்பெற வேண்டும் என்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சர்ச்சை நடைபெற்றது. பல சிங்களப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் இதை அனுமதிக்க முன்வந்தும் தமிழ்ப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களிடையே ஒற்றுமை நிலவாததனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போயிற்று. திட்டம் அங்கு கைவிடப்பட்டது" கொழும்புப் பல்கலைக்கழக நிலையில் இதை இடம்பெறச் செய்தும் தகுதி வாய்ந்த பேராசிரியர், விரிவுரையாளர் இன்மையால் அங்கு இது வேரூன்றி நிலைத்து நிற்கவில்லை. (என்சரிதம், ப.75,76)

நாகரிகம் என்பதனை "நயத்தக்க நாகரிகம்" என்றும் கூறுவர். அதனைச் சரியாக விளங்கிக் கொள்வதற்கு முதலில் விசால மான மனம் வேண்டும். சுயநலங்கொண்ட குறுகிய மனம் படைத்தவரால் அதற்குக் கேடே என்பதனை குருக்களின் கூற்று நன்கு உணர்த்துகின்றது. பௌத்த நாகரிக போதனையாளர்களிடம் விரிந்த நல்ல மனமிருந்தது. அதனால் அவர்கள் வெகுவிரைவாக முன்னேறிச் செல்கின்றனர். அக்காலத்திலே இந்து நாகரிகம் கற்பிப்பதற்கு சம்ஸ்கிருதத்துறை, தமிழ்த்துறை, வரலாற்றுத்துறை, கல்வி என்பனவற்றிலே பல விரிவுரையாளர்கள் இருந்த போதும் ஒரு பேராசிரியர் இங்கே இந்து நாகரிகத்தைக் கற்பிப்பதற்குரிய விரிவுரையாளர்களில்லை என்று மறுத்தாராம். கைலாசநாதக் குருக்களின் பெயரைக் குறிப்பிட்டபோது, அவர் சம்ஸ்கிருத விரிவுரையாளர் என்றாராம். பேராசிரியர் W.S. கருணாரத்ன அவர்கள் பொறுக்க முடியாமல் அப்படியானால் தாம் படிப்பிப்பதாகக் கூறியபோது உரிய பேராசிரியர் "You can't teach in Tamil" என்று கூறியதாக எனது விசுவாசத்திற்குரிய பேராசிரியர் மனம் பொறுக்க முடியாமல் கூறினார்.

பேராதனையில் குறிஞ்சிக்குமரன் ஆலயம் அமைப்பதிலும் பலருடன் குருக்களும் பங்குகொண்டிருந்தார். கோயிலுக்குரிய நிலத்தை துப்பரவு பண்ண 1966இல் முனைந்து நின்ற பொறியியற் பீடமாணவன் து. அப்புலிங்கம் அவர்களும் முன்னர் குறிப்பிடப்பட்ட பேராசிரியரால் கேலிபண்ணப்பட்டது "மாணவர் எடுத்த ஆலயம்" கட்டுரை மூலம் தெரிய வருகிறது. இப்படியெல்லாம் தடை பண்ணுகின்றாரேயென்று குருக்கள் மனம் நொந்த தாலோ என்னவோ தடையாக நின்ற குறித்த பேராசிரியரின் விடுதிக்குக் கல்லெறி விழுந்ததும் அவருக்கான சேவை நீடிப்பும் கிடைக்காது போனதும் தற்போது நம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இருபெரும் பேராசிரியர்கள் மூலம் அறிந்து கொண்டதாகும். குருக்களவர்களின் வாழ்க்கைச் சரிதம் இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகத்துறை சார்ந்த எங்களுக்கும் உயர்ந்த படிப்பினையாகும். என் சரிதத்தை ஆதிமுதல் அந்தம் வரை படித்தால் இளந்தலை முறையினரான எங்கள் நடத்தையில் முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்படும் என்பது நூலைப் படித்ததால் வந்த அனுபவம். எங்களை நாங்கள்தான் பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து வளர்த்துக்கொள்ள வேண்டும். எங்கள் குடும்பத்தையும் ஒதுக்கிவிட்டு சேவை செய்யமுடியாது என்பதனை குருக்கள் சரிதம் காட்டுகிறது. பத்தொன்பது வயதிலே திருமணம் புரிந்து அதன்பின்பு குடும்பச் சுமையுடன் அந்த வயதிலே பல்கலைக்கழகம் சென்று பல்துறை சார்ந்த விடயங்களையும் அரிதின் முயன்று கற்றுத் தம்மையும் அறிவு, ஆசாரத்தால் உயர்த்தி தமது துறையினையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்திய குருக்கள் மாதிரி ஒருவரை யாம் இதுவரை கண்டதில்லை. "என்னுடைய முன்னோர்கள் பேணி வந்த கலை கலாசாரங்களைக் கைவிடாமல் பேணுவது என்பதே என் நோக்கம். வேட்டி, ஷேட், சால்வை ஆகியவற்றைத் தவிர வேறு உடைகளை அணிவதில்லை. வீட்டில் அல்லாது வேறு இடங்களில் உண்ணுவது இல்லை. தலையில் உள்ள குடுமியை அகற்றுவது இல்லை என்பனவே என் அடிப்படை இலட்சியங்கள்" (என்சரிதம் ப.50.) என்பதும் "எங்கள் துறை சம்பந்தமாக வாசிப்பதை விட ஏனைய துறைகள் சம்பந்தமான நூல்கள் பலவற்றை வாசித்து அறிவை வளர்த்ததனால் இவ்வறிவுப் பின்னணியில் போதிக்கும் எல்லை மிகவும் வளர்ந்து பலமான பின்னணி உருவாயிற்று". (ப.69) எனும் கூற்றும் சமூகத்தின் உச்சமான கல்வி நிறுவனமான பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் விரிவுரையாளருக்கான அரியதொரு அறிவுரையென்றே தெரிகிறது. "கைலாசநாதக் குருக்களவர்களுக்கு சம்ஸ்கிருதமும் நன்றாகத் தெரியும். அகப் புறத் தூய்மையுடன் கிரியைகளையும் நிகழ்த்துவார், சிறப்பாகக் கற்பிப்பார்" என்று பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா அவர்கள், யாழ் பல்கலைக்கழகத்திலே நடைபெற்ற சைவ மாநாடொன்றில் உரை நிகழ்த்தியதும் நினைவுக்கு வருகின்றது. முன்மாதிரிச் சைவப் பெரியார்கள் பற்றிய நூல்களிலே அவர்கள் எவ்வாறு வாழ்கின்றனரோ அவ்வாறே பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்களது என்சரிதம் நூலிலும் குருக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றுதான் கூறத்தோன்றுகின்றது. குருக்கள் தமது இந்த நூலின் பெரும்பகுதியை எழுதி முடித்திருக்கும் நிலையிலே எதிர்பாராவிதமாக காலமாகியபடியால் அவரின் முழுமையான வரலாற்றைப் பெற முடியாது போயிற்று. இஃது இயற்கையின் நியதி போலும்.

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களவர்களின் நூற்றாண்டிலே இரண்டு பணிகள் காத்திருக்கின்றன. குருக்களால் எழுதப்பட்ட கட்டுரைகளை நூலாக வெளியிடுவதும் தரமான வடமொழி - தமிழ் அகராதித் தொகுப்பினைச் செய்வதுமே அவ்விரண்டுமாகும். குருக்களவர்களது "இந்துமதம்" (1960-61), "கும்பாபிஷேகம்" (1968), குருக்களவர்கள் சோ. இளமுருகனார் அவர்களது ஈழத்துச் சிதம்பரபுராணம் நூலுக்கு வழங்கிய கனதியான அணிந்துரை (1971), "இந்து நாகரிகம் பேணிய சைவப்பெரியார்" (1978), தேர்த் திருவிழா- இறைவனுக்குரிய ராஜோபசாரம் (1983), "கணபதி" (1988), "சைவமரபுகளைப் பேணிக்காத்த பெருந்தகை" சேர் பொன்னம்பலம் இராமநாதன் (1990), "அண்ணலின் அருங்கோலம்" எனும் கனங்காத்திரமான எட்டுக்கட்டுரைகள் இருக்கின்றன. குருக்களவர்களை சம்ஸ்கிருத பாடத்தின் பெயரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி அவரை அணுக முடியாதவாறான அரசியல் நடத்தியவர்களும் இருந்தனர் எனப் படுகிறது. இந்துசமயம், இந்து நாகரிகம், இந்து தத்துவம் போன்ற பாடஅறிவு மேம் பாட்டிற்கு வடமொழிச் சொற்பொருளறிவு மிகப் பெரிய பலமாகும். ஏராளமான சம்ஸ் கிருதச் சொற்கள் எமது வழக்கிலேயுண்டு. அவற்றின் பொருளினை உள்ளவாறு விளங் காமலே பயன்படுத்தும் நிலை சர்வசாதாரண மாக உண்டு. எனவே இந்த நிலையும் மாற வேண்டும். இரண்டு தொண்டுகளையாவது குருக்களின் நூற்றாண்டுக் காலத்திலே குருக் களின் பெயரிலே செய்வது பயனுள்ள முயற்சியென்று தெரிகிறது. (முற்றும்)

## பெற்றோர் செய்த பாவம் பிள்ளையைச் சேரும்

மகாபாரதப் போர் முடிந்துவிட்டது. பாண்டவர்கள் மற்றும் கௌரவர்கள் தரப்பில் ஏராளமான உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுவிட்டன. கௌரவர்களைப் பெற்ற திருதராஷ்டிரர், மிகுந்த சோகத்தில் ஆழ்ந்திருந்தார். ஏனெனில் அவரது நூறு பிள்ளைகளும் அந்தப் போரில் இறந்து போயிருந்தனர். அவர் சோகத்தில் இருந்தபோது, கிருஷ்ணரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் கிருஷ்ணரிடம், "கிருஷ்ணா! நான் குருடனாக இருந்தபோதும், விதுரர் சொல் கேட்டு தர்ம நியாயங்களுடன் அரசாட்சி செய்தேன். அப்படி இருக்க ஒருவர்கூட மீதமில்லாமல் எனது நூறு பிள்ளைகளும் இறந்த தற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்குக் கிருஷ்ணர், "உனக்கு நான் ஒரு கதை சொல்கிறேன். அதற்குப் பதில் சொன்னால், நீகேட்ட கேள்விக்குப் பதில் தருகிறேன்" என்று கூறிவிட்டு கதையைச் சொல்லத் தொடங்கினார்.

நீதி தவறாது ஆட்சி செய்த அரசனிடம், ஒருவன் சமையல்காரனாகச் சேர்ந்தான். மிகச் சுவையாக சமைப்பது, மன்னனை பிரத்யேகமாகக் கவனிப்பது என அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகளினால், வெகு சீக்கிரமே தலைமைச் சமையல் கலைஞனாக உயர்த்தப்பட்டான். அரசருக்கு வித்தியாசமான சுவையைச் செய்துகொடுத்து பரிசு பெறும் நோக்கில், அவனுக்கு விபரீதமான யோசனை ஒன்று தோன்றியது. அதன்படி அரண்மனைக் குளத்தில் இருந்த அன்னத்தின் குஞ்சு ஒன்றினைப் பிடித்து ரகசியமாய் சமைத்து அரசருக்குப் பரிமாறினான். தான் சாப்பிடுவது இன்ன தென்று தெரியாமல் அந்தச் சுவையில் மயங்கிய மன்னர், அதை மிகவும் விரும்பிச் சாப்பிட்டதோடு, அடிக்கடி சமைக்குமாறும் கட்டளையிட்டார். அதோடு அந்தச் சமையல்காரனுக்கு பெரும் பரிசும் அளித்தார். "திருதராஷ்டிரா இப்போது சொல். அரசன், சமையல் கலைஞன் இருவரில் அதிகம் தவறிழைத்தவர் யார்?" என்றார் கிருஷ்ண பகவான்.

"ஒருமுறை வசிஷ்டரின் சமையல்காரன், தான் அறியாமலேயே புலால் கலந்த உணவை அவருக்கு வைத்துவிட்டான். ஆயினும் அதை வசிஷ்டர் கண்டுபிடித்து, அவனுக்கு சாபமிட்டார். அந்த விவேகமும் எச்சரிக்கையும் இந்த அரசனிடம் இல்லையே. சமையல்காரன் பணம் பரிசுகளுக்கு ஆசைப்பட்டிருப்பான். அதனால் அவன் செய்த தவறு சிறியது. ஆனால் பல நாட்கள் அசைவம் உண்டும், அதைக் கண்டுபிடிக்காத அரசன்தான் அதிகம் தவறிழைத் தவன் ஆகிறான்" என்று தனக்குத் தெரிந்த பதிலை அளித்தார் திருதராஷ்டிரர்.

புன்னகைத்த கண்ணன், "திருதராஷ்டிரா நீ ஓர் அரசனாக இருந்தும், நியாயம் தவறாது மன்னன் செய்ததே தவறு எனக் கூறினாய். அத்தகைய நீதிவான் பீஷ்மர், துரோணர் போன்ற சான்றோர் சபையில் உன்னை அமர்த்தியது. நல்ல மனைவி, நூறு குழந்தைகள் என நல்வாழ்க்கையைத் தந்தது. ஆனால், நான் சொன்ன கதை உன்னைப்பற்றியது தான். சென்ற பிறவியில் நீயே உன் தவறால் நூறு அன்னக் குஞ்சுகளை உணவாகச் சாப்பிட்டிருக்கிறாய். அந்த அன்னக் குஞ்சுகளும், அதன் தாய்ப் பறவையும் எத்தகைய வேதனை அடைந்திருக்கும் என்பது உன் நூறு பிள்ளை களை இழந்து நீ அறிந்துகொள்கிறாய். ஆனால் தினம் தினம் பார்த்தும் உனக்கு சைவ, அசைவ உணவுகளுக் கிடையே வேறுபாடு தெரியவில்லை. அப்புறம் உனக்குக் கண் எதற்கு? அதனாலேயே நீ குருடனானாய். தெய்வத்தின் சன்னிதானத்தில் ஒருபோதும் நீதி தவறாது. அவரவர் கர்மவினைக்கேற்பவே அவரவர் வாழ்வு அமையும்" என்று கூறி முடித்தார் கிருஷ்ணன்.

நாம் செய்த தவறுகள் நம் பிள்ளைகளைச் சேரும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்வோம். நல்லதே நினைப்போம். நல்லதே செய்வோம்.

*நம் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நிம்மதி

– வி.ரி. வேலாயுதம் அவர்கள் –

ஓடி அலைந்த மனிதன் நதிக் கரையில் அமர்ந்தான். அதனால் குடிசைகள் உருவாகின. வயல் நிலங்கள் உருவாகின. காணிகளைச் சொந்தமாக்கினான். பனை, தென்னை பயிர்களை மரங்களை நாட்டினான். அங்கேயே இருக்கலானான். இதனால் ஓய்வு கிடைத்தது. பொழுதுபோக்கு ஏற்பட்டது. ஆடினான். பாடினான். நாடகம் நடித்தான். பேச்சுக்கள் பேசினான். மற்றவர்மீது அன்பு கொண்டான். குடும்பமாகினான். வைத்தியம் செய்தான். கலைகள் பெருகின. கல்வி வளர்ந்தது. தெய்வீகக் கலைகள் வளர்ந்தன. கடவுளை வணங்கினான். சிந்தனைத் திறன் வளர்ந்தது. அழகை ரசித்தான். அழகாக வாழ நினைத்தான். உடலை அலங்கரித்தான். உறவுகளை வளர்த்தான். அன்பினால் நண்பர் களைப் பெருக்கினான். தானும் வாழ்ந்து மற்ற வர்களையும் வாழவைக்க வேண்டுமென்ற சிந்தனை உருவாகியது. அதனால் ஒற்றுமை உருவானது. போட்டி, பொறாமை அகன்றது. கூட்டுக்குடும்பம் உருவாகிற்று.

மேலும், ஒருவன் மனநிம்மதியாக இருப்பதற்கு வேண்டியது உடல் தேகாரோக் கியமும் சிறந்த பொருளாதாரமும் என்பதை உணர்ந்தான். இவை இரண்டும் இல்லாதவன் கூட மனநிம்மதியாக இருக்கும்போது இவ னால் ஏன் மன நிம்மதியாக இருக்கமுடிய வில்லை. இவனோ போதுமென்ற மன மகிழ் வுடன் இல்லை. வேணும்; இன்னும் வேணும்; இதற்கு மேலும் வேணும் எனும் பேராசையால் மனம் வாடித் தவிக்கின்றான். கடவுள் எனக்கு அளந்தது அவ்வளவுதான் என்று அமைதிப் பட்டு போதுமென்ற மனத்துடனும் கிடைத்த உடல் ஆரோக்கியத்துடனும், கிடைத்த பொரு ளாதாரத்துடனும் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். இறைவனை நண்பனாக வைத்துக் கொண்டு அவன் தாழ் வணங்கி எல்லாம் அவனருளே! அவனின்றி ஓர் அணுவும் அசை யாது, அவனிட்ட வழி நாம் செல்கிறோம் என்று எண்ணி பிறர் விடயங்களில் தலை யிடாது மற்றவர்களைக் குறைகூறாது அரட்டையடிக்காது நாம் வாழ்வோமேயானால் மன நிம்மதியுடன் வாழமுடியும்.

எல்லாச் சிக்கல்களுக்கும் ஆணி வேராக இருப்பது மனமே. மனத்தின் இயல் பைப் புரிந்துகொள்ளாதவரை சிக்கல் தீர்வ தில்லை. மனத்துடன் எண்ணங்களைச் சேர்க் காது விலக்கிவிடவும். அதாவது படகில் ஏறிச் சென்றால் படகைப்பற்றி பின்னர் சிந்திக்கக் கூடாது. அதுபோல எண்ணங்களுடன் நாம் தொடர்ந்து விலகிவிடவும். மனதைத் தனிமை யாக்கிடவும். சுலபமான வழி இறைவழிபாடு ஒன்றுதான் என்று எனது குருமகரிஷி அன்றே கூறியிருந்தது எனக்கு இன்றும் ஞாபகத்தில் உள்ளது. அதனால் நிலைத்த இன்பம் கிட்டும். ஆண்டவனில் அன்புகொண்டு அவனை நிரந் தர நண்பனாக்கிவிட்டால் இப்பூவுலகில் அவனைப்போல் உதவ வேறு நண்பர் கிடை யாது.

அதாவது,

நம் குறைகளை முறையிட,
நம் கோரிக்கைகளை முறையிட,

*ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல. சாதிக்கத்துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் மகிழ்ச்சியை முறையிட,
நம் துக்கத்தை முறையிட,
நம் கோபத்தை முறையிட,
நிரந்தர நண்பனைத் தேட,

இன்ப துன்பங்களுக்கு விடை கிடைக்க பிரார்த்தனைபோல் வேறு எதுவும் இல்லை.

நமது குறைகளைச் சொல்லி முறை இடலாம். அழுது முறையிடலாம். தியானம் இருந்து முறையிடலாம். எந்த விடயத்தில் முடிவெடுப்பதானாலும் அவனிடம் கூறி முறை யிட்டுவிட்டு எடுத்த காரியத்தை மன நிம்மதி யுடன் செய்து முடிக்கலாம். ஒரு தீங்கும் வரமாட்டாது. செய்யும் காரியம் சுலபமான தாகவும், மனநிம்மதியுள்ளதாகவும் காணப் படுவதை உணரமுடியும். அவன் என்னுடன் கூட உள்ளான் என்ற நம்பிக்கையில் அவன் அருள் தானாகவே எமக்கு பக்கத்துணையாக என்றும் வியாபித்தபடி இருப்பதினால் கருமங் கள் சுலபமாகவும், மனநிம்மதியாகவும் இருப்பதை உணரமுடிகிறது.

மேலும், மனநிம்மதியாக இருப்பதற்கு முன்பு கூறியதுபோல் போதுமென்ற மனமும் தேவை என்பதற்கு ஒரு சிறிய கதை. அதா வது, ஓர் ஊரில் ஒரு செல்வந்தன் மிகவும் செல்வச் சிறப்புடன் இருந்தான். ஆனால், அவனுக்கு ஒருபோதும் நிம்மதியே இல்லை. வாழ்க்கை சோகமயமாகவே இருந்தது. இவ் வேளை அயலூரில் ஓர் சந்நியாசி இருப்பதாக வும் அவர் மக்கள் கூறும் கவலைகளைப் போக்கி வாழ உபாயம் கூறிவருகிறாரென்றும் மக்கள் கூறக்கேட்டு தானும் அவரிடம், "மன நிம்மதிக்கு வழி கேட்கச் சென்று, சுவாமி! என்னிடம் சகல வசதிகளும் உண்டு. பொன் பொருள் யாவும் உண்டு. ஆனால் மனநிம்மதி இல்லையே" என்றான்.

அதற்கு அச்சந்நியாசி அப் பொன் முடிச்சுகளைப் பூசையில் வைத்து ஜெபம் செய்யவேண்டுமென்று கூறினார். அதற்கு அம் மனிதரும் இணங்கி பொன் முடிச்சுக்களை எடுத்துவந்து அவர் முன் வைத்தார். உடனே சந்நியாசி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு முடிச் சுடன் நீண்டதூரம் ஓடி மறையலானார். உடனே அம் மனிதர் ஐயோ! என் பணம் பொன் யாவும் பறிபோய்விட்டதே என்று குளறிக்கொண்டு தொடர்ந்து இவரும் ஓடலா னார். இறுதியில் முடிச்சை சந்நியாசி திருப் பிக் கொடுத்தார்.

இவ்வளவு பணமும் இருந்தபோது நான் இதன் பெறுமதியை நினைக்கவில்லை. இது தொலைந்தது என்றதும் தான் இதன் பெறுமதியை உணர்ந்தேன். இதுவே எனக்கு போதும். நான் இவற்றையே வைத்துக்கொண்டு பேராசைப்படாது நிம்மதியாக வாழ்வேன் என்றும் நல்ல பாடம் படித்துக்கொண்டேன் என்றும் சந்நியாசிக்கு கூறி வாழ்த்தி வணங்கிச் சென்று பல்லாண்டு நிம்மதியாக வாழ்ந்தான்.

இதுபோலவே நாமும் போதுமென்ற மனத்துடன் கிடைத்த பொருளை வைத்துக் கொண்டு நிம்மதியாக வாழ்வோமாக.

---

*எப்படி ஒரு பொருளின் நிழல் காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட நீரில் தெரியாதோ அதுபோல், ஆசை என்னும் காற்றினால் அசைக்கப்பட்ட மனமாகிய ஏரியில் இறைவனின் உருவம் தோன்றாது.*

*மனிதன் மூச்சுவிடும்போது கூட மனதில் அசைவு ஏற்படுகிறது. ஆகவேதான் யோகிகள் கடவுளைப்பற்றித் தியானம் செய்வதற்கு முன்பு மூச்சை அடக்குவதில் தங்கள் முழு கவனத்தையும் செலுத்துகிறார்கள்.*

*சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| விமலேஸ்வரன் சர்லா குடும்பம் (லண்டன்) | அளவெட்டி | 25000. 00 |
| திரு இராசன் | குப்பிளான் வெங்காயம், 3புட்டி அரிசி | 5000. 00 |
| தர்மலிங்கம் மயூரன் | நீர்வேலி | 5000. 00 |
| கதிரவேலு ஜெயராஜ் | சண்டிலிப்பாய் | 10000. 00 |
| காசிநாதன் வக்கிரன் | சுன்னாகம் | 10000. 00 |
| குமாரசாமி துபாரதன் | நெல்லியடி | 5000. 00 |
| செ. சிவநேசன் | தும்பளை | 3000. 00 |
| சண்முகம் இராசதுரை | நல்லூர் | 5000. 00 |
| குருபரன் பவினா | கொழும்பு | 5000. 00 |
| புஸ்பராணி பராபரன் | சுழிபுரம் மத்தி | 5000. 00 |
| மு. கந்தசாமி தம்பசெட்டி | பருத்தித்துறை | 10000. 00 |
| வி. சிவபாலசித்திரவடிவேல் | சுப்பர்மடம் | 10000. 00 |
| சண்முகராசா வித்யகாசன் | பிரான்ஸ் | 34000. 00 |
| நடராசா புவனேஸ்வரி அத்தாய் கிழக்கு | அல்வாய் | 10000. 00 |
| வீ. ஜசிந்தன் | சங்கானை | 5000. 00 |
| செ. செந்தூரன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| செல்வக்குமார் செந்தூரன் | ஊரெழு | 5000. 00 |
| R. வசந்தகுமார் | அச்சுவேலி | 10000. 00 |
| ஆ. சுந்தரலிங்கம் (நாகர்கோவில்) | லண்டன் | 10000. 00 |
| ரகுபதிராஜா ஐக்ஷனா | கரணவாய் மேற்கு | 10000. 00 |
| ஐ. மகேஸ்வரன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| K. கந்தசாமி | இணுவில் மேற்கு | 1000. 00 |
| ம. குணநேசன் | கோண்டாவில் மேற்கு | 1000. 00 |
| S. துவியன் | ஊரெழு | 1000. 00 |
| சி. கந்தையா | சுன்னாகம் | 5000. 00 |
| அ. ஜெயக்குமார் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| செ. உமாகாந் | திருநெல்வேலி | 1000. 00 |

*துன்பங்களைச் சந்திக்கத் தெரிந்தவனுக்கு தோல்வியே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு தர்மகுலசிங்கம் குடும்பம் | கைதடி | 2000. 00 |
| பா. விஜயராசா | ஊரெழு | 1000. 00 |
| S. ராஜமாணிக்கம் | மன்னார் | 5000. 00 |
| S. நிறோசன் | மட்டக்களப்பு | 5000. 00 |
| நா. கனகராஜா (ஆனந்தா ஸ்ரோர்ஸ்) | மன்னார் | சி.ப. அரிசி |
| வே. கந்தசாமி | இடைக்காடு | 500. 00 |
| கு. சிவபாதம் | உப்புவெளி | 2000. 00 |
| க. கனநாதன் | ஊரெழு | 10000. 00 |
| ம. சிங்காரவேலு | கரவெட்டி | 2000. 00 |
| க. கணேசராசா | நீர்வேலி | 2000. 00 |
| ந. குலராஜன் | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| வ. ராசம்மா நினைவாக | சுன்னாகம் | 2000. 00 |
| நிர்மலன் கஜன் | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| செ. ஜனனி | கொழும்பு | 1000. 00 |
| திருமதி P. தாரகா | புலோலி | 1000. 00 |
| ஐ. சூரசங்காரம் | குடத்தனை | 10000. 00 |
| K. யோகானந்தன் | அல்வாய் | 25000. 00 |
| திரு தங்கசிவம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு சத்தியநாதன் குடும்பம் | அச்சுவேலி | 1000. 00 |
| திரு ராஜரமணி | கனடா | 13450. 00 |
| கனாதீபன் தங்கவேல் | கனடா | 5000. 00 |
| செந்தில் காருணியன் | கனடா | 5000. 00 |
| வி. வினோதினி | கைதடி | 1000. 00 |
| க. கபிஷன் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக் குருக்கள் | பொலிகண்டி | 4000. 00 |
| திருமதி S. சாரதா, S. சோபிகா | கனடா | 2000. 00 |
| ஜெ. விக்னேஜன் | நல்லூர் | 1புட்டி அரிசி |
| P.V. கணேசநாதன் | அளவெட்டி | 5000. 00 |
| திருமதி யுவராஜா | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | 700 தேங்காய் |
| ஹ. மகாலெட்சுமி | யாழ்ப்பாணம் (கனடா) | 25 டொலர் |
| ந. செல்வக்குமார், ந. சிவகுமாரன் | இலக்கணாவத்தை | 5000. 00 |
| செ. சபாரத்தினம் | இணுவில் 1மூடை அரிசி | 2000. 00 |
| T. கபிஷன் | மந்திகை | 5000. 00 |
| ராஜன் ஸ்ரீரங்கன் | லண்டன் | 30000. 00 |
| ஐ. வைரமுத்து | கொக்குவில் | 3000. 00 |
| சந்திரலிங்கம் மாதுமை | பருத்தித்துறை | 1000. 00 |
| S. மணிவாசகன் | கொழும்பு | 10000. 00 |

(தொடரும்...

*வாய்ப்புக்காக காத்திருக்காதே. வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவர்கள் தனித்துவமான தமது அடையாளங்களை ஓம்புதல் ஏன் இன்றியமையாதது?

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சைவம் எங்கள் சமயம். சைவ சித்தாந்தம் எமது சமய தத்துவம். சைவநெறி எங்கள் வாழ்க்கை நெறி. இம்மூன்று அங்கங்களையும் தன்னிடத்தே கொண்டு, முழுமைத்துவம் பெற்ற உலகின் மூத்த சமயமாக சைவம் விளங்குகின்றது. சைவம் மிகத் தொன்மையானது என்பதற்குச் சிந்துவெளியில் நடத்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிகள் சான்றாதாரங்களை வெளிப்படுத்தியுள்ளன. மனித இனம் தோன்றி நாகரிகம் அடையத் தொடங்கிய காலத்திலிருந்து சிவவழிபாடும் சைவம் என்னும் சமய நெறியும் உருவாயிற்று எனப் படுகிறது. ஆதி மனிதன் வழிபாடு செய்த சிவக்குறி, இலிங்கம் ஆகும். சிந்துவெளியில் அறுநூற்றுக்கு மேற்பட்ட இலிங்கங்கள் கண்டெடுக்கப்பெற்றன. அவையாவும் வேதகாலத்துக்கு முற்பட்டவை. சிந்துவெளியில் அஞ்ஞான்று வாழ்ந்த மக்கள் திராவிடர் என்பதும், அவர்கள் தமிழர்களின் முன்னோர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"சிந்துவெளியிற் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் தொன்மையேயாகும். அது வெண்கல யுகத்திற்கோ, அதனிலும் முற்பட்ட காலத்திற்கோ நம்மை இட்டுச் செல்கிறது. இன்றுவரை வழக்கிலுள்ள வாழுஞ் சமயமாகச் சைவம் விளங்குகிறது" என்று ஆராய்ச்சியாளர் சேர் ஜோன் மார்ஷல் குறிப்பிட்டுள்ளார். சனாதன தர்மம் என ஆதியில் வழங்கப்பெற்ற சமயம், சைவ சமயமே என்பது குறிப்பிடப்பாலது. தமிழ் மக்களின் சமயம், சைவம் ஆகும். சைவம் சிவம் சம்பந்தப்பட்டது. சிவம் அன்பு சம்பந்தம் உடையது. "அன்பே சிவம்" எனத் திருமூலர் அறிவிக்கிறார். சைவத்தின் முழுமுதல் கடவுள் சிவபெருமான். தமிழர் தென்னாட்டவர். அதனால் தென்னாடுடைய சிவன் எனச் சிவபெருமானை விழித்துப் போற்றி, அச் சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் ஆகுந் தன்மையை உணர்ந்து தெளிந்து உலகத்தவர்க்கு வெளிப்படுத்திச் சைவத்தை நிலைநாட்டியவர் மணிவாசகப் பெருமான்.

அன்பும் சிவமும் ஒன்றே என்பதால், சைவநெறி அன்பு நெறியாக வளர்ச்சி பெற்றது. அன்பினை வாழ்க்கையில் ஆராதிக்கின்ற மக்களையுடைய நல்லுலகினைச் சைவநெறி வேண்டி நிற்கின்றது. அன்பு பிரவாகிக்கும் போது, உலகில் சாந்தி, அமைதி, ஆனந்தம் என்பன நீங்காது உறையும். சிவம் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து உள்ள பரம்பொருள். சிவம் "அன்பினில் விளைந்த ஆரமுது" சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே ஆவார். அவரே இந்த உலகத்தின் கருத்தா, இறைவன்; சைவத்தின் முழுமுதல், வாழ்முதல் ஆகவுள்ளார். அந்த வகையில் அன்புதான் சைவத்தின் முழுமுதலும் வாழ்முதலுமாக உள்ள பொருள். அன்பினை வாழ்க்கையில் பேணுதல் சைவர்களின் முதன்மை அடையாளம் ஆகும்.

*தடம் பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன்தான் மாமனிதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீதியே சிவம்" நீதியும் சிவமும் ஒன்றே, வேறல்ல என்பது சைவத்தின் நிலைப் பாடு. சைவம் சிவம் சம்பந்தப்பட்டிருத்தலால் அது நீதியுடனும் சம்பந்தப்பட்டதாயிற்று. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெலாம்" என்பது கச்சியப்பரின் திருவாக்கும் வாழ்த்துமாகும். "பங்கயத்தயன் மால் அறியா நீதியே" எனச் சிவபெருமானை மாணிக்கவாச கர் விளிக்கிறார். நீதியை விசாரித்து ஒப்புதல் பெற்றுச் செயலாற்றினால், விளைவு நன்மை யாக அமையும். அல்லாவிட்டால் நீதி சுடும். நீதி வழுவா நெறிமுறையில் வாழ்தல் சைவர் களின் மற்றொரு பிரதான அடையாளமாகும்.

சைவநெறியானது அன்புநெறியாக வும், நீதிநெறியாகவும், விழுமிய அறநெறியாக வும், தூய அறிவு நெறியாகவும், ஆன்மிக நெறியாகவும் ஒருசேர அமைந்துள்ளமை அதன் சிறப்புக்கும் தனித்துவத்திற்கும் ஏற்றந் தருவ தாக உள்ளது. இத்துணை உயர்வானவற்றின் உரிமையாளர்களாக விளங்கும் சைவ மக் கள் தங்கள் உரிமைகளையும் அடையாளங் களையும் இழந்து, தாழ்நிலையை எய்திநிற் றல் மடமையாகும். சைவர்கள் தங்கள் வழி வந்த உரிமைகளையும் தனித்துவமான அடையாளங்களையும் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குச் சிந்தாமல், சிதையாமல் கையளிக்கவேண்டிய பாரிய பொறுப்பும் கடப்பாடும் தமக்கு உண்டு என் பதைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். இது காலத்தின் தேவையாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சைவம் எப்படி அன்பு, நீதி, உண்மை, செம்மை, அழகு, அறம், நன்மை என்பவற் றுடன் சம்பந்தப்பட்டதோ, தமிழும் அவ்வாறே அவற்றை நுதலியும் தழுவியும் உள்ளது. சைவத்தமிழ் அன்புத் தமிழாகவும் அறிவுத் தமிழாகவும், அருள்நிறை அமுதத் தமிழாகவும் மலர்ச்சி பெற்றுள்ளமை நோக்கற்பாலது. சைவ மும் தமிழும் வேறல்ல.

சங்கத்தமிழ் இலக்கியங்களில் முழு முதற் கடவுளாகிய சிவனைக் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நிலம் சார்ந்த தெய்வங் களுள் ஒன்றாக இடம்பெறச் செய்து தாழ் நிலைப்படுத்த புலவர்கள் விரும்பவில்லைப் போலும். அதனால் சிவன் என்னும் பதம் சங்க இலக்கிய நூல்களில் காணப்படவில்லை. எனி னும் சிவனைக் குறிக்கும் சொற்றொடர்கள் ஆங்கு உள்ளன. ஆலமர் செல்வன், முப்புரம் எரித்தவன், விரிசடைக்கடவுள், பிறவா யாக்கைப் பெரியோன் போன்றவை சங்க இலக்கியங்களில் சிவனைச் சுட்டி நிற்கின்றன. யாவர்க்கும், எல்லா நிலப் பிரிவுகளுக்கும் பொதுமையான பரம்பொருள் சிவபெருமானே என்பது பண்டைத் தமிழர் கொள்கையாகும்.

சங்ககாலத்தில் இயற்கை நெறி மேலோங்க, சிவ வழிபாடும் சைவமும் தளர்ச்சி அடைய சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெறலாயிற்று. சைவத் திற்கு ஏற்பட்ட முதலாவது இடர்பாடு அது வாகும். அதனை நிவர்த்தி செய்யப் பக்தி இயக்கம் தோன்றியது. காரைக்காலம்மையார் தொடர்ந்து திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் பக்தி இயக்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்திச், சைவத்தை மக்கள் மயப்படுத்தினர். சைவம் வாழும் நெறியாக மலர்ந்தது. திருமூலர், சிவம் - சைவம் என்னும் சொற்பதங்களை திருமந்திரத்தில் பயன்படுத்தியுள்ளார். சைவத் திறத்தை அறிந்தவர் நாயன்மார்கள் அறுபத்து மூவர். அவர்கள் புறமதப் பரம்பலால் சீர் குலைந்து வந்த சைவநெறியை அன்பு நெறி யாகக் கண்டு, மக்கள் நெறியாக நெறிப் படுத்தி, வாழும் நெறியாக வளர்த்தனர். திரு முறைகள் பன்னிரண்டும் தமிழ் வேதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் திருமந்திரம் தமிழ் ஆகமம். அத்துடன் தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் விளங்கிச் சைவத்தை அணி செய்கின்றது. திருமுறைகள் சைவத்தின் தோத்திர நூல்கள். மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கும் சைவத்தின் சாத்திர நூல்கள். சிவ புராணங்கள் பல இலக்கிய நூல்களாக விளங்கி எமது சமய உண்மைகளைப் பாமரரும் விளங்கிக்கொள்ளும் வகையில் தெளிவாகப் புரியவைக்கின்றன. இவையனைத்தும் நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளர்ந்த மறைமொழிகள், மந்திரங்கள் ஆகும். அவை சைவர்களின் தனித்துவ அடையாளங்கள் ஆக ஒளிர்கின்றன. அவற்றைக் கற்றவர், கேட்டவர், அதன்படி வாழ்க்கையில் ஒழுகுபவர்கள், அதன்வழி சைவ அடையாளங்களை வழுவாது பேணி வருபவர் யாவரேயாயினும் அவர் சைவ சமயி ஆவார்.

சைவ சமயிகள், யாவர்க்கும் பொது வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை வழுவாது தழுவிக்கொண்டும், தங்களுக்குச் சிறப்பு வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையவர்களாய் ஒழுகல் வேண்டும். பொதுவிலக்கணங்களாவன: கொல்லாமை, புலாலுண்ணாமை, திருடாமை, மதுவுண்ணாமை, பிறர்மனை நயவாமை, பொய்யாமை மற்றும் அன்புடைமை, பொறையுடைமை, பணிவுடைமை, நல்லொழுக்கமுடைமை, ஈகை, ஒப்புரவு முதலிய நன்மைகளாம். இந் நன்மைகள் இல்லாத செயல்கள், அறிவு, ஞானங்கள் பயனற்றவை. இத்தகைய மனிதப் பண்புகள், விழுமியங்கள் என்பன சைவ அடையாளங்கள். அவை மனித அடையாளங்களுமாம். மனிதர்கள் உயர்திணையில் வைக்கப்பட்டிருத்தலும், விலங்குகள் முதலிய அஃறிணைப் பொருள்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டிருத்தலும் இவ்வடையாளங்களின் அடிப்படையிலேயே என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

சைவர்களுக்குரிய சிறப்பிலக்கணங்களாக விபூதி, உருத்திராக்கம் முதலிய சிவ சின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவனைத் தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசித்தல், சிவ தருமங்களைச் செய்தல், சிவ புராணங்கள் மற்றும் சைவ நூல்களைப் படித்தலும், படிக்கக் கேட்டலும், ஏற்ப ஒழுகுதலும், பகுத்துண்டு பல்லுயிரோம்புதல், மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையெனப் பணி செய்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். புலனடக்கம், மனவடக்கம் மற்றும் மனம், மொழி, செயல் தூய்மையுடன் உண்மையும் அஹிம்சையும் வாழ்வில் பேணி வருபவர் உண்மைச் சைவர்கள். அவர்கள் சைவ அடையாளங்களைப் போற்றி வாழ்பவர்கள். உலகியல் வாழ்க்கையுடன் ஆன்மிகத்தையும் இணைத்து சமநோக்குடையவராய் உயர் வாழ்வு வாழ்ந்து, வாழ்க்கைப் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் அடைய சைவ அடையாளங்களை முறைப்படி பேணி வருவது இன்றியமையாததாகும். வையத்தில் வாழ்வாங்கு வாழவும், மண்ணில் நல்லவண்ணம் வாழவும், அன்றாட உலகியல் வாழ்க்கைச் செயற்பாடுகள் ஊடாக இறை அனுபவத்தை அடையவும் சைவம் வழிகாட்டுகிறது. ஒவ்வொருவரும் தன்னில் பிறரைக் காணுதல் மூலம் உலக சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பது சைவத்தின் ஆன்மிக ஒருமைப்பாட்டுத் தத்துவம். தத்துவம் செயலாக வேண்டியது இன்றைய தேவை. சைவ அடையாளங்கள், மறைக்கப்பட்டாலோ, மறுக்கப்பட்டாலோ, மறக்கப்பட்டாலோ சைவ உலகுக்கு மட்டுமல்ல முழு உலகுக்குமே பாதகமான விளைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாவலர் பெருமான் மதமாற்றத்திற்கும், அந்நிய கலாசாரத் திணிப்புக்கும் எதிராக மறுமலர்ச்சி இயக்கத்தை நடத்தினார். நாவலருக்குப் பின், தற்காலத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் உலகமயமாதல், ஆன்மிக வறுமை, பன்மைச் சமுதாயத்தில் வாழவேண்டிய நிலைமை, சைவமக்களின் புலம்பெயர் வாழ்வு, சமயச்சார்பின்மைக் கொள்கை வலுப் பெறுதல், பகுத்தறிவு வாதம், விஞ்ஞான தொழில்நுட்ப அதிதீவிர வளர்ச்சி, தாராண் மைக் கொள்கை என்பனவற்றினால் சைவ சமய கலாசார அடையாளங்கள், ஒழுக்க விழுமியங்கள் புறந்தள்ளப்பட்டு வரும் ஆபத்து ஏற்பட்டுள்ளமை கண்கூடு. அத்துடன் சைவ சமயிகள் சைவ ஒழுக்கம், சைவ சாதனை கள், சைவப் பண்பாடு, சைவ விழுமியங்கள் என்பவற்றை தம் வாழ்க்கையில் அநுசரித் தும் கடைப்பிடித்தும் வருதல் இன்றைய சூழ் நிலையில் மிகவும் வேண்டற்பாலது.

உலக சைவப் பேரவையை நிறுவி, சைவத்தை உலகப் பெருஞ் சமயநெறியாகப் பிரகடனப்படுத்தியதோடு, 1999இல் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற உலகச் சமயங் களின் பேரவைக் கூட்டத்தில், சைவநெறி பூரணத்துவமும் தன்னாட்சியும் கொண்ட உலகப் பெருஞ் சமயமாக அங்கீகாரம் பெற வும் காரணகர்த்தாவாக விளங்கியவர் தவத் திரு சிவநந்தி அடிகள் ஆவார். இது காலத் தின் தேவையாகும். சைவர்கள் தங்கள் அடை யாளங்களைப் போற்றி வாழ்தல் அவர்களின் கடமையாகும்.

---

நாம் வகிக்கும் பதவியும், நமக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களும் வேறு. நம்மிடமிருக்கும் சக்தியும் வல்லமையும் என்பது வேறு. பதவியும் அதிகாரமும் மற்றவர்களால் எமக்குக் கொடுக்கப்பட்டவை. இவற்றால் பெரிய பயன் ஏதுமில்லை. ஆனால் நமது சக்தியும், வல்லமையும் நம்மால் வளர்த்துக்கொள்ளப்பட்டவை, இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவை. இவைதான் நமது உண்மையான பலம்.

ஆட்சியும் அதிகாரமும், படைபலமும் கொண்டிருந்த ஆங்கிலேய அரசாங்கத்தை இடுப்புக்குக் கீழே இரண்டு முழத் துண்டு மட்டுமே அணிந்துகொண்டு அசைத்துக் காட்டிய மகாத்மா காந்தியை விட இதற்கு வேறு உதாரணம் கூறமுடியாது. எந்தத் தொழிலில் இருந்தாலும் மற்றவர்களுடன் பணிவாக இருங்கள். அப்போதுதான் எவரும் உங்களை அணுக விருப்பப்படுவர். நிர்வாகம் தொடர்பான முடிவுகளை விருப்பு வெறுப்பின்றி உறுதியாக எடுங்கள். அப்போதான் "நடுநிலையானவர்" என்ற பெயர் கிடைக்கும்.

பணம், பொருள் விடயங்களில் மட்டுமல்ல எண்ணங்கள் மற்றும் பேச்சிலும் நேர்மையைக் கையாளுங்கள். இனிமையாகப் பேசுங்கள். ஒருவரை முகத்துக்கு நேராகப் புகழ்ந்துவிட்டு, அவர் இல்லாதபோது மற்றவர்களிடம் தவறாகச் சொல்லாதீர்கள். இவை போன்ற குணங்களைக் கடைப்பிடித்தால் நீங்கள் நல்லவராக மதிக்கப்படுவது மட்டுமல்லாமல் உங்கள் பேச்செல்லாம் வேத வாக்காகக் கருதப்படும்.

சந்தர்ப்பங்கள் "உழைப்பு" என்ற உருவத்தில் நம்முன் அடிக்கடி தோன்றுகின்றன. நாம்தான் அவற்றைக் கண்டுகொள்வதில்லை.

*பொறுமை உள்ள மனிதன் நிச்சயம் வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருமூலர் தவமொழி

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

குருபக்தியும் ஞானமும் ஏற்பட்டுவிட்டால் அதன் பின் உண்டாகின்ற நலன்கள் எவை? தானே புலனைந்தும் தன்வசம் ஆயிடும் (தானே- புற உதவியின்றி தானாகவே) "காண்பதுவும் செப்புவதும், கேட்பதும், சிந்திப்பதும் இறைவனாகிய குருவையே பற்றி நிற்குமானால் அதாவது ஆசாரியனை இறைவனாகவே பாவித்து நின்றால், "மூர்க்கப் புலன்கள் ஐந்தும் தாமாகவே உன்வசம் அடங்கிவிடும்" என்பதை உறுதியாக திருமூலர் கூறியுள்ளார்.

"தானே புலன் ஐந்தும் தன்வச மாயிடும்"

ஆன்மாவின் வசப்பட்ட ஐந்து புலன்களும் இனிமேல் ஆன்மப் போக்கிலேயே நடந்து செல்லும். பாகன் வழிநடந்த அவன் ஆணையிலேயே கட்டுப்பட்டு நடந்து செல்லும் யானையைப்போல எனக் கூறுகிறார்.

"தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்"

(மடை மாறும்- செல்லும் வழி பெயரும்) உலக இச்சைகளில் செல்கின்ற புலன்கள் மடைமாறி மெய்ப்பொருளை நாடிச் செல்லும். இத்தகைய பெரிய சாதனை எப்படி சித்திக்கும்? ஆன்மா தன்னைச் சார்ந்த மற்றப் பற்றுகளை களைந்துவிட்டு தன்னந்தனியே சென்றால் இறைவனைச் சந்திக்கும்.

"தானே தனித்தெம்பி ரான்தனைச் சந்தித்தே"

(தனித்து- பற்றுக்களின் தளைகளை நீக்கிக்கொண்டு) மனம், மொழி, மெய் இம்மூன்றும் இறைவனாகிய ஞான குருவினிடத்திலேயே ஒன்றி நின்றுவிட்டதால் ஆன்மாவுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கூறுகிறார் திருமூலர். மற்றும் பற்றுக்களையெல்லாம் நீக்கி தன்னந்தனியாக இறைவனைச் சந்தித்தது ஆன்மா! இந்த சந்திப்பினால் புலன்கள் ஐந்தும் வெளியே சென்று திரிவதை விட்டொழிந்தன. ஆன்மா ஆணையில் நின்று இயங்கின. விஷய சுகங்களிலே சென்ற இச்சையானது தனது பாதையை மாற்றிக்கொண்டது. அத்தனை வேகமும் சேர்ந்து இப்பொழுது இன்னொரு வாய்க்காலிலே பாய்கிறது.

இந்த உடம்புக்குள் நின்ற ஆன்மாவானது குருவின் உபதேசம் வழியாக இறைவனை இந்த உடம்புக்குள்ளேயே "சந்திப்பது"தான் தவயோகம். அந்த தவயோகம் குருவருளினாலேதான் சித்திக்கும். அதை இந்தப் பாட்டில் உபதேசிக்கிறார் திருமூலர்.

தானே புலனைந்தும் தன்வச மாயிடும்
தானே புலனைந்தும் தன்வசம் போயிடும்
தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம்பி ரான்தனைச் சந்தித்தே.

ஒருவன் உபவாசம் இருந்தால் உணவினின்றும் அகன்று நிற்கிறான். உணவில் அவன் காணும் ருசி சாகவில்லை. அந்த விஷய ருசியும் அகன்றுவிடும். பரம்பொருளாகிய இறைவனைக் கண்டவுடன்! இந்த உறுதிமொழியையே திருமூலரும் தருகிறார்.

*திட்டங்களில் வெற்றி என்பது இல்லை. திட்டமிடல் என்பதிலேயே வெற்றி தங்கியுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தானே தனித்தெம்பி ரான்தனைச் சந்தித்ததே"

என்று ஞானிகள் காணும் பேருண்மை ஒன்றேயானபடியால் எல்லா சாஸ்திரங்களிலும் எல்லா மொழிகளிலும் இந்த உண்மை வியக்கத்தக்க முறையில் ஒன்றுபோலவே சொல்லப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

உலக சுகங்களை நாடிச் செல்லும் மனத்தை அப்படிச் செல்லாமல் இழுத்துப் பிடித்து தெய்வத்தை நோக்கிச் செலுத்தினால் எத்தகைய நலன்கள் விளையும் என்பதை எடுத்தோதும் திருமூலர், உடம்பின் நிலையற்ற தன்மையை எடுத்துக்காட்டி காற்றுள்ள போதே தூற்றிக்கொண்டு நெல்லை சேகரிப்பதுபோல இந்த மானிட உடம்பு இருக்கும்போதே ஆன்ம நலத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்கிறார். இதற்காக முதலில் உடம்பு நிலையற்று மறைந்து போகும் தன்மையுடையது என்பதை நம் இதயத்தில் நன்றாக பதியும்படி பாடுகிறார்.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்"

(ஒலிக்க அழுதிட்டு- கதறி அழுது) உடலில் இருந்து உயிர் பிரிந்து சென்றதும் என்ன நேர்கிறது? ஊரார்கள் வந்து கூடுகிறார்கள் கதறியழுகிறார்கள்.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்,
பேரினை நீக்கிப் பிணம் என்றுபேர் இட்டு"

உயிர் இருக்கும்வரை தான் ஒருவரை பெயர் கூறி அழைப்பார்கள். உயிர் நீங்கிய பின் அவனுக்குப் பிணம் என்ற அஃறிணைப் பெயர்தான்.

"பேரினை நீக்கிப் பிணம் என்றுபேர் இட்டு
சூரைஅங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு"

சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று உடலைச் சுடுகிறார்கள். அப்படிச் சுட்டெரித்துவிட்டு அதற்குமேல் என்ன செய்கிறார்கள்!

"நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே"

உறவினர்கள் தண்ணீரில் மூழ்கி அந்தத் தண்ணீரைக் கொண்டு இறந்தவர்களைப் பற்றிய நினைவையே கழுவி விடுகிறார்கள் என்று மனத்தில் உண்மை படியும்படி பாடுகிறார்.

(அழுதிட்டுப் பிணமென்று பேரிட்டு சுட்டிட்டு என்ற அடுக்குகள் ஒன்றன் மேல் ஒன்றாக வந்து ஒழிந்தார்களே) என்ற உருவகத்தோடு இப்பாடலை நிறைவு செய்கிறார்.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்,
பேரினை நீக்கிப் பிணம் என்றுபேர் இட்டு,
சூரைஅங் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே.

அடுத்த பாடலில் உடலின் சோகத்தை மேலும் சித்தரிக்கிறார். மனைவியைச் சமைக்கச் சொன்னார். சமையல் ஆயிற்று. சாதத்தைச் சாப்பிட்டார். அழகியான தனது மனைவியோடு சற்று உறவாடினார். இடது பக்கம் மெதுவாக வலிக்கிறதே என்றார். கீழே படுத்தார். அவ்வளவுதான் அவர் மீண்டும் எழுந்திருக்கவில்லை.

"சுடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சுடுதல்- சமைத்தல், சுடப்பண்ணி வைத்தார்- சமைக்கும்படி சொன்னார், அடிசிலை- சமைத்த உணவை)

"சுடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரோடு மந்தணம் கொண்டார்"

(மடக்கொடியாரோடு- மனைவியோடு, மந்தணம்- தனிமை, அந்தப்புரத்தை குறிக்கும் சொல், மந்தணம் கொண்டார்- தனித்து உறவாடினார்)

"இடப்பக்கமே இறை நொந்தது என்றார்"

(இடப்பக்கம்- இடது பக்கத்திலே, இறை- சற்று, கொஞ்சம் நொந்ததே- வலிக்கிறதே)

"இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே"

கிடக்கப் படுத்தார்- நீட்டிப் படுத்தார், கிடந்து ஒழிந்தாரே- படுத்தவர் மறுபடியும் எழுந்திருக்காமல் இறந்தொழிந்தார்)

வாழ்க்கையின் நிலையாமையை மறந்து விடய சுகங்களிலே ஈடுபட்டு காலத்தை வீணடிக்கின்ற பேதை மக்களுக்கு கண்ணைத் திறந்து காட்டுகிறார் தவயோகி.

சுடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

(தொடரும்...

---

மனிதனாகப் பிறந்தவனுக்கு எவ்வளவோ பாக்கியங்கள் உண்டு. எல்லா பாக்கியங் களிலும் மேலான பாக்கியம் பிறருக்கு சேவை செய்வதே! முதலில் பெற்ற தாயைத் தெய்வ மாகக் கருதி அவளுக்குச் செய்யும் சேவையை முதற் சேவையாகக் கருத வேண்டும். நல்ல மனைவி வாய்த்தவன் அந்த மனைவிக்குக்கூட சேவை செய்வதில் தவறில்லை. சேவை என்பது தாயிடம் தொடங்கி தாய்நாடு என்று வளர்ந்து செல்ல வேண்டும். இந்நிலை வந்து விட்டால் குடும்பங்களில் எந்தப் பிரச்சினையுமே தலைதூக்காது. சமைக்க முடியாது என்று மனைவி ஒருநாள் படுத்துவிட்டால், இவனும் தானே சமையல் செய்யலாமென்று சந்தோசமாக ஆரம்பிப்பான். அதைப் பார்த்த மனைவி மனம் பொறுக்காமல் அவளே வந்து சேர்ந்து கொள்வாள். நிம்மதி வந்துவிடும். அடம்பிடிக்கின்ற பிள்ளையை அடிக்காமல் அரவணைத்துப் போவான். துரோகம் செய்கின்ற நண்பர்களையும் மன்னித்து விடுவான். கூலியைக் குறைத்துக் கொடுக்கும் முதலாளிக்கு "கடவுளே கூலி கொடுப்பார்" என்று நிம்மதியடைவான். நோய் வரும்போது "இது கர்மவினை" என்று ஆறுதல் அடைவான். கடன் வரும்போது அமைதியாக அதனைச் சமாளிப்பான். தாயின் சேவையில் வாழ்வைத் தொடங்குபவன் தர்மம் தவறிப் போகமாட்டான். இறுதியில் தெய்வத்தோடு ஐக்கியம் அடைவான். இப்படியான சேவையால் உலகத்துக்கு அவனே தெய்வமாகவும் காட்சியளிப்பான்.

நமக்கு எத்தனையோ கஷ்டங்கள், உத்தியோகத்தில் தொந்தரவு, சாப்பாட்டுக்கு அவஸ்தை, வீட்டுக் கவலை இப்படியாக நமது சொந்தக் கஷ்டத்துக்கு நடுவில் சேவை வேறா? என்று எண்ணக்கூடாது. உலகத்துக்குச் சேவை செய்வதனால்கூட நமது சொந்தக் கஷ்டங்களை மறக்க வழி உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவைப் பெருக்கும் தோப்புக்கரணம்

**– க. மதுஷன்** அவர்கள் –

இந்துமதமானது மிகமிகத் தொன்மையும் சிறப்பு வாய்ந்த ஒரு மதமாகும். இம் மதமானது பல்வேறு கோட்பாடுகளையும் விதிமுறைகளையும் உள்ளடக்கி மெஞ்ஞானமாக விளங்கி வருகின்றது. விஞ்ஞான அறிவு வளர ஆரம்பித்து, இன்று விஞ்ஞானம் கண்டுபிடித்து ஆச்சரியப்படும் பல்வேறு உண்மைகளும் கோட்பாடுகளும் ஏற்கனவே இந்துமதக் கோட்பாடுகளில் கூறப்பட்டவையே ஆகும். அந்த வகையில் இன்று நாம் இந்து மதத்தவர்கள் பிள்ளையாரை வணங்கும் முறையான தோப்புக்கரணத்தின் பின்னால் இருக்கும் அறிவியலை உற்று நோக்குவோம்.

முற்காலத்தில் தோப்புக்கரணம் போடுவது என்பது சாதாரணமான ஒரு விடயமாகக் காணப்பட்டது. பள்ளிகளில் தவறு செய்தாலோ, பாடங்களில் குறைவாக இருந்தாலோ ஆசிரியர்கள் தண்டனையாக தோப்புக்கரணம் போடச் செய்வார்கள். பரீட்சை சமயத்தில் மாணவர்களது பக்தி அதிகரித்து விநாயகரை வேண்டி தோப்புக்கரணம் போடுவதுமுண்டு. ஆனால் தற்காலத்தில் தோப்புக்கரணம் போடும் பழக்கமானது அருகிவருகின்றது.

இப்படிப்பட்ட நம்முடைய தோப்புக் கரணத்தை அமெரிக்கா எடுத்து அதை ஆராய்ச்சி செய்கின்றது என்றால் ஆச்சரியமாகவே இருக்கிறதல்லவா? ஆம்! அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சலைச் சேர்ந்த மருத்துவர் எரிக் ராபின்ஸ் இந்தப் பயிற்சியின்மூலம் மூளையின் செல்களும் நியூரோன்களும் சக்தி பெறுகின்றன என்றார். அவர் தன்னிடம் வருகின்ற நோயாளிகளுக்கு தோப்புக்கரணத்தைத்தான் சிபாரிசு செய்வதாகக் கூறுகின்றார். பரீட்சைகளில் மிகக் குறைந்த மதிப்பெண்களை எடுக்கும் ஒரு மாணவன் தோப்புக் கரண பயிற்சியை சில நாட்கள் தொடர்ந்து செய்தபின் மிக நல்ல மதிப்பெண்களை வாங்குவதாகக் கூறுகிறார்.

யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரான டாக்டர் யூஜினியஸ் அங் என்பவர் காதுகளைப் பிடித்துக் கொள்வது மிக முக்கிய அக்குபஞ்சர் புள்ளிகளை தூண்டிவிடுவதாக கூறுகிறார். இதனால் மூளையின் நரம்புமண்டல வழிகளில் மிகவும் சக்திவாய்ந்த மாற்றங்கள் ஏற்படுவதாகக் கூறுகின்றார். மூளையின் செயல்திறனுக்குக் காரணமானவை நியூரோன் செல்களே ஆகும். இதற்குச் சிறந்த ஒரு எடுத்துக்காட்டாக உலகின் தலைசிறந்த விஞ்ஞானி ஐன்ஸ்ரீனின் வரலாறு காண்பிக்கிறது. அவர் அபரிமிதமான பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி உள்ளார். அவர் இறந்தபின் அவரது மூளையை ஆராய்ச்சி செய்தபோதுதான் சாதாரண மனிதனின் மூளையைவிட ஐன்ஸ்ரீனின் மூளையில் 17 சதவீதம் நியூரோன் செல்கள் அதிகமாக இருந்திருக்கின்றன என்பது தெரிந்தது. அதனால்த்தான் அவர் அவ்வளவு புத்தி ஜீவியாக இருந்திருக்கிறார். தோப்புக்கரணம் போடுவதால் ஏற்படும் மாற்றங்களை ஈ.சி.ஜி கருவியால் டாக்டர் யுஜினியஸ்அங் அளந்து காண்பித்தார். இதன்போது மூளையின் நியூரோன் செல்களின் செயற்பாடுகள் அதிகரிப்பதைக் கண்டுள்ளார். இதனால் ஒவ்வொரு மனிதனும் தமது துறைகளில் புத்திஜீவிகள் ஆகலாம். இடது கையால் வலது காதையும் வலது கையால் இடது காதையும் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு உட்கார்ந்து எழுகையில் மூளையின் சகல பகுதிகளும் பலமடைகின்றன. மேலும் இதன்மூலம் இன்றைய காலகட்டத்தில் அதிகரித்து வருகின்ற ஆட்டிசம், அல்சைமர் போன்ற நோய்களை குறைக்கின்றன என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பராணிக் சிகிச்சை நிபுணர் கோ சோக் சூயி தன்னுடைய Super brain yoga என்ற புத்தகத்தில் தோப்புக்கரணத்தைப் பற்றியும் அதன் பலன்களையும் கூறியுள்ளார்.

தினந்தோறும் மூன்று நிமிடங்கள் இந்தப் பயிற்சியை செய்தாலே நமது மூளையின் நியூரோன் செல்கள் மற்றும் மூளையின் நரம்பு மண்டலப் பகுதிகள் சக்தியைப் பெற்று நம்மை அறிவாளியாக்கும். சரியான முறையில் இதனை எவ்வாறு செய்வது என நோக்குவோம்.

உங்கள் கால்களை உங்களின் தோள்களின் அகலத்திற்கு அகட்டி வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பாதங்கள் நேராக நிற்கட்டும். வலது காதை இடது கையின் பெருவிரலாலும் ஆட்காட்டி விரலாலும் பிடித்துக் கொள்ளுங்கள். இடது காதை வலது கையின் பெருவிரலாலும் ஆட்காட்டி விரலாலும் பிடித்துக் கொள்ளும்போது இடது கை உட்புறமாகவும் வலது கை வெளிப்புறமாகவும் இருக்கவேண்டும் என்பது மிக முக்கியம். மூச்சை நன்றாக வெளிவிட்டபடி உட்கார்ந்து மூச்சை நன்றாக உள் இழுத்தபடி எழுந்து நில்லுங்கள். மூச்சும் உட்கார்ந்து எழுவதும் ஒரு தாளலயத்துடன் இருக்கட்டும்.

புதிதாகத் தொடங்குபவர்கள் ஒரு நிமிடம், இரண்டு நிமிடம், மூன்று நிமிடம் என்று படிப்படியாக அதிகரித்துச் செல்லலாம்.

இன்று அறிவியலாளர்கள் கண்டு பிடித்து கூறுவதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் கண்டு பிடித்து எமக்காக விட்டுச் சென்றுள்ளனர். அவற்றை சிறப்பாகக் கடைப்பிடிப்பதாலே எம்முடைய வாழ்க்கை சிறப்பாக விளங்கும்.

## உண்மையான துறவு யாது?

ஒரு அன்பர் கேட்டார் "எல்லாவற்றையும் துறந்தால்தான் ஞானம் வரும் என்று சொல்கின்றார்களே" என்றார். சரி துறந்துவிட்டால், எங்கே போவீர்கள் என்று கேட்டேன். பதில் இல்லை. இந்த உலகத்தின் மேல்தான் இருக்கப் போகின்றீர்கள். பசி எடுத்தால் என்ன செய்யப்போகிறீர்கள்? உணவைத்தானே நாட வேண்டும்? அப்படியென்றால் எதைத் துறந்ததாக அர்த்தம்? இருக்கின்ற இல்லத்தைவிட்டு இன்னொரு வீட்டுக்கோ விடுதிக்கோ சென்றால் என்ன மாற்றம்? இங்கு அதிகாரத்தோடு உணவு கேட்டதைவிட்டு அங்கு பிறர் தயவை நாடிக் கையேந்தி வாங்கவேண்டியதுதானே தவிர வேறு என்ன விளையும்? துறவு என்றால் அது அன்று. அளவு முறை அறிந்து ஒழுகும்போது துறவு தானாக அமைந்துவிடும்.

சாப்பிட்டுக்கொண்டே இருக்கின்றீர்கள், உணவு சுவையாக இருக்கிறது. ஆனால், உங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் இதுவரைக்கும் தான் உங்களால் ஜீரணிக்கச் செய்ய முடியும் என்று நன்றாகத் தெரிகிறது. அதைத் தெரிந்துகொண்டு இனிமேல் வேண்டாம் என்று சொல்லிவிட்டு அங்கேயே அதோடு நிறுத்தக்கூடிய அறிவும், செயலும் வந்துவிட்டன என்றால் அதாவது அறிந்த அறிவுக்கு செயல் ஒன்றுபட்டால் அதுதான் துறவு. "அடுப்பிலே சாதம் வைக்கின்றீர்கள், அல்லது சமையல் செய்கின்றீர்கள், வெந்துபோன பிறகு ஏன் இறக்குகின்றீர்கள்?" என்று கேட்டேன். "சட்டியில் உள்ளது அடிப்பிடித்துவிடும்". வேக வைக்கின்றவரை உறவு. இறக்குவது துறவு. இதற்குமேல் போனால் கெட்டுவிடும் எனத் தெரியும்போது உடனே விடுதலை செய்துவிட வேண்டும். அளவோடு வைத்துக்கொள்ள வேண்டும். அளவு, அனுபவிக்கக்கூடிய முறை இந்த இரண்டும் தெரிந்தால் அதுதான் துறவு.

*முடியாது என்பதைப் பிறகு சிந்தியுங்கள். எப்படி முடிப்பது என்பதை எப்பொழுதும் சிந்தியுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் கவிகள்

– இரா. செல்வவடிவேல் அவர்கள் –

தமிழில் ஆயிரம் ஆயிரம் புலவர்கள் சங்க காலத்திலும், இடைக் காலத்திலும், பிற்காலத்திலும் இருந்தார்கள். இப் புலவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்கவிகள்தான். பெண் கவிகளும் சிலர் வாழ்ந்திருக்கிறார்கள், பெரும் சாதனை செய்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் இலக்கிய உலகில் பெண் கவிகள் அதிகளவில் பேசப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

பல காலமாக பல விடயங்களை எழுதிக்கொண்டிருக்கும் என் மனதில் பெண் கவிகளைப் பற்றி எழுத வேண்டும் எனும் எண்ணம் உதித்ததன் விளைவாகத் "தமிழ்ப் பெண் கவிகள்" எனும் தலைப்பில் பத்துக்கும் மேற்பட்ட பெண் கவிகள் பற்றி எழுத விளைகிறேன்.

## 01) தமிழ் மூதாட்டி ஔவையார்

ஒரு தேசத்து நாகரிகத்துக்கு அந்த அந்தத் தேசத்தின் இலக்கியமே அடையாளமாகும். ஆங்கில நாகரிகத்துக்கு ஷேக்ஸ்பியர் முதலிய மகாகவியின் நூல்களே அளவுக் கருவியாகக் கருதப்படுகிறது. "நாங்கள் இந்திய தேசத்து இராஜ்ஜிய அதிகாரத்தை இழக்க ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்வோமே தவிர ஷேக்ஸ்பியரை இழக்க பெரும்பாலும் உடன்படமாட்டோம்" என்று மெக்காலே என்ற ஆங்கில அறிஞர் சொல்கிறார். இம்மாதிரியாகப் பெருமை படைத்த நம்மவர் கம்பனைச் சொல்லலாம், வள்ளுவரைச் சொல்லலாம், இளங்கோ வைக் கூறலாம். இன்னும் பல புலவர்களையும் காட்டலாம். எனினும் கம்பர், திருவள்ளுவர் முதலிய பெரும் புலவர்களினால் போற்றப்பட்ட ஔவைப் பிராட்டியை முதலில் எடுத்துக் கொள்கிறேன்.

"தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்கள் எல்லாவற்றையும் இழந்துவிட விரும்புகிறாயா? அல்லது ஔவையாரின் நூல்களை இழந்துவிட விரும்புகிறாயா?" என்று யாரேனும் நம்மிடம் கேட்பார்களானால் மற்றச் செல்வங்களை பறிகொடுக்க நேர்ந்தாலும் பரவாயில்லை அவற்றை தமிழன் மீண்டும் புதுப்பித்துக்கொள்வான். ஆனால் ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க சம்மதிக்கமாட்டான். அது மீண்டும் உருவாக்க முடியாத தனிப்பெரும் செல்வம் என்று விடை கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ்நாட்டு நாகரிகத்திற்கு பெரும் செல்வமாகவும், தனிப் பேரடையாளமாகவும் தமிழ் மாது ஒருத்தியின் நூல்கள் விளங்குவது நமக்குப் பெருமகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

ஔவையார் உலகம் முழுவதும் கண்டு உவக்கத்தக்க நீதிநூல்களை உருவாக்கியவர். அவர் மகிமை பொருந்திய ஆத்மஞானி. அவர் சிறந்த யோக சித்தியால் நெடுகாலம் வாழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையாரின் பிறப்பு என்பதும் பல கதைகளை உள்ளடக்கியதாகும். ஔவையாரின் பெற்றோர், குலம், பிறப்பிடம் என்பவை தெளிவாக இல்லை. இவை தேவையற்றவையும்கூட. ஆனால் ஔவையார் கோவில் தஞ்சை மாவட்டம் திருத்தருப்பூண்டியில் வளவனாற்றங்கரையில் துளசியார் பட்டினம் எனும் ஊரில் உள்ளது.

ஔவையார் விநாயகப் பெருமானைத் தம் குருவாகக் கொண்டு குண்டலினி யோகத்தில் ஆழ்ந்து பெருவாழ்வு வாழ்ந்த ஒரு சித்தர் என்பது உறுதியாகிறது.

ஔவையார் ஓர் ஒப்பற்ற குண்டலினி யோகியார். சிறந்த இராஜயோகி. அவர் காட்டும் மரணமில்லாப் பெருவாழ்வு நெறி இராஜயோக நெறியே. அந்நெறியைக் காண்போம். இறைவனை அடைவதுதான் உயிரினங்களின் - சிறப்பாக மனிதப் பிறவியின் இறுதிநிலை அதுதான் மரணமில்லாப் பெருவாழ்வு. இறைவனை அடைந்துவிட்டால், அல்லது தானே இறையாம் தன்மையை - ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றிக் கலந்துவிடும் நிலையைப் பெற்றுவிட்டால் அதுதான் மரணமில்லாப் பெருவாழ்வு.

மரணமில்லாப் பெருவாழ்வு நிலையை அடைவதற்கு பல வழிகள் - முறைகள் உள்ளன. அவற்றை யோக நெறிகள் எனக் கொள்ளலாம். யோகம் என்றால் ஒன்று சேர்த்தல். அதாவது மனிதனின் ஆன்மாவைப் பரமாத்மாவாகிய இறைவனுடன் ஒன்று சேர்ப்பதே யோகம். அது நான்கு வகைப்படும். ஞானயோகம், பக்தி யோகம், கர்ம யோகம் என்னும் நெறிகளோடு, மனத்தை முழுமையாக அடக்கியாளும் நெறியாகிய இராஜ யோகத்தையும் சேர்த்து யோகங்கள் நான்காகும். அவை ஒவ்வொன்றையும் பற்றியும் சுருக்கமாக எடுத்துக் கொள்வோம்.

## 01) ஞான யோகம்

நான் என்பது உடலன்று; பிராணன் அன்று; மனம் அன்று; ஆகமங்களுமன்று. உண்மை அறிவு இன்பமயமான அழிவற்ற ஆன்மாவே என்னும் உண்மையை குரு வாயிலாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதலாம். விழிப்பு, கனவு, உறக்கம் எனும் மூன்று நிலைகளிலும் ஒருபடித்தாய சாட்சியாய் இருப்பது ஆன்மாவே. அது ஒன்றே மெய். ஏனைய யாவும் மித்தை. இதனையுணர விவேகமும், வைராக்கியமும், முத்தியில் பேரவாவும் இன்றியமையாதன.

## 02) பக்தி யோகம்

உலகப் பொருள்மீதும், உறவினர் மீதும் எழும் அன்பை இறைவன்மீது ஒருமுகமாகத் திருப்புதலே, அழிவற்ற அழகு, அன்பு, இனிமை, இன்பம் இவற்றுக்கு இறைவனே உறைவிடம் என்பதை உணர்தல் அவசியம்.

இறைவன்மீது உண்மையாகவே அன்பு எழவேண்டுமாயின் அவனது பெருமையைக் கேட்டல், குணங்களைச் சிந்தித்தல், நாமம் சொல்லல், நினைத்தல், வழிபடல் முதலிய விதிகளைப் பின்பற்ற வேண்டும். அதன் பயனைப் பின்னர் இடையறாது இறைவன்மீது செலுத்தும் அன்பு உதிக்கும். அது முற்றிவரும்போது இறைவனைக் காண்பான். பின்னர் இறைவன் எவ்வுயிரிலும், எப்பொருளிலும் அனைத்தையும் இறைவனிடத்தில் காண்பான். இறைவனைக் குறி வாயிலாகவும் திருவுரு வாயிலாகவும் வழிபடலாம். இறைவனுக்கு அடிமையாகவோ, தோழனாகவோ, குழந்தையாகவோ, காதலியாகவோ தன்னைப் பாவித்து அன்பு செய்தல் பக்தியை விரைவில் வளர்க்கும்.

*செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 03) கர்ம யோகம்

வாழ்க்கைக்குரிய சூழ்நிலையிலே நம் கடமைகளைப் பற்றின்றி இயற்றுவதன்மூலம் சாந்தி அடைவதே. கடமையைச் செய்யும்போது விளையும் பயன்களாகிய இன்ப துன்பங்கள், இலாப நட்டங்கள், வெற்றி தோல்விகள் என்பவற்றில் சமநிலை எய்தல் முதற்படி. இயற்றவேண்டிய கருமங்களில் விருப்பு வெறுப்பற்ற சமநிலை எய்தல் இரண்டாம்படி. கருமங்களைச் செய்தல் செய்யாமை என்னும் இரண்டிலும் சமநிலை எய்தல் மூன்றாம்படி. இந்நெறியைப் பழகுவதனால் மனம் உள்முகப்பட்டு யான் கருத்தா. யான் அனுபவிப்பவன் என்னும் நினைவு ஒழிந்து அமைதியை நிலையாக எய்துகின்றது.

### 04) இராஜயோகம்

சித்தத்தில் எழும் விருத்திகளை முற்றும் அடக்குதல். மனம் அழுக்கும் சலனமும் அற்று இருப்பின் அதன் அடியிலுள்ள ஆன்ம சொருபம் தானே விளங்கும். அந்த அழுக்கை நீக்கும் பொருட்டு, இயமமும் நியமமும் ஆசனமும், பிராணாயாமமும் பழக்கப்படும்.

இந்த இராஜயோக நெறிதான் ஔவையார் பின்பற்றிய நெறியாகும். ஔவையார் கண்ட மரணமில்லாப் பெருவாழ்வு நெறி பற்றி சற்று விளக்கமாக அறிந்து கொள்வோம்.

இந்த இராஜயோகம் எட்டுப் படிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

*1. இயமம்:*

கொல்லாமை, வாய்மை, களவாடாமை, நெறி தவறாமை, எந்த ஒரு கொடையையும் பெற்றுக்கொள்ளாமை.

*2. நியமம்:*

தூய்மை, உள்ளதைக் கொண்டு மன நிறைவு கொள்ளுதல், தவநெறியில் நிற்றல், கற்றல், கடவுளிடம் சரண்புகுதல், உடலைப் பாதுகாத்தல், தினமும் குளித்தல் ஒழுங்கான உணவு முதலியவை அடங்கும்.

***3. ஆசனம் (இருக்கை) உடலை அமர்த்தும் நிலை:***

இடுப்பும் தோள்களும் தலையும் நேராக நிறுத்தப்பட வேண்டும். முதுகு நிமிர்ந்து இருக்க வேண்டும்.

*4. பிராணாயாமம்:*

பிராணனைக் கட்டுப்படுத்தல், மூச்சை அடக்குதல், பிராணன் என்னும் உயிர்ச்சக்தியை அடக்குதல்.

*5. பிரத்தியாகாரம்:*

புலன் ஒழுக்கம், மனதை உள்முகமாகத் திருப்பி வெளியில் செல்லாமல் அதைத் தடுத்தல்.

*6. தாரணை:*

மனத்தை ஓரிடத்தில் நிறுத்துதல், ஒரு பொருளின்மீது மனத்தைக் குவித்து ஒருமுகப்படுதல்.

*7. தியானம்:*

ஆழ்ந்து சிந்தித்தல்; இடையறாத சிந்தனை.

*பலவற்றைக் கேளுங்கள். ஒருசிலவற்றை மட்டும் பேசுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*8. சமாதி:*

மெய் மறந்த உயர் நினைவு நிலை.

இராஜயோகமாகிய குண்டலினி யோகத்திற்கு மிகமிக முக்கியமானது பிராணாயாமப் பயிற்சி. அதனை சிறிது விளக்கமாகக் காண்போம்.

**பிராணாயாமம்:**

பிராணன் + ஆயாமம். ஆயாமம் என்றால் அடக்குதல் அல்லது கட்டுப்படுத்தல் என்பது பொருள். "பிராணன்" என்பது உடலில் உள்ள சக்தி. அந்தப் பிராணசக்தியை அடக்கியாள்வதே பிராணாயாமம். உடலில் செயல்புரியும் இயக்கமாகத் தோன்றுவதும், நாடி ஓட்டமாகத் தோன்றுவதும் எண்ணச் சக்தியாகத் தோன்றுவதும் பிராணனே.

சுவாசப்பைகளை இயக்குகின்ற தசைகளை அடக்கியாள்வது, சுவாசப்பைகளின் செயலைக் கட்டுப்படுத்துவதுதான் நரம்புகள் மூலமாகத் தசைகளுக்குச் சென்று அங்கிருந்து சுவாசப்பைகளுக்குச் சென்று அவற்றை ஒரே வகையில் அசையச் செய்யும் சக்தியே பிராணன்.

பிராணாயாமப் பயிற்சி பிராணனைக் கட்டுப்படுத்துவது. இதனால் பிராணன் கட்டுப் படுத்தப்பட்ட பின்னர் உடலில் உள்ள மற்றச் செயல்களும் மெல்ல மெல்ல கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடுகின்றன.

சுவாசத்தைப் படிப்படியாக ஒழுங்குபடுத்துவன்மூலம் நாடி நரம்புகளையும் எண்ணங் களையும் பிராணனையும் ஒழுங்குபடுத்தி, அதன் பயனாய் மனிதன், முத்தி அல்லது வீடுபேறு அல்லது விடுதலை பெறலாம். அதுதான் மரணமில்லாப் பெருவாழ்வு.

இனிப் பயிற்சி முறையையும், ஔவையார் குறிப்பிடும் பயிற்சி முறையையும் காணலாம்.

வசதியான ஆசனத்தில், தூய காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ள இடத்தில் மார்பு, கழுத்து, தலை இவை நேர்கோட்டில் இருக்குமாறு நிமிர்ந்து உட்கார வேண்டும். அளவான மூச்சை இழுத்து வெளியே விடக் கற்றுக்கொள்வதுதான் முதற் பாடம். இது உடலை வசப்படுத்தும். "ஓம்" அல்லது பிற மந்திரங்களை உடன் சொல்லிக்கொள்ள வேண்டும். இதில்,

*1. பூரகம்:*

மூச்சை மூக்குத் துவாரத்தின் வழி உள்ளிழுத்தல்.

*2. இரேசகம்:*

மூச்சை வெளியே விடல்.

*3. கும்பகம்:*

உள்ளிழுத்த மூச்சை அடக்குதல்.

பூரகம் 16 மாத்திரைநேர அளவும், கும்பகம் 64 மாத்திரை நேர அளவும், இரேசகம் 32 மாத்திரை நேர அளவும் இருத்தல் வேண்டும் என்பது ஔவையாரின் கூற்று.

"இரேசக முப்பத்தி ரண்டது மாத்திரை
பூரகம்பத் தாறுபுகும்"

(ஔவைக் குறள் 254)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கும்பகம் நாலோ(டு) அறுபது மாத்திரை
தம்பித் திருவது தான்"

(ஔவைக் குறள் 255)

இந்த பூரசு, கும்பசு, இரேசங்களை எப்படிச் செய்தல் வேண்டும் என்பதையும் அறிதல் வேண்டும்.

முதலில் வலக்கைப் பெருவிரலால் வலது நாசித்துளையை மூடிக்கொண்டு 16 மாத்திரை அளவு மூச்சை இடது நாசி வழியாக உள் இழுக்க வேண்டும். பின்னர் இரு நாசித்துளைகளையும் விரல்களால் அழுத்தி மூடிக்கொண்டு 64 மாத்திரையளவு கும்பகம் (மூச்சையடக்கல்) செய்ய வேண்டும். பிறகு வலது நாசியை மூடியிருந்த பெருவிரலில் அகற்றி அதன் வழியே 32 மாத்திரையளவு மூச்சை வெளியேவிடல் வேண்டும். அதன்பின் வலது நாசி வழியே 16 மாத்திரையளவு மூச்சை இழுத்து 64 மாத்திரையளவு கும்பகம் செய்து (இரு நாசிகளையும் அடைத்து) பின் இடது நாசி விரலையகற்றி 32 மாத்திரையளவு அதன்வழி மூச்சை வெளியிடல் வேண்டும். இம்முறைபற்றி ஔவையார்

"இடைபிங் கலைகள் இரேசகம் மாற்றி
அடையும் அரனார் அருள்"

(ஔவைக் குறள் 42)

"அங்குலியால் மூடி முறையாய் இரேசிக்கில்
பொங்குறும் பூரகத்தினுள்"

(ஔவைக் குறள் 43)

"கும்பத்தினுள்ளே குறித்தரனைத் தானோக்கில்
தும்பிபோல் நிற்கும் தொடர்பு"

(ஔவைக் குறள் 47)

"இரேசக பூரக கும்பக மாற்றில்
தராசு போல் நிற்கும் தலை"

(ஔவைக் குறள் 48)

என்று பாடுகிறார்.

இங்கே இடை, பிங்கலை என்பன முறையே இடப்பக்கத்தையும் வலப்பக்கத்தையும் குறிக்கும். அங்குலி என்பது பெரு விரலைக் குறிக்கும். இப் பயிற்சியின்போது வலச் செவியால் தும்பியின் ரீங்காரம், மணியோசை, அலையோசை மேக இடி போன்ற சில ஓசைகள் உண்டாகக்கூடும் என்பதைத் "தும்பிபோல் நிற்கும் தொடர்ந்து" என்னும் அடி குறிப்பிடுகிறது.

"தயாவினில் வாயு வலத்தில் இயங்கின்
தியான சமாதிகள் செய்"

(ஔவைக் குறள் 259)

அதாவது வலப்பக்க நாசியில் (பிங்கலை- சூரிய கலை) வாயு செல்லும்போது தியான சமாதிகளைப் பழகலாம் என்பதாம்.

*பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டிய காரியம் தட்டிக்கொடுப்பது மட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைகலை, பிங்கலைகளில் வாயு சமமாக இயங்கும்போது தியான, சமாதிகள் நன்கு கைகூடும் என்பதும் அறியத்தக்கது.

ஒளவையாரின் கருத்துக்களை ஒட்டியே திருமூலரும் பின்வருமாறு கூறுவது குறிப்பிடத்தக்கது.

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிழக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்குங் குறியது வாமே"

(திருமந்திரம்)

"பிராணன் மனத்தொடும் பேராது அடங்கிப்
பிராணன் இருக்கின் பிறப் பிறப்பில்லை"

(திருமந்திரம்)

"ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத்திரண்டதி ரேசகம்"

(திருமந்திரம்)

காற்றைப் பிடித்தல் என்பது பிராணாயாமத்தின் பயனாகிய பிராணனைக் கட்டுப் படுத்தலைக் குறிக்கிறது. மனமும் பிராணனும் இணையுமானால் மோட்ச சித்தியுண்டாகும். மரணமில்லை, மரணமில்லாப் பெருவாழ்வு அதுவே. இப் பொருளையே மேலிரண்டு பாடல்களும் உணர்த்துகின்றன. அடுத்த பாடல் ஒளவையார் கூறும் பூரகம் 16 மாத்திரை, கும்பகம் 64 மாத்திரை, இரேசகம் 32 மாத்திரை என்னும் கருத்தையே உறுதிப்படுத்துகிறது.

ஒளவையார் பாடிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, வாக்குண்டாம் (மூதுரை) ஆகியவை தவிர தனிப்பாடல் திரட்டு, தனிச்செய்யுள் சிந்தாமணி, சில உரை நூல்களும் உண்டு ஒளவைக் குறள் என்பது தனித்துவமானது. ஆத்திசூடி போன்றவை சிறுவர்களுக்கான நீதிக் கருத்துக்களை எளிதில் விளக்கும்படியாக பாடப்பெற்றவை. ஒளவைக்குறள் அப்படியான தல்ல. தமிழ் அறிவு இன்றி அதன் பொருளை அறிந்துகொள்வது கடினம். ஒளவைக்குறள் தொடர்பாக எழுதப்பட்டவையும் (பின்னாளில்) குறைவாகவே உள்ளது. ஆனால் மிக ஆழமான கருத்துக்களை உடையது என்பதனைக் காட்டுவதற்கு சில உதாரணங்களைக் காட்டியுள்ளேன். ஒளவை பாடியதாக 59 சங்கப் பாடல்கள் உண்டு. அகநானூற்றில் நான்கும், புறநானூற்றில் முப்பத்துமூன்றும், குறுந்தொகையில் பதினைந்தும், நற்றிணையில் ஏழும் ஆக ஐம்பத்தொன்பது பாடல்கள் உண்டு. இவற்றுள் பல இடைச் செருகல்கள் என்பதில் ஐயமில்லை.

அடுத்து ஒளவையார் மரணமில்லாப் பெருவாழ்வு வாழப் பின்பற்றிய குண்டலினி நெறியைச் சற்றுப் புரிந்துகொள்வோம். (தொடரும்...

---

ஊசியின் காதில் நூலைக் கோக்கும்போது நூலின் முனை கொஞ்சம் பிரிந்திருந் தாலும், கோக்க முடியாது. அதுபோல், ஒருவனிடம் உலக ஆசை சிறிது இருந்தாலும்கூட அவன் முக்தி அடைய முடியாது. மனம் உலக ஆசைகளால் அலைக்கழிக்கப்படாமல் தூய்மையாக இருந்தால்த்தான் ஒருவன் பரம்பொருளை அறியமுடியும்.

*உன் மனச்சாட்சிதான் உனக்கு ஆசான். அதைவிட வேறு ஆசானில்லை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணப்பித்தர் வேலாயுதர் விநாசித்தம்பி

– **திரு ச. லலீசன்** அவர்கள் –

சைவ ஆலயங்களை மையப்படுத்திய புராணபடனச் செயன்முறை ஒரு காலத்தில் புராணப்படிப்பு என்றே அழைக்கப்பட்டது. கிராமத்தில் பெண் கல்வியை ஊட்டும் மார்க்க மாகவும் இந்தச் செயன்முறை விளங்கியது.



ஈழத்தில் புராணபடனச் செயற்பாட்டிற்கு பங்களிப்பு வழங்கியமையில் தென்மராட்சி மண்ணுக் குச் சிறப்பிடம் உண்டு. கந்தபுராணம் தட்ச காண்டத் திற்கான உரையே கந்தபுராணத்திற்கு வெளிவந்த மிகச் சிறந்த உரையாக அறிவுலகோர் கொள்வர். அந்த உரையை வகுத்தவர் மட்டுவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆவார்.

தென்மராட்சி மிருசுவில் வடக்கில் பௌரா ணிக பாரம்பரியத்தில் விளங்கிய வேலாயுதர் விநாசித் தம்பி அவர்கள் கடந்த 24.09.2021 அன்று தனது வயது முதுமை காரணமாகத் தனது 78ஆவது வய தில் காலமானார்.

சுன்னாகம் வரதபண்டிதரின் ஏகாதசிப் புராணம் முழுமைக்கும் உரையெழுதிய சிறப்பு இவருக்கு உண்டு. இந்நூல் தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் வெளியிடப்படவுள்ளதாகக் குடும்பத்தினர் குறிப்பிட்டனர். இதைவிட கந்தபுராணத் தில் உள்ள 10345 பாடல்களுக்கும் தானே உரை எழுதி யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அச்சகம் ஒன்றில் பதிப்பாக்கம் செய்ய ஒப்படைத்துள்ளார் என்றும் அவரது இலட்சிய முயற்சியின் இறுதித் தருணத்தில் அவரது உயிர் பிரிந்துள்ளதாகவும் அவரது அன்பர்கள் வேதனைகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என அடையாளப்படுத்துவார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கந்தபுராணத்தைப் படிப்பதிலும் சரி அதற்கு உரை வகுப்பதிலும் சரி ஏன் அதனை வாழ்வியலாகக் கொள்வதிலும் சரி யாழ்ப்பாணத்தவர்கள் தனித்துவம் மிக்கவர்களாக விளங்கினர். கந்தபுராணம் முழுமைக்கும் உரை வகுத்த நல்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் உரை நூலே அச்சில் வெளிவந்துள்ள கந்தபுராணம் முழுவதற்குமான ஒரே உரை நூலாகக் கொள்ளப்படும் நிலையில் மிருசுவில் புராணப் பித்தரின் உரை நூலும் வெளிவருமாயின் கந்தபுராணத்திற்கு இன்னுமோர் மகுடம் சூட்டப்படும் என எதிர்பார்க்கலாம்.

புராணபடனம் செய்வதில் ஆற்றலாளராக விளங்கிய இவர் செல்வச்சந்நிதி, நீர்வேலி கந்தசுவாமி ஆலயம் உள்ளிட்ட முக்கிய ஆலயங்கள் பலவற்றில் புராணபடன உரையாளராக விளங்கினார்.

மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவராகிய இவர் சாதாரண தரம் வரை கல்வி கற்று கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் முகாமையாளராகப் பணியாற்றினார். குடும்ப வழி வந்த குருகுலக் கல்விமூலம் புராண படனம் செய்யும் ஆற்றலைப் பெற்று அதனை ஆன்மீகச் செல்வர்களை வழிப்படுத்தும் உபாயமாகக் கையாண்டார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலாபூஷணம், யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையால் பௌராணிக வித்தகர், சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் சிவனருட் செல்வர், தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் கலைச்சாகரம் முதலிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையில் இவரது சமயக் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன.

கைகளில் எந்தவித உதவிக் குறிப்புகளும் இல்லாது பண்டைய புராண நூல்களுக்கு உரை வழங்கும் இவரது ஆர்வமும் திறமையும் பாராட்டப்பட வேண்டியதே. அவரது கனவு முயற்சியாகிய கந்தபுராணம் முழுமைக்குமான உரை நூல் விரைவில் வெளிவர இறையருள் கைகூட வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

---

## நீர் குமிழ்!

*சோகத்தை உதறிவிட்டு சிரித்துப் பேச நேரத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ளுங்கள். எம் வாழ்க்கை நிரந்தரமானதன்று. இருக்கும்வரை சமரச நிலைமைகளை உருவாக்கி வாழ முயற்சிக்க வேண்டும்.*

*வாழ்க்கை என்பது ஒரு நீர்க்குமிழி போன்றது. உடனுக்குடன் அழிவைநோக்கி பயணம் செய்யும் குணத்தைக் கொண்டது. அதனால் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட இன்பம், துன்பம், ஏற்றத்தாழ்வு என்பவற்றை எதிர்நோக்கி எதிர்நீச்சல் போட முயல வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு பின்வாங்காது அதற்குத் தீர்வைக் காண வேண்டும்.*

*இறைவனை வணங்குவதற்காக தோட்டத்து மலர்களைப் பறித்து அவற்றை அழகாக ஒழுங்கு செய்து பூசைக்கு வைக்கிறோம் அல்லவா? அப் பூத்தட்டை காண்பவர்கள் எவ்வளவு பரவசமடைகிறார்கள். ஆனால் பூவைக் கொடுத்த செடி அழுது புலம்புவதில்லையே! அது மீண்டும் மீண்டும் மலர்களைக் கொடுத்தவண்ணமே இருக்கிறது. அதனிடம் சுயநலம் இல்லை. இக்குணம் மானிட வர்க்கத்திடமும் காணப்பட வேண்டும். நாம் எப்போதும் நல்லதையே நினைத்து வாழ்ந்தால் இருக்கும் காலம் மகிழ்ச்சியாக கழிக்க வழிபிறக்கும்.*

*அன்பின் வலிமை வெறுப்பின் வலிமையைவிட மிகப்பெரியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடைமை

அன்பறி வாற்றலிம் மூன்றும் பண்பும்
இன்சொலு முயர்வைத் தரும்.

அடக்கம் அறிவுடைமை ஆன்றோர்க் கன்புடைமை
கொடுக்கும் குணமறிந்து கொள்.

இன்சொற்கள் பேசி இறைநாமஞ் செபிப்போரைப்
பின்பற்று பெறுநல் மனம்.

சினம் மறந்து அன்பைச் சிந்தித்து வாழ்வீரேல்
மனம் நிறைவு காணும் மகிழ்.

தற்புக ழுமின்றித் தன்னலமுங் கருதாது
அற்பனிலா தன்பா யிரு.

ஆசையிலா தன்பை யாரும் மதித் தொழுகின்
நாசமிரா தெதிலும் நலம்.

காதலெனு மன்பிற் கட்டுண்டோ ரவ்வன்பைத்
தீதிதென்று ஏற்கார் துணிந்து.

மனஞ் சுத்தமாக மாசற்ற நல்லன்பாற்
தினஞ் செய்வா யுயர்நல் லறம்.

தாயின தன்பிற் கிணையாயோ ரன்பை
நீயுலகிற் காண்ப தரிது.

அன்பே சிவமென்ற ரருட்சித்தர் திருமூலர்
உன்பாற்கா ணுள்ளே யிறை.

– ஆ. விநாயகமூர்த்தி –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/146/NEWS/2021

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org